ஓம்
தத்ஸத்ப்ரஹ்மணே நம:

ஸ்ரீ விருத்தி ரத்நாவலி.



இஃது

தஞ்சைமாநகரம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ ப்ரஹ்மநிஷ்ட பண்டித

பிரம ஸ்ரீ ப்ரஹ்மாநந்த சுவாமிகளால்

மொழிபெயர்க்கப்பட்டு

தஞ்சை

ஸ்ரீ சங்கரவிலாச சாரதாமந்திர பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம் பதிப்பு

1944

சுபாநு வருஷம்

விலை] [ரூ. 1—0—0

உ

ஓம் கணேசாயநம:

ஸ்ரீ விருத்திரத்நாவலி என்னும் விருத்திப்பிரபாகரத்தின் சாரம்.

௧. முதல் ரத்நம்.

காரணத்தோடும் பேதத்தோடும் விருத்தியின் சொரூபத்தை நிரூபித்தல்.

௧-௨௪.

மங்கலம்.

சாக்கிர மாதி யாகச் சாற்றுமூன் றவத்தை கட்கும்
சாக்கினான் பரனே யென்னச் சாதமா யறியி னிந்த
வீக்கிய வுடல்யா னென்றே வெவ்விடர் தன்னை யீயும்
போக்குதற் கரிய மானம் போகுந்தன் மூலத் தோடே.

௧. விருத்தியினது சாமானிய லக்ஷணத்தை நிர்ணயித்தல். ௧-௯.

௧. "யான் பிரஹ்மம்" என்னும் விருத்தியினால் காரியத்தோடுகூடிய அஞ்ஞானத்தின் நிவிருத்தியும் பரமாநந்தத்தின் பிராப்தியும் உண்டாமென்பது வேதாந்தத்தின் சித்தாந்தம்.

உ. ஆண்டு விருத்தியாது? விருத்தியின் காரணம் யாது? விருத்தியின் பயன்யாது? என்றறிதல் வேட்கை யுண்டாக, அதன்பொருட்டு விருத்திப்பிரபாகரத்தின் சாராம்ச வடிவினதாகிய விருத்திரத்நாவலி யென்னும் நூல் எழுதப்படுகின்றது.

ங. அந்தக்கரணத்தின் பரிணுமமும் அஞ்ஞானத்தின் பரிணுமமும் விருத்தி யெனப்படும். குரோதம் சுகமுதலியன அந்தக்கரணத்தின் பரிணுமமும் ஆகாய முதலியன அஞ்ஞானத்தின் பரிணுமமுமாம். அவற்றை விருத்தியென்பதில்லை. அங்ஙனமாயினும், விஷயத்தை விளக்கும் அந்தக்கரண அஞ்ஞானங்களின் பரிணுமம் எவையோ அவை விருத்தி யெனப்படும்.

ச. குரோதம் சுகமுதலிய வடிவினவாகிய அந்தக்கரண பரிணுமங்கள் எவையோ, அவற்றுல் எப்பதார்த்தத்தின் பிரகாச (விளக்க) மும் உண்டாகிறதில்லை. அங்ஙனமே ஆகாய முதலியவற்றுனும் பிரகாசமுண்டாகிறதில்லை. ஆதலால் அவை விருத்தியன்று. ஆனுல் ஞானவடிவ பரிணுமத்தால் பிரகாசமுண்டாகிறது. அதனையே விருத்தி யென்பர்.

௫. சுகம், துக்கம், காமம், திருப்தி (சந்தோஷம்), குரோதம், க்ஷமை (பொறுமை), தைரியம், அதைரியம், லஜ்ஜை (வெட்கம்), பய முதலிய எத்துணை அந்தக்கரண பரிணாமங்கள் உளவோ அவ்வெல்லாவற்றிற்கும் விருத்தியென்னுஞ் சொல்லால் வியவகாரம் எழுதப்பட்டிருக்கின்றது. அங்ஙனமாயினும், தத்துவாநுசந்தாநம் அத்வைத கௌஸ்துப முதலிய நூல்களில் விளக்கபரிணாமமே விருத்தி யெனப்பட்டிருக்கின்றது.

௬. சில நூல்களில் அஞ்ஞானத்தைக் கெடுக்கும் பரிணாமத்தினை விருத்தி யென்பர். பரோக்ஷ ஞானத்தினாலும் அசத்துவாபாதக அஞ்ஞானமும் சத்தின் நாசமுண்டாகின்றது.

அல்லது, விஷய சேதனத்துள்ள அஞ்ஞானத்தின் நாசமோ அபரோக்ஷஞானமின்றி உண்டாகிறதில்லை. பிரமாத்திரு சேதனத்துள்ள அஞ்ஞானத்தின் நாசம் பரோக்ஷஞானத்தினாலும் உண்டாகின்றது. ஆதலால் பரோக்ஷ ஞானத்தில் முற்கூறிய லக்ஷணத்தின் அவ்வியாப்தியில்லை.

௭. அங்ஙனமாயினும், சுக துக்கங்களின் ஞானவடிவ விருத்தியிலும், மாயாவிருத்திவடிவ ஈசுவரனது ஞானத்திலும், அங்ஙனமே சுத்திரஜத

முதலியவற்றைக் கோசரிக்கும் பிரம ரூப அவித்தியாவிருத்தியிலும், சொப்பனத்தைக் கோசரிப்பதும் சுழுத்தியின்கண்ணுள்ள சுகத்தினையும் அஞ்ஞானத்தினையும் கோசரிப்பதுமாகிய வித்தியாவிருத்தியிலும், பிரத்தியபிஞ்ஞை ஞான வடிவ விருத்தியிலும் முற்கூறிய லக்ஷணத்தின் அவ்வியாப்தியுண்டு. ஏனெனின்,

க. முதலில் அறியப்படாத சுக முதலியன உற்பத்தியாய்ப் பின்னர் அவற்றின் ஞானமுண்டாமாயின், சுக முதலியவற்றின் ஞானத்தால் சேதனத்தினது அஞ்ஞானத்தின் நாசம் சம்பவிக்கும் அவ்வறியப்படாத சுக முதலியன இல்லை. ஆனால் சுக முதலியனவும் அவற்றின் ஞானமும் ஒரு காலத்தில் உற்பத்தி யாகின்றன. ஆதலால் அறியப்படாத சுக முதலியவற்றின் அபாவத்தால் சுக முதலியவற்றைக் கோசரிக்கும் விருத்தியினால் அஞ்ஞானத்தின் நாசம் சம்பவியாது.

உ. அங்ஙனமே ஈசுவரனுக்கு அசாதாரண வடிவத்தாற் சகல பதார்த்தங்களும் எப்போதும் பிரத்தியக்ஷமாகக் காணப்படுகின்றன. ஆதலால் அஞ்ஞானமின்மையால் மாயையின் விருத்தி வடிவ ஞானத்தினாலும் அஞ்ஞானத்தின் நாசம் சம்பவியாது.

௩. சுத்தி ரஜத முதலியனவும் சொப்பனத்தின் கண்ணுள்ள மித்தியாபதார்த்தங்களும் அவற்றின் ஞானமும் ஏககாலத்தில் உற்பத்தியாகின்றன. ஆதலால் பிரம விருத்தியினுலும் அஞ்ஞானத்தின் நாசம் உண்டாகிறதில்லை.

௪. அங்ஙனமே சுழுத்தியில் விருத்தியிருக்கினும், அதன் விஷய வடிவ தனது உபாதானமும் ஸ்வரூப சுகத்தின் ஆவரணமுமாகிய அஞ்ஞானத்தின் நாசம் அதனுல் உண்டாகிறதில்லை. ஞானகோசரப் பிரத்தியபிஞ்ஞை ஞானம் உண்டாகுமிடத்தும் ஆவரணமின்மையின், அதனுலும் அதன் நாசம் உண்டாகிறதில்லை. எங்ஙனம் "யான் பிரஹ்மம்" என்று ஒரு முறை உதயமாகிய ஞானத்தினுல் ஸ்வரூபத்தின் ஆவரணம் நாசமாகின்றது. பின்னர் அநேகமுறை விசாரத்தினுல் வித்துவானுக்கு "யான் பிரஹ்ம" மென்னும் விருத்தி உதயமாகின்றது. அதனுல் முன்னரே ஆவரணமின்றிய ஞானிக்கு ஸ்வரூபத்தின் ஆவரணம் பங்கமாகிறதில்லை. அங்ஙனமே தாரையாய்ச் செல்லும் விருத்தி யுண்டாகுமிடத்தும் முற்கூறிய பயனுக்கு இரண்டாவது முதலிய விருத்தியில் அவ்வியாப்தியிருக்கின்றது. ஏனெனின், ஞானதாரை உண்டாகு மிடத்து

முதல் ஞானத்தால் அஞ்ஞானம் நாசமாக இரண்டாவது முதலிய ஞானங்கட்கு அஞ்ஞானத்தைக் கெடுக்கும் தன்மை சம்பவியாது.

அ. ஆதலால் விளக்க பரிணாமத்தை விருத்தியென்பர். இதன் தாற்பரியம் இதுவாம்:— "இருக்கிறது" என்னும் விவகாரத்திற்கு ஏதுவாகிய அவித்தை அந்தக்கரணங்களின் பரிணாமம் எதுவோ அது விருத்தியெனப்படும்.

கூ. விளக்கபரிணாமத்தை விருத்தியெனினும், அறியப்படாத பதார்த்தத்தைக் கோசரிக்கும் விருத்தியிற்றான் அஞ்ஞானத்தைக் கெடுக்குந் தன்மை வடிவப் பிரகாசிக்குந் தன்மையிருக்கின்றது. மறைக்கப்படாத பதார்த்தத்தைக் கோசரிக்கும் விருத்தியில் பிரகாசிக்குந்தன்மை யில்லை. ஏனெனில், மறைக்கப்படாத சேதனத்தின் சம்பந்தத்தினாலேயே விஷயப்பிரகாசம் சம்பவித்தலால் விருத்தியில் பிரகாசிக்குந் தன்மையைக் கற்பித்தல் அயோக்கியமாம். ஆதலால் விருத்தியில் அஞ்ஞானத்தைக் கெடுக்குந்தன்மையின்றி வேறுவிதப் பிரகாசிக்குந்தன்மை சம்பவியாமையால், இரண்டாவது லக்ஷணத்திற்கும் முதல் லக்ஷணத்திற்போல, சுகமுதலியவற்றைக் கோசரிக்கும் விருத்தியில் அவ்வியாப்தி உண்டாகும்.

ஆதலால் "இருக்கிறதென்னும் வியவகாரத்திற்கு ஏதுவாகிய அவித்தை அந்தக்கரணங்களின் பரிணமம்" விருத்தி யெனப்படும்.

உ. விருத்தியின்பேத நிரூபணம். கo-கஎ.

கo. அந்த விருத்திஞானம் இருவகைத்தாம். க. ஒன்று பிரமைவடிவினது. உ. மற்றையது அப்பிரமைவடிவினது.

கக.

க (க) பிராமண ஜந்நிய யதார்த்த ஞானத்தைப் பிரமை யென்பர்.

(உ) அல்லது அபாதித (பாதிக்கப்படாத) அர்த்தத்தை விஷயஞ்செய்யும் ஞானத்தினைப் பிரமை யென்பர்.

(ங) அல்லது அபாதித அர்த்தத்தை விஷயஞ் செய்யும் ஸ்மிருதிக்கு வேறாகிய ஞானத்தினைப் பிரமை யென்பர்.

(ச) அல்லது யதார்த்த அநுபவத்தைப் பிரமை யென்பர்.

உ. அதனின் வேறாகியஞானத்தை அப்பிரமை யென்பர்.

கஉ. முதல் இலக்ஷணத்தை அநுசரித்தோ பிரத்தியக்ஷ முதலிய பேதத்தால் பிரமாஞானம் அறுவகைத்தாம். அதனின் வேறாகிய ஈசுவர ஞானமும் சுகமுதலியவற்றைக் கோசரிக்கும் ஞானமும் ஸ்மிருதிஞானமும் பிரமஞானமும் அப்பிரமை வடிவினவாம். அவற்றுள், ஈசுவர ஞானமுதலியன யதார்த்த அப்பிரமையும், பிரம ஞானம் அயதார்த்த அப்பிரமையுமாம்.

கங. சில நூலாசிரியர்கள் மதத்திலோ யதார்த்தஞானம் பிரமையும் அயதார்த்தஞானம் அப்பிரமையுமாம். அதன்படி இரண்டாவது லக்ஷணமுளது. அதனை அநுசரித்தோ ஈசுவர ஞானமும் சுகமுதலியவற்றைக் கோசரிக்கும் ஞானமும் ஸ்மிருதி ஞானமும் பிரமைகளாம், பிரமஞானம் அப்பிரமையாம்.

கச. ஆனால் பிராசீன ஆசாரியர்கள் ஸ்மிருதிக்கு வேறாய யதார்த்தஞானத்தில் பிரமா வியவகாரத்தைச் செய்திருக்கின்றனர். ஆதலால் ஸ்மிருதியின் வேறுபட்டதாகப் பிரமையின் லக்ஷணத்தைக் கூறுதல் வேண்டும். அதன்படி மூன்றாவது நான்காவது லக்ஷணங்களுள. அதனை அநுசரித்துப் பிரத்தியக்ஷ முதலிய அறுவகை ஞானமும் ஈசுவர ஞானமும் சுகமுதலியவற்றைக் கோச

ரிக்கும் ஞானமுமே பிரமைகளாம். அவற்றின் வேருய ஸ்மிருதிஞானமும் பிரமஞானமும் அப்பிரமைகளாம்.

கரு. சுத்தி ரஜதமுதலிய ஞானம் ஸ்மிருதிக்குவேரும்; அபாதித அர்த்தத்தை விஷயஞ்செய்கிறதில்லை. ஆனுல் பாதித அர்த்தத்தை விஷயஞ்செய்கின்றன; ஆதலால் பிரமையன்று. அபாதித அர்த்தத்தை விஷயஞ்செய்வது ஸ்மிருதி ஞானமுமாம். ஸ்மிருதிஞானத்திற் பிரமா வியவகாரமில்லை. ஆதலால் அநேக நூல்களில் "ஸ்மிருதிக்கு வேருய் அபாதித அர்த்தத்தை விஷயஞ்செய்யும் ஞானம்" பிரமையெனப்படுகின்றது.

கசு. இரண்டாவது லக்ஷணத்தின் பரீக்ஷை இதுவாம்:— யதார்த்தமோ ஸ்மிருதியுமாம்; அது அநுபவவடிவமன்று. அநுபவமோ பிரமஞானமுமாம்; அது யதார்த்தமன்று. ஆதலால் "யதார்த்தாநுபவம்" பிரமையும் அதனின் வேருயது அப்பிரமையுமாம். இப்பிரமையின் லக்ஷணமும் ஸ்மிருதியின் வேறுபட்டதாம்.

கஎ. ஈசுவர ஞானமும் சுக முதலியவற்றைக் கோசரிக்கும் ஞானமும் யதார்த்த அநுபவ வடிவமாம். ஆதலால் அவையும் பிரத்தியக்ஷ முதலிய

ஆறு அநுபவங்களைப்போல பிரமையாம், அவற்றின் வேறுய ஸ்மிருதி ஞானமும் பிரமஞானமும் அப்பிரமையாம். அப்பிரமையின் நிரூபணம் மேல் எட்டாவது ரத்ந முதல் பதின்மூன்ருவது ரத்நம் வரையிற் கூறப்படும்.

௩. பிரமை அப்பிரமைகளின் சங்கையும் (எண்ணும்) காரணமும் ௧அ-உச.

௧அ. பிரத்தியக்ஷம், அநுமிதி, உபமிதி, சாப்தி, அர்த்தாபத்தி. அபாவமென்னும் ஆறு பிரமாணஜந்ய யதார்த்த ஞானங்கள், ஈசுவரஞானம், சுக முதலியவற்றைக் கோசரிக்கும் ஞானம் என்னும் பேதத்தால் பிரமாஞானம் எண் வகையாம்.

௧௯.

௧. பிரத்தியக்ஷ முதலிய ஆறு ஞானங்களும் பிரத்தியக்ஷத்தின் பேதமாகிய சுக முதலியவற்றின் ஞானமும் ஜீவாசிரிதப்பிரமை யெனப்படும்.

௨. முக்காலத்தைய சகல பதார்த்தங்களையும் கோசரிக்கும் மாயையின் விருத்தி

வடிவ ஞானம் ஈசுவராசிரிதப்பிரமை யெனப்படும்.

௨0. மீண்டும் அவற்றுள்,

க. பிரத்தியக்ஷப்பிரமையும் மாயையின் விருத்திவடிவ ஈசுவரஞானமும் பிரத்தியக்ஷப்பிரமையின் உள்ளடங்கிய சுக முதலியவற்றைக் கோசரிக்கும் ஞானமும் பிரத்தியக்ஷவடிவமாம்.

உ. சாப்திப்பிரமை பிரத்தியக்ஷ பரோக்ஷ பேதத்தால் இருவகைத்தாம்.

ந. அங்ஙனமே அபாவப்பிரமையும் பிரத்தியக்ஷ பரோக்ஷ பேதத்தால் இருவகைத்தாம். அல்லது அபாவம் விவாதத்திற்கு விஷயமாயிருத்தலின் அபாவப்பிரமை பரோக்ஷமேயாம்.

ச-கு. அநுமிதி உபமிதி அர்த்தாபத்திப் பிரமைகள் பரோக்ஷமேயாம்.

௨க. பிராணிகளின் கர்மத்தை அநுசரித்துச் சிருஷ்டியின் ஆதிகாலத்தில் சகல பதார்த்தங்களையும் விஷயஞ் செய்யும் ஈசுவரஞானம் உற்பத்தியா

யிருக்கின்றது. அது முக்காலத்தைய சகல பதார்த்தங்களின் சாமாநிய விசேஷத்தன்மைகளையும் விஷயஞ்செய்வதாய்ப் பிரளயபரியந்தம் நிற்பதாயிருக்கின்றது; ஆதலால் ஏகமும் நித்தியமுமாமென்பர். அதன் உபாதானகாரணம் மாயையும், நிமித்தகாரணம் சகலப் பிராணிகளது அதிருஷ்ட முதலியனவுமாம்.

௨௨. தர்மமுதலிய நிமித்தத்தால் அநுகூலப் பிரதிகூல பதார்த்தங்களின் சம்பந்தம் உண்டாகுதலால், அந்தக்கரணத்தினது சத்துவகுண ரஜோகுணங்களின் பரிணாமவடிவ சுக துக்கங்கள் உண்டாகின்றன. சுகதுக்கங்களின் நிமித்தம் எதுவோ, அதே நிமித்தத்தால் சுகதுக்கங்களை விஷயஞ்செய்வதாகிய அந்தக்கரணத்தின் விருத்தி உண்டாகின்றது. அந்த விருத்தியில் ஆரூடசாக்ஷி சுகதுக்கங்களைப் பிரகாசிக்கின்றது. அதற்கு அந்தக்கரணம் உபாதானமும் தர்ம முதலியன நிமித்தமுமாம்.

௨௩. பிரமாண ஜந்நிய யதார்த்த ஞானம் அறுவகைத்தாம். அதன் உபாதான காரணம் அந்தக்கரணமும், நிமித்த காரணம் பிரத்தியக்ஷ முதலிய பிரமாணங்களும் அங்ஙனமே இந்திரிய சையோக முதலியனவுமாம்.

உச. அவித்தையின் பரிணாமமாகிய பிரம ஞானத்தின் உபாதான காரணம் அவித்தையும், நிமித்தகாரணம் ஸஜாதீய (ஒத்தவின) வஸ்துவின் ஞான ஜந்ய சம்ஸ்காரமும், பிரமாத்திருதோஷமும், பிரமாண தோஷமும், பிரமேய தோஷமும், அதிஷ்டானத்தின் சாமானிய ஞானமும், திமிர முதலியனவுமாம்.

விருத்தியின் காரணம் பேதம் சொரூபம்
என்பவற்றை நிரூபித்தலென்னும்

முதல் ரத்நம் முடிந்தது.

இரண்டாவது ரத்நம்.

க. பிரத்தியக்ஷப்பிரமாண நிருபணம்.

உரு—அஅ.

ச. ஆறுபிரமாணங்களின் பெயரும் இலக்ஷணமும் மதபேதத்தால் அவற்றின் கொள்கையும்.

உரு—உஎ.

உரு பிரமாணங்களுக்கு ஆறுபேதமுண்டு. அவை பிரத்தியக்ஷம், அநுமானம், சப்தம், உபமானம், அர்த்தாபத்தி அநுபலப்தி என்பனவாம்.

உசூ.

க. பிரத்தியக்ஷப் பிரமையின் கரணம் யாதோ அது பிரத்தியக்ஷப்பிரமாணமெனப்படும்.

உ. அநுமிதிப் பிரமையின் கரணத்தினை அநுமானப்பிரமாணமென்பர்.

ங. சாப்திப்பிரமையின் கரணத்தினை சப்தப்பிரமாணமென்பர்.

௪. உபமிதிப்பிரமையின் கரணத்தினை உபமானப்பிரமாண மென்பர்.

ரு. அர்த்தாபத்திப்பிரமையின் கரணத்தினை அர்த்தாபத்திப்பிரமாண மென்பர்.

௬. அபாவப் பிரமையின் கரணத்தினை அநுபலப்திப்பிரமாண மென்பர்.

பிரத்தியக்ஷ அர்த்தாபத்திப்பிரமாணங்களுக்கும் பிரமைகளுக்கும் பெயர் ஒன்றேயாம்.

உஎ.

க. சார்வாகர்மதத்தில் பிரத்தியக்ஷப் பிரமாணம் ஒன்றே கொள்ளப்பட்டிருக்கின்றது.

உ. கணாதசுகதர்மதங்களில் பிரத்தியக்ஷம் அநுமானமென இரண்டு பிரமாணங்களைக் கொண்டிருக்கின்றனர்.

ங. சாங்கிய சாஸ்திரத்தின் கர்த்தராகிய கபிலரதுமதத்தில் பிரத்தியக்ஷம், அநுமானம், சப்தமென மூன்று பிரமாணங்களைக் கொண்டிருக்கின்றனர்.

ச. நியாய சாஸ்திரத்தின் கர்த்தாவாகிய கௌதமரதுமதத்தில் பிரத்தியக்ஷம், அநுமானம், சப்தம், உபமானம் என நான்கு பிரமாணங்களைக் கொண்டிருக்கின்றனர்.

ரு. பூர்வ மீமாம்ஸையின் ஏகதேசியாகிய பட்டரின் சிஷ்யரான பிரபாகரரதுமதத்தில் பிரத்தியக்ஷம், அநுமானம், சப்தம், உபமானம், அர்த்தாபத்தி என ஐந்து பிரமாணங்களைக் கொண்டிருக்கின்றனர்.

சூ. பட்டரதுமதத்தில் ஆறு பிரமாணங்களைக் கொண்டிருக்கின்றனர்.

எ. வேதாந்த நூல்களிலும் ஆறு பிரமாணங்களே எழுதப்பட்டிருக்கின்றன.

சூத்திரபாஷ்யகாரர்கள் பிரமாண சங்கையை எழுதினரில்லை. ஆயினும், சித்தாந்தத்திற்கு விரோதமின்றிய பட்டர் மதத்தினை அத்வைத வாதத்திற் கொண்டிருக்கின்றனர். ஆதலால் வேதாந்த பரிபாஷை முதலிய நூல்களில் ஆறு பிரமாணங்களே எழுதப்பட்டிருக்கின்றன.

ரு. பிரத்தியக்ஷப்பிரமாணப் பிரமைகளது சொரூபத்தின் நிர்ணயம்.

உஅ—௩ரு.

உஅ. அஞ்ஞானத்தின் ஞாபகம் பிரமாணமெனப்படும். அல்லது பிரமையின் கரணம் பிரமாணமெனப்படும்.

பிரத்தியக்ஷப்பிரமையின் கரணம் நேத்திர முதலிய இந்திரியங்களாம். ஆகலின் நேத்திர முதலிய இந்திரியங்களைப் பிரத்தியக்ஷப்பிரமாணமென்பர்.

உகூ. வியாபாரமுடைய அசாதாரண காரணம் எதுவோ அது கரணமெனப்படும். அல்லது வியாபாரத்தின் வேறாகிய அசாதாரண காரணம் எதுவோ அது கரணமெனப்படும்.

௩O. நியதமாய்க் காரியத்திற்கு மறைப்பின்றி முன்னிருப்பது எதுவோ அது காரணமெனப்படும். அக்காரணம் க. சாதாரணம் உ. அசாதாரணம் என்னும் பேதத்தால் இருவகைத்தாம்.

க. சர்வகாரியங்களின் காரணத்தினைச் சாதாரணகாரண மென்பர்.

உ. யாதேனும் ஓர் காரியத்தின் காரணத்தினை அசாதாரணகாரண மென்பர்.

க. ஈசுவரன், அவரது ஞானம், இச்சை, கிரியை, திக்கு, காலம், அதிருஷ்டம், பிராகபாவம் பிரதிபந்தகாபாவம் என்னும் இவ்வொன்பதும் சாதாரணகாரணங்களாம்

உ. இவற்றிற்குவேறாகிய கடமுதலியவற்றின் கபால முதலிய காரணங்களெவையோ, அவை யாவும் அசாதாரணகாரணங்களாம். அவற்றுள்ளும், (க) சில உபாதானகாரணமும் (உ) சில நிமித்தகாரணமுமாம்.

(க) எதன் சொரூபத்தில் காரியத்தின் ஸ்திதியுளதோ அது உபாதானகாரண மெனப்படும்.

(உ) அதனின் வேறாயவை நிமித்தகாரண மெனப்படும். எங்ஙனம்: கடத்தின் உபாதானம் இரண்டு கபாலங்களும், நிமித்தம் தண்டம் முதலியனவுமாம்.

அசாதாரணகாரணமும் இருவகைத்தாம் க. ஒன்றே வியாபாரமுடையது; உ. ஒன்று வியாபாரமின்றியது.

காரணத்தினின்றும் உண்டாய்க் காரியத்தை உண்டு பண்ணுவது யாதோ அது வியாபாரமெனப் படும். எங்ஙனம்: கபாலம் கடத்திற்குக் காரணமாம்; கபாலமிரண்டின் சையோகமும் கடத்திற்குக் காரணமாம். ஆண்டுக் கபாலத்தின் காரணத்தன்மையில் சையோகம் வியாபாரமாம். ஏனெனின், கபால சையோகம் கபாலத்தினின்றும் உண்டாகின்றது.

க. கபாலத்தின் காரியமான கடத்தை உற்பத்தியாக்குகின்றது. ஆதலால் சையோக வடிவ வியாபாரமுடைய காரணம் காபலமாம்.

உ. காரியத்தை எவ்வழியாகவேனும் உற்பத்தி செய்வியாமல் தானே உண்டாக்குவது எதுவோ அது வியாபாரமின்றிய காரண மெனப்படும்.

கபாலத்தின் சையோகம் அசாதாரண காரணமாயினும் வியாபாரமுடையதன்று; ஆதலால் கரணமெனப்படுவதில்லை; கேவல கடத்தின் காரணமெனப்படுகின்றது.

௩க. அங்ஙனமே பிரத்தியக்ஷப் பிரமைக்கு நேத்திர முதலிய இந்திரியங்கள் காரணமாம். ஏனெனின், நேத்திர முதலிய இந்திரியங்களுக்குத் தத்தம் விஷயங்களோடு சம்பந்தமுண்டாகாவிடின், பிரத்தியக்ஷப்பிரமை உண்டாகிறதில்லை. இந்திரிய விஷயங்களின் சம்பந்தமுண்டாயின் அப்போது உண்டாகின்றது. ஆதலால் இந்திரிய விஷயங்களின் சம்பந்தம் இந்திரியத்தினின்றும் உண்டாய்ப் பிரத்தியக்ஷப்பிரமையை உண்டுபண்ணுகின்றமையின் அது வியாபாரமாம். சம்பந்தவடிவ வியாபாரமுடைய பிரத்தியக்ஷப் பிரமையின் அசாதாரணகாரணம் இந்திரியமாம். ஆதலால் இந்திரியங்களைப் பிரத்தியக்ஷப்பிரமாணமென்பர். இந்திரிய ஜந்ய யதார்த்த ஞானத்தினைப் பிரத்தியக்ஷப் பிரமையென்பர்.

௩௨. எவர்கள் மதத்தில் மனம் இந்திரியமன்றோ, அவர்கள் மதத்தில் இந்திரிய ஜந்யத்தன்மை பிரத்தியக்ஷத்தின் லக்ஷணமன்று. அங்ஙனமாயினும், ஆண்டு விஷயசேதனத்திற்கு விருத்தி சேதனத்தோடுள்ள அபேதமே பிரத்தியக்ஷஞானத்தின் லக்ஷணமாம். அதனையே பிரத்தியக்ஷப்பிரமை யென்றும் கூறுவர்.

௯௯. அந்தப் பிரத்தியக்ஷப்பிரமை இரு வகையினதாம். ௧. ஒன்று அபிஞ்ஞாப்பிரத்தியக்ஷம்; ௨. மற்றையது பிரத்தியபிஞ்ஞாப் பிரத்தியக்ஷம்.

௧. கேவல இந்திரிய முதலியவற்றின் சம்பந்த ஜந்நிய ஞானம் அபிஞ்ஞாப்பிரத்தியக்ஷமாம்.

௨. பிரத்தியக்ஷ சாமக்கிரியோடு கூடிய சம்ஸ்கார ஜந்நியஞானம் பிரத்தியபிஞ்ஞாப் பிரத்தியக்ஷமாம்.

அவை ஒவ்வொன்றும் ஆந்தரப் பிரத்தியக்ஷப்பிரமை பாகியப் பிரத்தியக்ஷப்பிரமை என்னும் பேதத்தால் இருவகைத்தாம்.

ஆந்தரப் பிரத்தியக்ஷப் பிரமையும் இருவகைத்தாம். ஒன்று ஆத்மகோசரம்; மற்றையது அநாத்மகோசரம்.

ஆத்மகோசரமும் இருவகைத்தாம். ஒன்று சுத்தாத்ம கோசரம்; மற்றையது விசிஷ்டாத்ம கோசரம்.

சுத்தாத்ம கோசரமும் இருவகைத்தாம், ஒன்றோ பிரஹ்மாகோசரம்; மற்றையது பிரஹ்ம கோசரம்.

௩௪. "துவம் (நீ)" பதார்த்தத்தை போதிக்கும் வேதாந்த வாக்கியத்தினால் "சுத்தனாகிய பிரகாசன் யான்" என்னும் விருத்தி உண்டாகின்றது. அந்த விருத்தி தேசத்தில் அந்தக்கரண உபகித சுத்த சேதனமிருக்கின்றது. ஆதலால் விருத்தியவச்சின்ன சேதனத்திற்கும் விஷயாவச்சின்ன சேதனத்திற்கும் அபேதமிருத்தலின் அந்த விருத்தி அபரோக்ஷமாம். அந்த விருத்தியின் விஷயமாகிய சேதனத்தில் பிரஹ்மத்தன்மையுமுளது; ஆனால் பிரஹ்மாகார விருத்தி உண்டாகவில்லை. ஏனெனின் அவாந்தர வாக்கியத்தினால் விருத்தி உண்டாயிருக்கின்றது. மகா வாக்கியத்தினால் உண்டாகுமாயின் பிரஹ்மாகாரமும் உண்டாகும். ஏனெனின்,

௩௫. சப்தஜந்நிய ஞானத்தின் சுபாவம் இதுவாம்:—சந்நிதிப்பட்ட பதார்த்தத்தை எவ்வடிவத்தால் சப்தம் அறிவிக்கின்றதோ, அவ்வடிவத்தை ஞானம் விஷயஞ் செய்கின்றது. எவ்டிவத்தால் சப்தத்தைக் கூறவில்லையோ, அவ்வடிவத்தால் சப்தஜந்நிய ஞானம் விஷயஞ் செய்கிறதில்லை.

எங்ஙனம்: பத்தாவது புருஷனுக்குப் "பத்தாமவனிருக்கின்றான்" என்று கூறின், அப்

போது "பத்தாமவன் யான்" என்று கேட்ப வனுக்கு ஞான முண்டாகிறதில்லை. எங்ஙனம் பத்தா மவனிடத்து ஆத்மத்தன்மை யிருக்கி னும், ஆத்மத்தன்மையை யறிவிக்கும் சப்தமின் மையால் ஆத்மத்தன்மையின் ஞானமுண்டாகிற தில்லையோ, அங்ஙனமே ஆத்மாவினிடத்தில் பிரஹ்மத்தன்மை எப்போதுமிருக்கினும்,பிரஹ் மத்தன்மையை அறிவிக்கும் சப்த மின்மையால் ஞானம் உண்டாகிறதில்லை. ஆதலால் முற்கூறிய விருத்தி பிரஹ்மாகோசர சுத்தாத்மகோசர ஆந்த ரப்பிரத்தியக்ஷப்பிரமையாம்.

௬. சங்கை சமாதான பூர்வகமாகப் பிரத்தியக்ஷப்பிரமையை நிர்ணயித்தல்.

௩௬....௫௩

௩௬. பிரத்தியக்ஷத்தின் பிரசங்கத்தால் இச்சங்கை உளதாகின்றது:—சித்தாந்தத்தில் இந்திரியஜந்திய ஞானம் பிரத்தியக்ஷமாம் என் பதின் அங்கீகாரமில்லை. ஏனெனின், பாகிய கட முதலியவற்றின் பிரத்தியக்ஷ ஞானமோ சித் தாந்தத்திலும் இந்திரிய ஜந்நியமாம், என்றாலும் மனதிற்கு இந்திரியத்தன்மையின் அபாவத்தால் ஆந்தர சுகதுக்கங்களின் ஞானம் இந்திரியஜந்நிய மன்று. ஆனல் சுகதுக்கம் சாக்ஷிபாஸ்யமாம்.

விசிஷ்டாத்மாவில் அந்தக்கரண பாகம் சாக்ஷிபா வியமும் சேதனத்தின் பாகம் சுயம்பிரகாசமு மாம். ஆதலால் ஜீவனது ஞானமும் மானஸ மன்று. பிரஹ்மவித்தை வடிவ அபரோக்ஷ ஞானத்தின் காரணம் சப்தமாம். ஆதலால் அது வும் சப்தப்பிரமாண ஜந்யமாம். மானஸமன்று: வாசஸ்பதியின் மதத்தில் முற்கூறிய ஞானங்கள் யாவும் மன இந்திரிய ஜந்யமாயினும் மாயை யின் விருத்திவடிவ ஈசுவராசிரிதப் பிரத்தியக்ஷப் பிரமை இந்திரிய அநுமானுதிப் பிரமாண ஜந்ய மன்று. ஆதலால் ஆண்டு அவர் மதத்தினும்அவ் வியாப்தி உண்டாகுதலான் இந்திரிய ஜந்யத் தன்மை பிரத்தியக்ஷ ஞானத்தின் லக்ஷணமன்று.

௩௭. ஆனால் விருத்திபவச்சின்ன சேதனத் தோடு விஷயாவச்சின்ன சேதனத்திற்குள்ள அபேதமே ஞானத்தின் பிரத்தியக்ஷத்தன்மைக்கு ஏதுவாம்.

க., யாண்டு இந்திரிய சம்பந்தமுடைய கடா திகளுளவோ, ஆண்டு இந்திரியவாயிலாக அந்தக் கரணத்தின் விருத்தி வெளியிற்சென்று விஷயத் தின் வடிவத்திற்குச் சமான வடிவமாய் விஷயத் தோடு சம்பந்த முடையதாகின்றது. இதனுல் விருத்திசேதன விஷயசேதனங்களின் உபாதி

கள் ஓரிடத்திருத்தலின் உபகித சேதனத்திற்கும் அபேதமுண்டாகின்றது.

உ. அங்ஙனமே சுக முதலியவற்றின் ஞானம் இந்திரியஜந்நியமன்று. சுத்தாத்ம ஞானமும் சப்த ஜந்நியமாம்; இந்திரிய ஜந்நியமன்று. அங்ஙனமாயினும் விஷயசேதன விருத்திசேதனங்கட்குப்பேதமில்லை. எனெனின், சுகாகாரவிருத்தி அந்தக்கரணதேசத்தி லிருக்கின்றது. சுகமும் அந்தக்கரணத்தி லிருக்கின்றது. ஆதலால் விருத்தியுபகிதசேதன விஷயவுபகிதசேதனங்கட்கு அபேதமுண்டு.

அங்ஙனமே ஆத்மாகார விருத்தியின் உபாதானகாரணம் அந்தக்கரணமாம். அந்தக்கரணம் உபகிதசேனத்திற்கு எதிர்முகமாகியு மிருக்கின்றது. ஆதலால் ஆத்மாகார விருத்தியும் அந்தகரண தேசத்திலுளதாம். அவ்வந்தக்கரணமே சுத்தாத்மாவிற்கு உபாதியாம்.

இவ்வாற்றால் இரண்டு உபாதிகளும் ஓரிடத்திருத்தலால் விருத்திசேதன விஷயசேதனங்கட்கு அபேதமுண்டாகின்றது. ஆதலால் சுகமுதலியவற்றின் ஞானமும் சுத்தாத்ம ஞானமும் பிரத்தியக்ஷவடிவமாம்.

ருஅ. ஈண்டு இதுநிச்சயம்:- யாண்டு விஷயத்திற்குப் பிரமாதாவோடு விருத்தி வாயிலாகவேனும் நேராகவேனும் சம்பந்த முளதாகின்றதோ, ஆண்டு அந்த விஷயத்தின் ஞானம் பிரத்தியக்ஷமாம். அந்தவிஷயமும் பிரத்தியக்ஷ மெனப்படும். எங்ஙனம்: கடத்தின் பிரத்தியக்ஷ ஞானமுண்டாயின், அப்போது கடம் பிரத்தியக்ஷமாமென்னும் வியவகார முண்டாகின்றது.

ருக. பாகிய பதார்த்தங்களுக்கு விருத்தி வாயிலாகப் பிரமாதாவோடு சம்பந்த முண்டாகின்றது. சுகமுதலியவற்றிற்குப் பிரமாதாவோடு சாக்ஷாத் சம்பந்த மிருக்கின்றது.

அதீத சுகமுதலியவற்றிற்குப் பிரமாதாவோடு வர்த்தமான சம்பந்தமில்லை யாகலின், அதீத சுக முதலியவற்றின் ஞானம் ஸ்மிருதிரூபமாம்; பிரத்தியக்ஷரூபமன்று.

சுO. அதீத சுகமுதலியவற்றிற்கும் பிரமாதாவோடு சம்பந்தமோ உண்டாயிருக்கின்றது; அங்ஙனமாயினும், பிரத்தியக்ஷலக்ஷணத்தில் வர்த்தமானத்தின் பிரவேச மிருக்கின்றது.

க. "பிரமாதாவோடு வர்த்தமான சம்பந்தியாகிய யோக்கியவிஷயம்" பிரத்தியக்ஷமெனப்படும்.

உ. "பிரமாதாவோடு வர்த்தமான சம்பந்தியான யோக்கிய விஷயத்தின் ஞானம்" பிரத்தியக்ஷஞான மெனப்படும்.

யோக்கியமென்று சொல்லாவிடின், தர்ம முதலியன எப்போதும் பிரமாதாவின் சம்பந்திகளா யிருத்தலின், எப்போதுமே பிரத்தியக்ஷமெனல்வேண்டும். சப்த முதலியவற்றால் அவற்றின் ஞானம் உண்டாகின்றது. அதனைப் பிரத்தியக்ஷஞான மெனல்வேண்டும் தர்மமுதலியன பிரத்தியக்ஷயோக்கியமன்றாகலின் இலக்ஷணத்தில் யோக்கிய பதத்தைப்புகுத்தலால் தோஷமில்லை. க. யோக்கியத்தன்மையும், உ. அயோக்கியத்தன்மையும் அநுபவத்தின் அநுசாரமாக அநுமிக்கத்தக்கனவாம்.

க. எந்த் வஸ்துவில் பிரத்தியக்ஷத்தன்மையின் அநுபவம் உண்டாகின்றதோ அதன்கண் அயோக்கியத்தன்மையுளது.

உ. எதன்கண் பிரத்தியக்ஷத்தன்மை அநுபவம் உண்டாக வில்லையோ, அதன்கண் யோக்கியத்தன்மையுளது.

இவ்வுணர்ச்சி அநுமானத்தினுலேனும் அர்த்தாபத்தியினுலேனும் உண்டாகின்றது.

இவ்வாற்ருல் பிரத்தியக்ஷயோக்கிய வஸ்துவிற்குப் பிரமாதாவோடு வர்த்தமான சம்பந்தமுண்டாயின், ஆண்டுப் பிரத்தியக்ஷஞான முண்டாகின்றது.

சுக. இவ்வர்த்தத்தில் இச்சங்கையுளது:— பிரஹ்மகோசரஞானம் பரோக்ஷமாகலாகாது ஏனெனின், பிரஹ்மத்திற்குப் பிரமாதாவோடு சம்பந்த மில்லையாயின், பாகிய முதலியவற்றின் ஞானத்தைப்போலப் பிரஹ்மஞானமும் பரோக்ஷமாம் எப்போது அவாந்தர வாக்கியத்தினுல் "சத்தியசொரூபம், ஞானசொரூபம், அநந்தசொரூபம் பிரஹ்மமாம்" என்னும் விருத்தி உண்டாகின்றதோ, அக்காலத்திலும் பிரஹ்மத்திற்குப் பிரமாதாவோடு சம்பந்த மிருக்கின்றது. ஆதலால் அவாந்தர வாக்கியஜந்நியப் பிரஹ்மஞானமும் பிரத்தியக்ஷமே யாதல்வேண்டும். சித்தாந்தத்தில்

அவாந்தர வாக்கியஜந்நியப் பிரஹ்மஞானம் பிரத்தியக்ஷமன்று; ஆனால் பரோக்ஷமாம். அது முற்கூறியபடி சம்பவியாது.

௬௨. இச்சங்கைக்கு இது சமாதானமாம்:— பிரத்தியக்ஷ லக்ஷணத்தில் விஷயத்தின் யோக்கியதை விசேஷண மெனப்பட்டிருக்கிறது. அங்ஙனமே யோக்கியப்பிரமாண ஜந்நியத்துவம் ஞானத்தின் விசேஷணமாம் ஆதலால் முற்கூறிய தோஷமில்லை. எனெனின், பிரமாதாவோடு வர்த்தமான சம்பந்தமுடைய யோக்கிய விஷயமெதுவோ, அதன் யோக்கியப் பிரமாணஜந்நிய ஞானம் பிரத்தியக்ஷஞான மெனப்படுகின்றது. இந்த லக்ஷணத்தில் முற்கூறிய தோஷமில்லை. எனெனின்,

௬௩. வாக்கியத்தின் சுபாவம் இதுவாம்:—

௧. சுரோதாவின் சொரூபத்தைப் போதிக்கும் பதமமைந்த வாக்கியத்தினால் அபரோக்ஷஞான முண்டாகின்றது.

௨. சுரோதாவின் சொரூபத்தை அறிவிக்கும் பதமின்றிய வாக்கியத்தினால் பரோக்ஷஞான முண்டாகின்றது.

விஷயம் சமீபித்திருந்து பிரத்தியக்ஷயோக்கிய மாகுமாயினும், சொரூபத்தைப் போதிக்கும் பதமின்றிய வாக்கியத்தினல் அபரோக்ஷஞான முண்டாகிறதில்லை. எங்ஙனம் :— பத்தாமவனைப் போதிக்கும் இருவகை வாக்கியங்களுள.

க. ஒன்ரு "பத்தாமவனிருக்கின்ருன்" என்னும் வாக்கியம்.

உ. மற்றையது "பத்தாமவன்நீ" என்னும் வாக்கியம்.

அவற்றுள்,

க. முதல் வாக்கியமோ சுரோதாவின் (கேட்பவனது) சொரூபத்தை அறிவிக்கும் பதமின்றியதாம்.

உ. இரண்டாவது வாக்கியம் சுரோதாவின் சொரூபத்தை அறிவிக்கும் "நீ" என்னும் பதத்தோடு கூடியதாம்.

அவற்றில் முதல் வாக்கியத்தினல் சுரோதாவிற்குத் தசமனது பரோக்ஷஞானமே உண்டாகின்றது. வாக்கிய ஜந்நிய ஞானத்தின் விஷயம் தசமபுருஷனும். அவன் இரண்டிடங்களிலும்

மிகச் சமீபித்தவனுயிருக்கின்ருன். எது சொரூபத்திற்குப் பின்னமாகவும் சம்பந்தியாகவும் உளதாகின்றதோ, அது சந்நிஹிதமாகின்றது; பிரத்தியக்ஷயோக்கியமுமாம். பத்தாவது புருஷன் சுரோதாவின் (கேட்பவனது) சொரூபத்திற்கு வேறல்லன்; கேட்பவனது சொரூபமாயிருக்கின்ருன். ஆதலால் அதிசந்நிஹிதனும்பிரத்தியக்ஷயோக்கியனுமாவன். பிரத்தியக்ஷயோக்கியமாகாவிடின் இரண்டாவது வாக்கியத்திஞலும் பத்தாமவனது பிரத்தியக்ஷஞானம் உண்டாகலாகாது. இரண்டாவது வாக்கியத்திஞல் பிரத்தியக்ஷஞானமுண்டாகின்றது. ஆதலால் பிரத்தியக்ஷயோக்கியமாம்.

இவ்வாற்ருல் அதிசந்நிஹிதனும் வாக்கியஜந்நியப் பிரத்தியக்ஷயோக்கியனுமாகிய தசமனது பிரத்தியக்ஷஞானம் வாக்கியத்திஞல் உண்டாகிறதில்லையெனின், அவ்வாக்கியம் அயோக்கியமாம்.

இரண்டாவது வாக்கியத்திஞல் அதே தசமனது அபரோக்ஷஞான முண்டாகின்றது. ஆதலால் இரண்டாவது வாக்கியம் யோக்கியமாம்.

வாக்கியங்களின் யோக்கியதை அயோக்கியதைகளில் வேருர் எதுவோ இல்லை. சொரூபத்

தை அறிவிக்கும் பதத்தோடுகூடிய தன்மையும் சொரூபத்தை அறிவிக்கும் பதமின்றிய தன்மையுமே யோக்கியதை அயோக்கியதைகளைச் சம்பாதிப்பனவாம். இவ்வாற்றுல்,

க. "பத்தாமவன்நீ" என்னும் வாக்கியமோ யோக்கியப் பிரமாணமாம். அதனுற்றேன்றுவது "பத்தாமவன் யான்" என்னும் பிரத்தியக்ஷஞானமாம்

உ. அங்ஙனமே "பத்தாமவன் இருக்கின்றுன்" என்னும் வாக்கியம் அயோக்கியப் பிரமாணமாம். அதனுற்றேன்றும் "பத்தாமவன் யாண்டோ ஓரிடத்தில் இருக்கின்றுன்" என்னும் பத்தாமவனது ஞானம் எதுவோ, அது பரோக்ஷமாம்.

சச. அங்ஙனமே பிரஹ்மத்தை அறிவிக்கும் வாக்கியமும் இருவகைத்தாம் :—

க. "சத்திய ஞானம் அநந்தம் பிரஹ்மமாம்" என்னும் இத்தன்மையது அவாந்தரவாக்கியமாம்.

உ. "தத்துவமஸி (அதுநீ)" யென்னும் இத்தன்மையது மகாவாக்கியமாம்.

௧. அவாந்தர வாக்கியங்களில் கேட்பவனது சொரூபத்தை அறிவிக்கும் பதமில்லை. ஆதலால் பிரத்தியக்ஷ ஞானத்தை உண்டு பண்ணுவதில் தகுதியானது அவாந்தர வாக்கியமன்று.

௨. மகாவாக்கியங்களில் கேட்பவனது சொரூபத்தை அறிவிக்கும் நீயென்றல் முதலிய பதங்களிருக்கின்றன. ஆதலால் பிரத்தியக்ஷ ஞானத்தை யுண்டு பண்ணுவதில் தகுதியுள்ளவை மகாவாக்கியங்களாம்.

௧. இவ்வாற்றால் யோக்கியப் பிரமாணங்கள் மகாவாக்கியங்களாம். அவற்றால் உண்டாகிய ஞானம் பிரத்தியக்ஷமாம்.

௨. அயோக்கியப் பிரமாணங்கள் "சத்திய ஞான அநந்தம் பிரஹ்மம்" என்றல் முதலிய வாக்கியங்களாம். அவற்றால் உண்டாகிய பிரஹ்மத்தின் ஞானம் பரோக்ஷமாம்.

௪௫. அவாந்தர வாக்கியமும் இருவகைத்தாம். ௧. ஒன்று தத்பதார்த்தத்தை யறிவிப்ப

தாம். உ. மற்றையது துவம்பதார்த்தத்தை யறிவிப்பதாம். அவற்றுள்,

க. தத்பதார்த்தத்தை யறிவிக்கும் வாக்கியங்களோ அயோக்கியங்களாம்.

உ. "யஏஷ ஹ்ருத்யந்தர்ஜ்யோதி: புருஷ: யாதொரு இவன் இருதயத்தின் உட்சோதியாகிய புருஷன்" என்றல் முதலிய துவம் பதார்த்தத்தை யறிவிக்கும் அவாந்தரவாக்கியமும் மகாவாக்கியங்களைப்போலயோக்கியமாம்; அயோக்கியமன்று. ஏனெனின், கேட்பவனது சொரூபத்தை யறிவிக்கும் பதங்கள் அவற்றில் உள. இதனால் துவம் பதார்த்தத்தை அறிவிக்கும் அவாந்தரவாக்கியங்களினாலும் அபரோக்ஷஞானம் முண்டாகின்றது. ஆனால் அந்த அபரோக்ஷஞானம் பிரஹ்மாபேத கோசரமன்று. ஆதலால் பரமபுருஷார்த்தத்திற்குச் சாதகமன்று. ஆனால் பரமபுருஷார்த்தத்திற்குச் சாதனமான அபேதஞானமெதுவோ, அதன்கண் பதார்த்தசோதனைவாயிலாக உபயோகியாம்.

இவ்வாற்றால் பிரஹ்மம் பிரமாதாவோடு சம்பந்தமுள்ளதும் யோக்கியமுமாம். அங்ஙனமாயினும் அயோக்கியமான அவாந்தரவாக்கியங்களினாலும் பிரஹ்மத்தின் பரோக்ஷஞானம் சம்பவிக்கின்றதென்று கூறுதலில்,

சுகூ. வேறுசங்கை யுண்டாகின்றது:— பிரமாதாவோடு வர்த்தமான சம்பந்தமுடைய யோக்கியவிஷயம் எதுவோ, அதன் யோக்கியப் பிரமாண ஜந்நியஞானம் பிரத்தியக்ஷஞானமெனப்படுகின்றது. இங்ஙனம் கூறுதலில் சுக முதலியவற்றின் பிரத்தியக்ஷத்தில் முற்கூறிய லக்ஷணத்தின் இன்மையுளது. ஏனெனின், சுக முதலியவற்றின் பிரத்தியக்ஷத்தில் பிரமாணஜந்நியத்தன்மை யின்மையால் யோக்கியப்பிரமாண ஜந்நியத்துவம் முற்றும் சம்பவியாது. ஆதலால் முற்கூறியலக்ஷணத்தில் அவ்வியாப்திதோஷ முண்டு.

சுஎ. இச்சங்கைக்கு இது சமாதானமாம்:— யோக்கியப் பிரமாண ஜந்நியத்தன்மைக்கு லக்ஷணத்திற் பிரவேசமில்லை. ஆனால் அயோக்கியப்பிரமாண அஜந்நியத்தன்மைக்குப் பிரவேச

முண்டு. ஆதலால் அவ்வியாப்தியில்லை. ஏனெனின், "பிரமாதாவோடு வர்த்தமான சம்பந்தமுடைய யோக்கிய விஷயம் எதுவோ அதன் அயோக்கியப் பிரமாணத்தால் அஜந்நிய ஞானம்" பிரத்தியக்ஷஞான மெனப்படுகின்றது. இவ்வாற்ருல் கூறிய அவாந்தரவாக்கியஜந்நியப் பிரஹ்மஞானத்தின் வியாவிருத்தி (நீக்கம்) உண்டாகின்றது.

முற்கூறியபடி பிரஹ்மமாத்திரத்தை அறிவிக்கும் அவாந்தரவாக்கியம் அயோக்கியப் பிரமாணமாம்.

க. "பிரஹ்ம மிருக்கிறது" என்னும் பரோக்ஷ ஞானம் அவற்ருற் ருேன்றிய தாம்; அஜந்நியமன்று. ஆதலால் பரோக்ஷ ஞானத்தில் லக்ஷணம் செல்லாது.

உ. சுக முதலியவற்றைக் கோசரிக்கும் ஞானம் கொள்ளப்படுகின்றது. ஏனெனின், சுகமுதலியவற்றைக் கோசரிக்குஞ் ஞானம் எப்பிரமாணத்தாலும் ஜந்நியமன்று; ஆதலால்

அயோக்கியப் பிரமாணத்தால் அஜந்நியமாம்.

ங. இந்திரிய ஜந்நிய கட முதலியவற்றின் ஞானமும், அங்ஙனமே மகாவாக்கிய ஜந்நியப் பிரஹ்மஞானமும் யோக்கியப் பிரமாண ஜந்நியமா யிருத்தலின், அயோக்கியப் பிரமாணத்தால் அஜந்நியமாம்.

ஆதலால் பிரத்தியக்ஷஞானத்தின் முற் கூறிய லக்ஷணம் தோஷமின்றியதாம்.

இவ்வாறு ஈண்டுப் பிரமாதாவோடு விஷயத்திற்குள்ள அபேதமாகிய தாதாத்மிய சம்பந்தம் எதுவோ அது விஷயத்தின்கண்ணுள்ள அபரோக்ஷத்தன்மையில் ஏதுவாம். விஷயத்தின் அபரோக்ஷத்தன்மை ஞானத்தின்கண்ணுள்ள அபரோக்ஷத்தன்மையில் ஏதுவாம்.

௬அ. ஆண்டு இச்சங்கைஉண்டாகின்றது:- பிரமாதாவோடு அபின்னமான அர்த்தத்தை அபரோக்ஷமெனக்கொண்டு, அபரோக்ஷ அர்த்தத்தைக் கோசரிக்கும் ஞானத்திற்கு அபரோக்ஷத்தன்மைகூறின், சுவப்பிரகாச

ஆத்மசுகவடிவஞானத்தில் அபரோக்ஷஞானத்தினது லக்ஷணத்தின் அவ்வியாப்திஉண்டாகும். ஏனெனின், அபரோக்ஷ அர்த்தம்எதற்கு விஷயமோ அந்த ஞானத்தினை அபரோக்ஷமெனின், ஞானத்திற்கும் விஷயத்திற்கும் பரஸ்பரபேதம் சாபேக்ஷ (அபேக்ஷையினையுடைய) விஷய விஷயித்தன்மை சம்பந்தமாம் அபேதஸ்தானத்தில் ஞானத்தின் கண்ணுள்ள அபரோக்ஷ லக்ஷண மிருத்தலின், விஷயவிஷயித்தன்மைகள் சம்பவியாமையால், அதன்கண் முற்கூறிய லக்ஷணம் சம்பவியாது.

பூர்வ மீமாம்ஸையின் வார்த்திககார பட்டரின் சிஷ்யரான பிரபாகரரது மதத்தில் "சுவ அதாவது தனது சொரூபம் எதற்குப் பிரகாசமோ அதாவது விஷயியோ அது சுவப்பிரகாச" மெனப்படுகின்றது. இவ்வாற்றால் சுவப்பிரகாச பதத்தின் அர்த்தத்திலும் அபேதத்தில் விஷய விஷயித்தன்மை சம்பவிக்கின்றது. அங்ஙனமாயினும், பிரகாசியப்பிரகாசங்களின் பேதம் அநுபவ சித்தமாயிருத்தலின், பேதமின்றிய பிரபாகரரது விஷய விஷயித்தன்மை அசங்கதமாம். ஆதலால் சுவப்பிரகாச பதத்திற்கு முற்கூறியது பொருளன்று. ஆனால் "சுவ அதாவது தனதுசத்தை

யினுல்; பிரகாசம் அதாவது சமுசயாதிகளின்றிய தன்மை'' என்பதுவே சுவப்பிரகாச பதத்திற்குப் பொருளாக அத்வைத நூல்களில் சொல்லப்பட்டிருக்கின்றது.

இவ்வாற்றுல் சுவப்பிரகாச ஞானத்திற்கு அபின்னமான சுவரூப சுகத்தில் விஷயவிஷயித் தன்மை யின்மையால் அபரோக்ஷத்தின் முற் கூறிய லக்ஷணம் அ்தன்கண் சம்பவியாது.

சகூ. ஆதலால் அபரோக்ஷத்திற்கு இது லக்ஷணமாம். சுவ (தனது) வியவகாரத்திற்கு அநுகூலமான சைதன்யத்தோடு ஆவரிக்கப்படாத விஷயத்திற்குள்ள அபேதம் அபரோக்ஷவிஷயத்தின் லக்ஷணமாம்.

ஆவரிக்கப்படாத விஷயத்தோடு தனது வியகாரத்திற்கநுகூலமான சேதனத்திற்குள்ள அபேதம் அபரோக்ஷ ஞானத்தின் லக்ஷணமா மாகலின், சப்தஜந்நியப் பிரஹ்மஞானத்திலும் அபரோக்ஷத் தன்மை சம்பவிக்கின்றது; அவ்வியாப்தி தோஷமில்லை.

க. சுவ என்றுல் விஷயங்கள்; அவைகளோ கடமுதலியவற்றைக் கோசரியாதவிருத்தி.

காலத்தில் கடாதிகளாம். அங்ஙனமாயி னும் அதை சேதனமன்று.

௨. சேதனமோ அதன் அதிஷ்டானமுமாம். அது சேதனத்தில் சகல வியவகாரங்க ளுக்கும் ஏதுவாகிய விருத்தியின்மையால் பிரகாசிக்குந்தன்மை வடிவ வியவகாரத் திற்கு அநுகூலமன்று.

௩. தனது வியவகாரத்திற்கு அநுகூலமே விருத்தி அவச்சின்ன சாக்ஷிசேதனமுமாம். அது அக்கடமுதலிய விஷயாகார விருத்தி யின்மையால் அக்கட முதலிய விஷயங் களினும் அபின்னமன்று.

௪. சாக்ஷிசேதனத்தோடு அபேதமோ தர்மா தர்மங்களுக்கும் உளது. அச்சாக்ஷிஅவற் றில் பிரத்தியக்ஷ யோக்கியத்தன்மை யின் மையால், தனது வியவகாரத்திற்கு அநு கூல சேதனமன்று.

சம்சாரதசையிலும் விருத்திவிசிஷ்ட சேதன மாகிய ஜீவனுக்குப் பிரஹ்மத்தோடு அபேத மிருத்தலின் சகல புருஷர்களுக்கும் பிரஹ்மம் அபரோக்ஷமாம் என்னும் வியவகார முண்டாதல்

வேண்டும். அவாந்தரவாக்கியஜந்நிய பிரஹ்மத்தின் ஞானமும் அபரோக்ஷமாதல்வேண்டும். அங்ஙனமாயினும் சம்சார தசையில் ஆவரிக்கப்பட்ட பிரஹ்மத்திற்குத்தனது வியவகாராநுகூல சேதனத்தோடு அபேதமிருக்கின்றது. ஆவரிக்கப்படாத பிரஹ்மவடிவ விஷயத்திற்கு அபேதம் இல்லாதிருத்தலின் பிரஹ்மத்தில் அபரோக்ஷத் தன்மையில்லை.

அங்ஙனமே அவாந்தரவாக்கியஜந்நிய ஞானத்திற்கும் ஆவரிக்கப்பட்ட விஷயத்தோடு அபேதமிருத்தலின், அந்த ஞானத்திற்கு அபரோக்ஷத் தன்மையில்லை. ஆதலால் முற்கூறிய சேதனத்தோடு ஆவரிக்கப்படாத விஷயத்திற்குள்ள அபேதம் விஷயத்தின்கண்ணுள்ள பிரத்தியக்ஷத் தன்மைக்குப் பிரயோஜகமும், ஆவரிக்கப்படாத விஷயத்தோடு முற்கூறிய சேதனத்திற்குள்ள அபேதம் ஞானத்தின்கண்ணுள்ள அபரோக்ஷத் தன்மைக்குப் பிரயோஜகமுமாம்.

ரு௦. க. இதில் இது சங்கையாம்:— சேதனத்தில் கட முதலியன அத்தியஸ்தமாம். விஷயாகாரவிருத்திகாலத்தில் விருத்திசேதனத்தோடு விஷய சேதனத்திற்கு ஏகத்துவ மிருத்த

வின், தன்று அதிஷ்டான விஷயசேதனத்தோடு அபின்னமான கட முதலியவற்றிற்கு விருத்தி சேதனத்தோடு அபேத முண்டாகியும், அதன் உபாதிவடிவ விருத்தியோடு அபேதம்சம்பவிக்கிற தில்லை. இரஜ்ஜுவில் கற்பிதமான சர்ப்பம் தண்டம் மாலை என்பவற்றிற்கு இரஜ்ஜுவோடு அபேத முண்டாகியும் சர்ப்ப தண்டமாலைகளுக்கு ஒன்றற் கொன்று பேதமே உளதாகின்றது; அபேதமில்லை. பிரஹ்மத்திற் கற்பிதமான சகல துவைதங்கட்கும் பிரஹ்மத்தோடு அபேதமுண்டாகியும் பரஸ்பரம் அபேத முண்டாகிறதில்லை. அங்ஙனமே விருத்தி சேதனத்தோடு விருத்திக்கும் கட முதலியவற்றிற்கும் அபேதம் சம்பவிக்கின்றது. அவற்றின் உபாதிவடிவ விருத்திக்கும் கட முதலிய விஷயங்கட்கும் பரஸ்பரம் அபேத முண்டாகிறதில்லை. ஆதலால் விருத்திவடிவப் பிரத்தியக்ஷ ஞானத்தில் முற்கூறிய லக்ஷணத்திற்கு அவ்வியாப்தி யுளது.

ருக. உ. வேறுசங்கை:— சமானகோசர அதாவது ஒரு விஷயமுடைய ஞானமாத்திரத்தால் அஞ்ஞானத்தின் நிவிருத்தி அங்கீகரிக்கின், பரோக்ஷஞானத்தினல் அஞ்ஞானத்தின் நிவிருத்தி உண்டாதல் வேண்டும். இத்தோஷத்தைப்

பரிகரித்தற்பொருட்டு அபரோக்ஷ ஞானத்தினுல் அஞ்ஞானத்தின் நிவிருத்தி சொல்லப்பட்டிருக்கின்றது. அதில் அந்நியோந்நியாசிரயதோஷம் உண்டாகின்றது. ஏனெனில், ஞானத்தினது அபரோக்ஷத்தன்மையின் சித்தியினது அதீனமாய் அஞ்ஞானத்தின் நிவிருத்தி சொல்லப்பட்டிருக்கின்றது. அன்றியும், ஆவரிக்கப்படாத விஷயத்திற்குத் தனது வியவகாராநுகூல சேதனத்தோடு அபேதம் உண்டாக ஞானத்திற்கு அபரோக்ஷத்தன்மை கூறுதலால், அஞ்ஞானத்தினது நிவிருத்தியின் அதீனமாக ஞானத்தின் அபரோக்ஷத்தன்மையினது சித்தி சொல்லப்பட்டது. ஆதலால் பரஸ்பர அபேக்ஷையிருத்தலின் அந்நியோந்நியாசிரயதோஷ முண்டாகின்றது.

இவ்வாறிரண்டு சங்கைகள் உள. அவற்றுள்,

௫௨. க. முதற்சங்கையின் உத்தரம்:— அத்வைத வித்தியாசாரியர்களது முறைப்படி அபரோக்ஷத்தன்மை த்தர்மம் சேதனத்தினதாம்; விருத்தியினதன்று. எங்ஙனம் அநுமிதித்தன்மை இச்சைத்தன்மை முதலியன அந்தக்கரணவிருத்தியின் தர்மங்களோ, அங்ஙனம் அபரோக்ஷத்தன்மைத் தர்மம் விருத்தியிலில்லை. ஆனல் விஷயாகாரவிருத்தி உபகிதசேதனத்தினு

தாயிருத்தலின் சேதனத்தினது அபரோக்ஷத் தன்மையின் உபாதி விருத்தியாம். ஆதலால் விருத்தியில் அதனை ஆரோபித்து விருத்திஞானம் அபரோக்ஷமாமென்னும் வியவகாரமுண்டாகின்றது. விருத்தியின் தர்மமாகக்கொள்ளின், சுக முதலியவற்றைக் கோசரிக்கும் விருத்தியை அங்கீகரியாதபக்ஷத்தில் சாக்ஷிவடிவ அபரோக்ஷ ஞானத்தில் அபரோக்ஷத்தன்மை வியவகாரம் உண்டாகலாகாது; ஆதலால் விருத்தியின் தர்மமன்று. இவ்வாற்றால் விருத்திஞானம் இலக்ஷியமன்று; ஆனால் சேதனஞானம் இலக்ஷியமாம். இதனால் அவ்வியாப்தியில்லை.

ருங. உ. மற்றச்சங்கையின் உத்தரம்:— ஞானமாத்திரத்தால் அஞ்ஞானத்தின் நிவிருத்தியையும் அபரோக்ஷஞானத்தினால அஞ்ஞானத்தின் நிவிருத்தியையும் கூறுவதில்லை. ஆனால் பிரமாணத்தின் மகிமையினால் யாண்டு விஷயத்தோடு ஞானத்திற்குத் தாதாத்மிய சம்பந்தம் உண்டாகின்றதோ அந்த ஞானத்தினால் அஞ்ஞானத்தின் நிவிருத்தி உண்டாகின்றது. பிரமாண மகிமையினால் பாகிய இந்திரிய ஜந்நிய ஞானமும் மகாவாக்கியவடிவப் பிரமாணமகிமையினால் சப்த ஜந்நிய பிரஹ்ம ஞானமும் விஷயத்தோடு தாதாத்

மிய சம்பந்தமுடையவை யாகின்றன. ஆதலால் முற்கூறிய இரண்டு ஞானத்தினுலும் அஞ்ஞானத்தின் நிவிருத்தி உண்டாகின்றது.

எல்லாவற்றிற்கும் உபாதானம் பிரஹ்மமாயிருத்தலின் பிரஹ்மகோசர சகல ஞானங்களுக்கும் தாதாத்மிய சம்பந்தமிருக்கின்றது. ஆதலால் அநுமிதிவடிவப் பிரஹ்மஞானத்தினுலும் அவாந்தரவாக்கிய ஜந்நிய பிரஹ்மத்தின் பரோக்ஷ ஞானத்தினுலும் அஞ்ஞானத்தின் நிவிருத்தி உண்டாதல் வேண்டும். அங்ஙனமாயினும் மகாவாக்கியத்தினுல் ஜீவப்பிரஹ்மங்களின் அபேதகோசரஞான முண்டாகின்றது. அதற்குவிஷயத்தோடு தாதாத்மிய சம்பந்தத்தினையோ பிரமாணத்தின் மகிமையினுற் கூறுவர். அந்நிய ஞானத்திற்குப் பிரஹ்மத்தோடு தாதாத்மிய சம்பந்தமிருக்கின்றது. அது பிரஹ்மத்திற்கு வியாபகத்தன்மை யிருத்தலாலும் எல்லாவற்றிற்கும் உபாதானமாந்தன்மை யிருத்தலாலும் விஷயத்தின் மகிமையினுற் கூறுவதாம். இவ்வாற்ருல் முற்கூறிய அபரோக்ஷ ஞானத்தின் லக்ஷணத்தில் அந்நியோந்நியாசிரய தோஷமுமில்லை ஆதலால் முற்கூறிய லக்ஷணம் தோஷமின்றியதாம். அபரோக்ஷஞானத்தின் லக்ஷணத்தில் மற்

றும் சங்கை சமாதானவடிவவிவாதங்கள் அநேக முள. அவை கடினமாதல்பற்றியும் விரியுமென் றஞ்சியும் விடப்பட்டன. சுருக்கமாக அதன் றன்மைமாத்திரம் அறிவிக்கப்பட்டது. இவ் வாறு பிரசங்கத்தால் பிரத்தியக்ஷ ஞானத்தின் லக்ஷணம் சொல்லப்பட்டது.

எ. ஆந்தரப் பிரத்தியக்ஷப் பிரமையின் பேதத்தினது நிச்சயம் ருச-கக.

ருச. முற்பிரசங்கம் இதுவாம்:— சுத்தாத் மகோசர ப்பிரத்தியக்ஷப்பிரமை இருவகையின தாம். ஒன்று பிரஹ்மகோசரம்; மற்றொன்று பிரஹ்மாகோசரம். பிரஹ்மாகோசரத்தைக் கூறி வந்தோம்.

மகாவாக்கிய ஜந்நியமாய் "யான்பிரஹ்மம்" என்பதாகப் பிரஹ்மத்திற் கபின்னமான ஆத் மாவை விஷயஞ்செய்வது எதுவோ, அதுபிரஹ்ம கோசர சுத்தாத்மகோசரப் பிரத்தியக்ஷப்பிரமை யாம். "யான் பிரஹ்மம்" என்னும் ஞானத்தினை வாசஸ்பதி மனோஜந்நியமென்பர். மற்றவர்கள் மதத்தில் இந்த ஞானம் வாக்கியஜந்நியமாம்.

௫௫. அதன்கண்ணும் இவ்வளவு பேத முண்டு. சம்க்ஷேபசாரீரகத்தின் சித்தாந்தம் இதுவாம்:— மகாவாக்கியத்தினுல் பிரஹ்மத்தின் பிரத்தியக்ஷஞானமே உண்டாகின்றது. என்றும் பரோக்ஷஞானம் மகாவாக்கியத்தினுல் உண்டாகிறதில்லை.

௫௬. பிறநூலாசிரியர்களது மதம் இதுவாம்:— விசாரத்தோடுகூடிய மகாவாக்கியத்தினுல் அபரோக்ஷ ஞானம் உண்டாகின்றது விசாரமின்றிய கேவல வாக்கியத்தினுல் பரோக்ஷ ஞானம் உண்டாகின்றது.

௫௭. எல்லோர் மதத்தினும் "யான் பிரஹ்மம்" என்னும் ஞானம் சுத்தாத்மகோசரமும் பிரஹ்மகோசரமுமாம்; அங்ஙனமே பிரத்தியக்ஷமுமாம். இவ்வர்த்தத்தில் ஒருவருக்கும் விவாதமில்லை.

௫௮. ஜீவேசுவரர்களது சுவரூப நிரூபணத்தையும் நூலாசிரியர்கள் ஆபாஸவாதம் அவச்சேதவாதம் பிம்பப்பிரதிபிம்பவாத முதலிய கிரமத்தால் வெகு விரிவாய் எழுதியிருக்கின்றார்கள். ஆண்டு,

க. ஜீவனது சுவரூபத்திலோ ஏகத்துவ அநேகத்துவங்களின் விவாதமுண்டு.

உ. எல்லோர் மதத்திலும் ஈசுவரன் ஏகனும் சர்வஞ்ஞனும்நித்தியமுத்தனுமாவன்.

ஈசுவரனிடத்து ஆவரணத்தின் நிரூபணம் எவ்வத்வைத நூல்களிலு மில்லை. ஈசுவரனிடத்து ஆவரணத்தைக் கூறுவோர் வேதாந்த சம்பிரதாயத்தினின்றும் விலகியவராவர். ஆனல் நாநா அஞ்ஞானவாதத்தில் பிரஹ்மத்தை விஷயிக்கும் அஞ்ஞானம் ஜீவனை ஆசிரயித்துள்ளதாம். இது வாசஸ்பதியின் மதம். ஆண்டு ஜீவனது அஞ்ஞானத்தால் கற்பிக்கப்பட்ட ஈசுவரனும் பிரபஞ்சமும் நாநாவெனக் கொண்டிருக்கின்றனர். அங்ஙனமாயினும், ஜீவனது அஞ்ஞானத்தாற் கற்பிக்கப்பட்ட ஈசுவரனையும் சர்வஞ்ஞனென்றே கொண்டிருக்கின்றனர். ஈசுவரனிடத்தில் ஆவரணத்தின் அங்கீகாரமில்லை.

ருக. இவ்வாறு வேதாந்தத்தின் அநேகப் பிரக்கிரியைகளிருக்கின்றன. அவற்றில் ஆக்கிரகமில்லை. ஏனெனின், பிரக்கிரியையே மோக்ஷத்திற்கு ஏதுவன்று. ஆனல் அந்தப்பிரக்கிரியையி

னல் தோன்றும் போதம் எதுவோ அது கேவலம் மோக்ஷத்திற்கு ஏதுவாம். ஆதலால்,

க. சேதனத்தில் சம்சார தர்மத்தின் சம்பவ மில்லை.

உ. ஜீவ ஈசுவரர்களுக்குப் பரஸ்பரம் பேதமில்லை.

இவ்வர்த்தத்தினது போதத்தின் பொருட்டு அநேகக்கிரமங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. எந்தப் பக்ஷத்தினுல் அசங்கப் பிரஹ்மாதமாவின் ஞானமுண்டாகின்றதோ, அந்தப்பக்ஷமே ஆதரிக்கததக்கதாம். இது எல்லா நூலாசிரியர்களின் தார்பரியமாம்; இதில் ஒருவருக்கும் விவாதமில்லை.

௩0. இவ்வாறு சுத்தாத்மகோசரப் பிரமைக்கு இரண்டுபேதம் கூறினும். விசிஷ்டாத்மகோசரப் பிரத்தியக்ஷப்பிரமைக்கு அநந்த பேதமுண்டு. "நான் அஞ்ஞன்" "நான் கர்த்தா" "நான் சுகி" "நான் துக்கி" "நான் மனிதன்" என்றல் முதலிய அநந்த பேதமுண்டு.

பாதிக்கப்படாத அர்த்தத்தை விஷயஞ் செய்யும் ஞானம் எதுவோ அது பிரமையெனப்

படுகின்றது. "நான் கர்த்தா" என்றல் முதலிய ஞானத்திற்கு "நான் கர்த்தாவல்லன்" என்றல் முதலிய ஞானத்தால் பாதம் உண்டாகின்றது. அதனைப்பிரமையென்று கூறுதல் பொருந்தாது. என்றாலும் சம்சாரதசையில் பாதிக்கப்படாத அர்த்தத்தினை விஷயஞ்செய்வது எதுவோ அது பிரமையெனப்படுகின்றது. சம்சார தசையில் முற்கூறிய ஞானத்திற்குப் பாதமுண்டாகிற தில்லை; ஆதலால் பிரமையாம்.

இவ்வாற்றால் ஆத்மகோசர ஆந்தரப்பிரத்தியக்ஷப் பிரமையின் பேதம் சொல்லப்பட்டது.

கூக. "என்னிடத்துச் சுகம்" "என்னிடத்திற் றுக்கம்" என்றல் முதலிய சுகமுதலியவற்றைக் கோசரிக்கும் ஞானமும் ஆத்மகோசரப் பிரத்தியக்ஷப்பிரமையாம். ஆனால்,

க. "யான் சுகி" "யான் துக்கி" என்றல் முதலிய பிரமைகளிலோ யான் என்னும் பதத்திற்குப் பொருளாகிய ஆத்மா விசேஷியமும் சுகதுக்க முதலியன விசேஷணமுமாம்.

உ. "என்னிடத்துச் சுகம்" 'என்னிடத்துத் துக்கம்' என்றல் முதலிய பிரமையில்

சுகதுக்க முதலியன விசேஷியமும்
ஆத்மா விசேஷணமுமாம்.

ஆதலால் "என்னிடத்திற் சுகம்" "என்னிடத்திற் துக்கம்" என்றல் முதலிய ஞானத்தினை ஆத்மகோசரப் பிரத்தியக்ஷப்பிரமை யென்று சொல்லார்கள்; ஆனால் சுகமுதலியன விசேஷியமாயிருத்தலின் அநாத்மகோசர ஆந்தரப்பிரத்தியக்ஷப் பிரமையென்பர். இவ்வாறு ஆந்தரப் பிரத்தியக்ஷப் பிரமையின் பேதம் சொல்லப்பட்டது.

அ. பாகியப்பிரத்தியக்ஷப் பிரமையின் பேதத்தைச் சொல்லுதலோடு
சுரோத்திரஜப் பிரமையின் நிச்சயம் சூஉ-எக.

சூஉ. பாகியப் பிரத்தியக்ஷப்பிரமை ஐந்து வகையினதாம். கரணம் சுரோத்திரம், துவக்கு, சக்ஷு, சிங்குவை, கிராணம் என்பனவாம். ஆகலின் அவை பிரத்தியக்ஷப் பிரமாணங்களாம். இவ்விந்திரியங்களாற் றோன்றிய யதார்த்த ஞானம் கிரமமாகச் சுரோத்திரப்பிரமை, துவாசப்பிரமை, சாக்ஷுஷப்பிரமை, இராசனப்பிரமை, கிராணஜப் பிரமை எனப்படுகின்றன.

சஈ௩. சப்தஜந்ய ஞானமும், ஓர் நூலாசிரியர் மதத்தில் கொண்டுள்ள அநுபலப்திப் பிரமாணஜந்ய அபாவத்தின் ஞானமுமாகிய இரண்டும் அபரோக்ஷமாகின்றன. இதனால் பிரத்தியக்ஷப் பிரமைக்கு ஏழுபேதங்கள் சொல்லவேண்டும்.

சஈ௪. அங்ஙனமாயினும், அபாவத்தின் ஞானத்தில் பிரத்தியக்ஷத்தன்மை பரோக்ஷத்தன்மைகளின் விவாதமுண்டு. கடத்திற்போலப் பிரத்தியக்ஷ வஸ்துவில் விவாதம் சம்பவியாது. ஆதலால் அபாவத்தின் ஞானம் பரோக்ஷமென்பதே பொருந்துகின்றது. சப்தஜந்ய ஞானம் பிரத்தியக்ஷம் பரோக்ஷமென இரண்டு வகையினதாம். அவற்றுள் சப்தஜந்யப் பிரத்தியக்ஷ ஞானம் பிரத்தியக்ஷப்பிரமையாம். ஆதலால் பிரத்தியக்ஷப்பிரமைக்கு ஆறுபேத முண்டு; ஏழில்லை. ஆனால் சப்தஜந்யப் பிரத்தியக்ஷபிரமையின் கரணம் இந்திரியமன்று; சப்தமாம். ஆதலால் பிரத்தியக்ஷப் பிரமாணத்திற்கு ஆறுபேதமில்லை.

சஈ௫. இவ்வாற்றால் கூறிய ஐந்து இந்திரியங்களிலும் சுரோத்திரேந்திரியத்தால் சப்தகுணம்,

சப்தத்திலுள்ள சப்தத்தன்மைச்சாதி, சப்தத் தன்மை வியாப்பியமான கத்தன்மை (ககரத்தன்மை) முதலியன, தாரத்தன்மை மந்தத்தன்மைகள் என்பவற்றின் ஞானம் உண்டாகின்றது.

௩௩. சுரோத்திரேந்திரியத்தால் கிரகிக்கப்படும் குணத்தினைச் சத்தமென்பர். அது க. தொனி வடிவம் உ. வர்ணவடிவம் என்னும் பேதத்தால் இருவகைத்தாம்.

க. பேரி முதலிய விடங்களில் உண்டாவது தொனிவடிவம்.

உ. கண்ட முதலிய எட்டிடங்களில் வாயுவின் சையோகத்தால் உண்டாவது வர்ண வடிவம்.

க. தொனிவடிவ சப்தத்தில் தாரத்தன்மை மந்தத்தன்மைவடிவ தர்மங்களிருக்கின்றன.

உ. வர்ணவடிவ சப்தத்தில் கத்துவம் (க எனுந் தன்மை) முதலிய வடிவினவாகிய தர்மங்களுள.

சூஎ. இந்திரியத்தினுல் எதன் ஞானமுண்டாகின்றதோ, அவ்விஷயத்தோடு இந்திரியங்களுக்கு எச்சம்மந்த மிருக்கின்ற தென்பதனைச் சொல்லவேண்டுமாயின் சகல இந்திரியங்களுக்கும் விஷயத்தோடு சம்பந்தம் சொல்லப்படுகின்றது.

யாண்டுச் சுரோத்திரத்தினுல் சப்தத்தின் பிரத்தியக்ஷ முண்டாகின்றதோ, ஆண்டுச்சுரோத்திரத்திற்குச் சப்தத்தோடு சையுக்த தாதாத்மிய சம்பந்தமிருக்கின்றது. ஏனெனின், சுரோத்திரம் ஆகாயத்தின் சத்துவகுண பாகத்தினின்றும் உண்டாயிருக்கின்றது; ஆதலால் காரியரூபத் திரவியமாம். இரண்டு திரவியங்களுக்குச் சையோக முண்டாயிருக்கின்றமையால், சுரோத்திரத்திற்கு ஆகாயத்தோடு சையோக முண்டாயிருக்கின்றது. சையோகமுடையதனைச் சையுக்த மென்பர். ஆதலால் சுரோத்திர சையுக்தம் ஆகாயமாம். அதனேடு சப்தகுணத்திற்குத் தாதாத்மிய சம்பந்தமிருக்கின்றது. ஏனெனின் சித்தாந்தத்தில் க. ஜாதிவியக்திகளுக்கும், உ, குணகுணிகளுக்கும், ங. கிரியை கிரியையுடையவற்றிற்கும், ச. காரிய உபாதானகாரணங்கட்கும் தாதாத்மிய சம்பந்தமுண்டு.

சூ அ.

க. (க) அநேக தர்மிகளிலுள்ள ஒரு தர்மத்தினை ஜாதி யென்பர்.

(உ) ஜாதியின் ஆசிரயத்தினை வியக்தி யென்பர்.

உ. (க) கர்மத்திற்கு வேறான ஜாதிமாத்திரத்தின் ஆசிரயம் அல்லது திரவிய கர்மங்களுக்கு வேறான ஜாதியின் ஆசிரயம் குண மெனப்படும்.

(உ) குணங்களின் ஆசிரயத்தினைக் குணி யென்றும் திரவிய மென்றும் கூறுவர்.

ங. (க) சேஷ்டை (செய்கை) யினைக் கிரியை யென்பர்.

(உ) அதன் ஆசிரயத்தினைக் கிரியையுடையதென்பர்.

ச. (க) உற்பத்தியாகியது எதுவோ அது காரிய மெனப்படும்.

(உ) காரணத்தின் லக்ஷணத்தைச் சொல்லி வந்தோம்.

ஆதலால் சுரோத்திரத்திற்குச் சப்தத்தோடு சுரோத்திர சையுக்த தாதான்மிய சம்பந்தம் சித்தித்தது.

௬௯. இருவகைச் சப்தங்களிலுள்ள சப்தத் தன்மை ஜாதியோடும் அதன் வியாப்பியமான கத்துவாதி, தாரத்துவாதிகளோடும்சுரோத்திரத் திற்குச் சுரோத்திர சையுக்த தாதாத்மியவத் தாதான்மிய சம்பந்தமிருக்கின்றது. தாதாத்மிய முடையதனைத் தாதாத்மியவத் என்பர். அபின்ன மென்றும் கூறுவர். ஆதலால் முற்கூறிய சம்பந்த முடையதா யிருத்தலின் சுரோத்திர சையுக்த தாதாத்மியவத் என்னும் சப்தம் எதுவோ, அதனோடு சப்தத்தன்மை முதலியவற்றிற்குத் தாதாத்மிய முண்டு.

எ௦. ஆகாயத்தோடும் சுரோத்திரத்திற்குச் சையோக சம்பந்தமிருக்கின்றது, சொல்லப்படும் ரசனை கிராணங்களுக்கும் திரவியத்தோடு சையோக மிருக்கின்றது. ஆதலால் இம்மூன்றிந்தி ரியங்களாலும் திரவியத்தின் பிரத்தியக்ஷ முண்டாதல்வேண்டும். சுரோத்திரத்திலும் ரசனை கிராணங்களிலும் திரவியத்தின் பிரத்தியக்ஷத்திற்கு

யோக்கியதை யில்லை. ஆதலால் அச்சம்பந்தம் ஸபலமுடையதன்று; ஆறுற்பயனின்றியதாம்.

எக. சுரோத்திரஜந்நியப் பிரமைக்குச் சுரோத்திரேந்திரியம் கரணமாம். சுரோத்திர சையுக்த தாதாத்மியமும் சுரோத்திர சையுக்த தாதாத்மிய வத் தாதாத்மியமுமாகிய இரண்டு சம்பந்தங்களும் தம் காரணமாகிய சுரோத்திரத்தினின்றும் உண்டாய், அதன் காரியமான சுரோத்திரப் பிரமையை உண்டாக்குகின்றன; ஆதலால் வியாபாரமாம். சுரோத்திரப்பிரமை பயனும்.

கூ. பாகியப் பிரத்தியக்ஷப் பிரமையின் பேதமும் துவசப்பிரமையின் நிச்சயமும்.

எஉ—எஅ.

எஉ. அங்ஙனமே துவக்கிந்திரியத்தினல் ஸ்பரிசம், ஸ்பரிசத்தின் ஆசிரயம், ஸ்பரிசத்தின் ஆசிரிதமான ஸ்பரிசத் தன்மை ஜாதி, அதன் வியாப்பியமான கடினத்தன்மை முதலியன என்னும் இவற்றின் ஞானமுண்டாகின்றது.

எ௩. துவக்கிந்திரியமாத்திரத்தினால் கிரகிக்கப்படும் குணத்தினை ஸ்பரிசமென்பர். அது சீதம், உஷ்ணம், சீதோஷ்ணமின்மை, கடினத்தன்மை (வன்மை) என்னும் பேதத்தால் நான்கு வகையினதாம்.

யாண்டுத் துவக்கினால் திரவியத்தின் பிரத்தியக்ஷ முண்டாகின்றதோ, ஆண்டுத் துவக்கிற்குத் திரவியத்தோடு சையோக மிருக்கின்றது, ஏனெனின், துவக்கிந்திரியம் வாயுவின் சத்துவ குண பாகத்தினின்றும் உண்டாயிருக்கின்றது. ஆதலால் திரவியமாயிருத்தலின் அதற்கு மற்றைத் திரவியத்தோடு சையோகமே யுண்டு.

எச. உற்பூதவுருவமும் உற்பூதஸ்பரிசமுமுடைய பிருதிவி, ஜலம், தேயு என்னும் மூன்று திரவியங்களுக்கும் துவாசப் பிரத்தியக்ஷ முண்டாகின்றது. அநுற்பூத உருவமும் அநுற்பூத ஸ்பரிசமு முடைய பிருதிவி முதலியவற்றின் துவாசப் பிரத்தியக்ஷ முண்டாகிறதில்லை. வாயுவின் குணமாகிய ஸ்பரிசத்தின் துவாசபபிரத்தியக்ஷமோ உண்டாகிறது. வாயுவின் துவாசப் பிரத்தியக்ஷ முண்டாகிறதில்லை. ஏனெனின்,

எரு. இது நியமமாம் :—எந்தத் திரவியத்தில் உற்பூத உருவமுளதாகின்றதோ, அந்தத் திரவியம், அதன் யோக்கிய ஜாதி, அதன் ஆசிரிதமான உருவம் சங்கை முதலிய யோக்கிய குணங்கள் என்பவற்றின் சாக்ஷுஷப்பிரத்தியக்ஷ முண்டாகின்றது. பிறவற்றின் பிரத்தியக்ஷ முண்டாகிறதில்லை.

பிரத்தியக்ஷ யோக்கியத்தினை உற்பூதமென்பர். பிரத்தியக்ஷ அயோக்கியத்தினை அநுற்பூதமென்பர்.

எசா. எந்தத் திரவியத்தில் உற்பூத உருவமும் உற்பூதபரிசமு முளவாகின்றவோ அந்தத் திரவியம், அதன் ஜாதி, அதன் ஆசிரிதமாகிய பிரத்தியக்ஷ யோக்கிய குணங்கள் என்பவற்றின் துவாசப்பிரத்தியக்ஷ முண்டாகின்றது. பிறவற்றின் பிரத்தியக்ஷ முண்டாகிறதில்லை. எங்ஙனம்: கிராணரசன நேத்திரங்களில் உருவம் ஸ்பரிசமென்னும் இரண்டுமிருக்கின்றன. ஆனால் அவை உற்பூதமன்று. ஆதலால் பிருதிவி ஜலதேயுவடிவமாயினும், அவ்விந்திரியங்களின் துவாசப்பிரத்தியக்ஷமும் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷமு முண்டாகிறதில்லை. சாளரத்தின் வழியாய் விழும் சூரிய

கிரணத்தில் மிகச் சூக்ஷ்மமான பொடிகள் தோற்று கின்றன. அவை திரியணுகவடிவப் பிருதிவியாம். அவற்றில் உற்பூதவடிவ முளது. ஆதலால் திரியணுகத்தின் சாக்ஷுஷப் பிரத்தியக்ஷமோ உண்டாகின்றது. உற்பூத ஸ்பரிசமின்மையால் துவாசப்பிரத்தியக்ஷ முண்டாகிறதில்லை. திரியணுகத்தில் ஸ்பரிசமுமுளது; ஆனால் அந்த ஸ்பரிசம் உற்பூதமன்று. வாயுவில் உற்பூத ஸ்பரிசமோ இருக்கின்றது; உருவமில்லை. ஆதலால் வாயுவின் துவாசப்பிரத்தியக்ஷமும் அங்ஙனமே சாக்ஷுஷப் பிரத்தியக்ஷமு முண்டாகிறதில்லை. இதனால், திரவியத்தின் சாக்ஷுஷப்பிரத்தியக்ஷத்தில் உற்பூத உருவமும் துவாசப் பிரத்தியக்ஷத்தில் உற்பூத உருவமும் ஸ்பரிசமும் ஏதுக்களா மென்பது சித்தித்தது.

எஎ. இவ்வாற்றால் யாண்டுத் துவாசப்பிரமையுண்டாகின்றதோ, ஆண்டுத் துவாக்கிந்திரியத்திற்குத் திரவியத்தோடு சையோகமே சம்பந்தமாம். திரவியத்தின் ஆசிரிதமான திரவியத்தின் ஜாதி, துவாசப் பிரத்தியக்ஷத்தின் யோக்கியமான ஸ்பரிசம், சங்கை, பரிமாணம், வேற்றுமை, சையோகம், விபாகம் (பிரிவு), பரத்துவம், (முன்மை),

அபரத்துவம்,(பின்மை), திரவத்துவம் (நெகிழ்ச்சி) என்னும் ஒன்பது குணங்கள் என்பவற்றோடு துவக்கிற்குத் துவக்குளையுக்த தாதாத்மிய சம்பந்த மிருக்கின்றது. ஏனெனின்,

க. ஸ்பரிசத்தில் துவக்கிற்கு யோக்கியதை யிருக்கின்றது; பிறவற்றிற்கில்லை.

உ. உருவத்தில் நேத்திரத்திற்கு யோக்கியதை யிருக்கின்றது; பிறவற்றிற்கில்லை.

சங்கை முதலிய எட்டுக் குணங்களிலும் துவக்கு நேத்திரமென்னும் இரண்டற்கும் யோக்கியதை யிருக்கின்றது.

ங. சுரோத்திரத்திற்குச் சப்தமாத்திரத்தில் யோக்கியதை யிருக்கின்றது.

ச. இரசனைக்கு இரசமாத்திரத்தில் யோக்கியதை யிருக்கின்றது.

ரு. கிராணத்திற்குக் கந்தமாத்திரத்தில் யோக்கியதை யிருக்கின்றது.

ஈண்டு மாத்திரமென்னுஞ் சொல்லால் திரவியத்தில் யோக்கியதையின் நிஷேதமுளது. ஆத

லால் துவக்கினேடு சையோக முடையதாயிருத்தலின், துவக்கு சையுக்த திரவியத்தில் ஜாதிக்கும் குணங்கட்கும் தாதாத்மியமுண்டு. ஸ்பரிச முதலிய குணங்களிலுள்ள ஸ்பரிசத்தன்மை முதலிய ஜாதிகளோடு துவக்கிற்குத் துவக்குசையுக்த தாதாத்மியவத் தாதாத்மிய சம்பந்தமுளது. ஆதலால்,

எஅ. துவக்கினுற்றோன்றும் ஞானத்திற்குத் துவக்கிந்திரியம் கரணமாம். துவக்கு சையோகமும் துவக்கு சையுக்த தாதாத்மியமும் துவக்கு சையுக்த தாதாத்மியவத் தாதாத்மியமுமாகிய மூன்று சம்பந்தங்களும் வியாபாரமாம். துவாசப்பிரமை பயனும்.

கO. பாகியப் பிரத்தியக்ஷப்பிரமையின் பேதமான சாக்ஷுஷப்பிரமையின் நிச்சயம் எகூ—அக.

எகூ. அங்ஙனமே நேத்திரத்தினுல் உற்பூத உருவமுடைய பிருதிவி ஜல தேயுத்திரவியங்கள், அவற்றின் ஆசிரிதமான யோக்கிய ஜாதிகள், உருவம் சங்கை முதலிய ஒன்பது யோக்கியகுணங்

கள் என்பவற்றின் பிரத்தியக்ஷ முண்டாகின்றது. நேத்திரேந்திரிய மாத்திரத்தால் கொள்ளப்படும் குணத்தை உருவமென்பர். அது வெண்மை, கருமை, பொன்மை, செம்மை, பசுமை, புகைமை, சித்திரமென்னும் பேதத்தால் எழுவகைத்தாம்.

அ0. ஆண்டுத் திரவியத்தோடு நேத்திரத்திற்குச் சையோகமே யுளது. திரவியத்தன்மை ஜாதியோடும் உருவ முதலிய குணங்களோடும் நேத்திரசையுக்த தாதாத்மியமுளது. உருவமுதலிய குணங்களின் ஆசிரிதமான உருவத்தன்மை முதலிய ஜாதியோடு நேத்திரசையுக்த தாதாத்மியவத் தாதாத்மிய முளது. ஆதலால்,

அக. நேத்திரத்தாற்றோன்றும் ஞானத்திற்கு நேத்திரம் கரணமாம். நேத்திரசையோகமும் நேத்திரசையுக்த தாதாத்மியமும் நேத்திரசையுக்த தாதாத்மியவத் தாதாத்மியமுமாகிய மூன்று சம்பந்தங்களும் வியாபாரமாம். சாக்ஷாஷப்பிரமை பயனும்.

கக. பாகியப்பிரத்தியக்ஷப் பிரமையின் பேதமான இரசனப் பிரமையின் நிர்ணயம் அஉ—அச.

அஉ. அங்ஙனமே இரசனையினால் இரசம், அதன் ஆசிரிதமான இரசத்தன்மை என்பவை மாத்திரத்தின் ஞானமுண்டாகின்றது. இரசனையினால் கொள்ளப்படும் குணத்தினை இரசமென்பர். அது தித்திப்பு, புளிப்பு, உவர்ப்பு, கைப்பு, துவர்ப்பு, கார்ப்பு என்னும் பேதத்தால் அறுவகைத்தாம்.

அங. ஆண்டு இரசத்தோடு இரசனைக்கு இரசனசையுக்த தாதான்மியமும், இரசத்தன்மையோடும் அதன் வியாப்பியமான மதுரத்தன்மை முதலியவற்றோடும் இரசனசையுக்த தாதாத்மியவத் தாதாத்மியமு முண்டு. ஆதலால்,

அச. இரசனத்தாற் றோன்றும் ஞானத்திற்கு இரசனேந்திரியம் கரணமாம். இரசனசையுக்த தாதாத்மியமும் இரசனசையுக்த தாதாத்மியவத் தாதாத்மிய சம்பந்தமும் வியாபாரமாம். இராசனப்பிரமை பயனும்.

கஉ. பாகியப் பிரத்தியக்ஷப் பிரமையின் பேதமான கிராணஜப் பிரமையின் நிர்ணயமும் சாமக்கிரியின் அநுவாதத்தோடு பிரத் தியக்ஷப் பிரமையின் உபசங்காரமும்.

அரு—அஅ.

அரு. அங்ஙனமே கிராணத்தினுல் கந்த குணம், அதன் ஆசிரிதமான கந்தத்தன்மை ஜாதி, அதன் வியாப்பியமான சுகந்தத்தன்மை துர்க் கந்தத்தன்மைகள் என்பவற்றின் ஞானம் உண் டாகின்றது. கிராணத்தினுல் கொள்ளப்படும் குணத்தினைக் கந்தமென்பர். அது சுகந்த துர்க் கந்த பேதத்தால் இருவகைத்தாம்.

அசா. ஆண்டுக் கிராணத்திற்குக் கந்தத் தோடு கிராண சையுக்த தாதாத்மிய சம்பந்த முளது. கந்தத்தன்மையோடு கிராண சையுக்த தாதாத்மியவத் தாதாத்மியமுளது. ஆதலால்,

அஎ. கிராணத்தாற் றோன்றும் யதார்த்த ஞானத்திற்குக் கிராண இந்திரியம் கரணமாம். முற்கூறிய இரண்டு சம்பந்தங்களும் வியாபாரங்களாம். கிராணஜப்பிரமை பயனும்.

அஅ. இவ்வாற்றால் ஐவகைப் பாகியப்பிரத்தியக்ஷப் பிரமைகளெவையோ அவை பயனும். அவற்றிற்குச் சுரோத்திர முதலிய பஞ்சேந்திரியங்கள் கரணமாம். அவற்றிற்குச் சையோகம், சையுக்த தாதாத்மியம், சையுக்த தாதாத்மியவத் தாதாத்மியம் என்னும் மூன்று சம்பந்தங்களும் வியாபாரமாம். இவ்வாறு சுருக்கமாய்ப் பிரத்தியக்ஷப்பிரமை கூறப்பட்டது.

பிரத்தியக்ஷப் பிரமாணநிரூபணமென்னும்
இரண்டாவது ரத்நம் முடிந்தது.



மூன்றாவது ரத்நம்.

௨. அநுமானப்பிரமாண நிருபணம்

௮௯—௧௦௪.

௧௩. சாமக்கிரியோடு அநுமிதிப் பிரமையின் நிச்சயம்.

௮௯—௯௬.

௮௯. அநுமிதிப்பிரமையின் காரணம் அநுமானப்பிரமாண மெனப்படும்.

இலிங்கஞானத்தாற் றோன்றும் ஞானம் அநுமிதி யெனப்படும். எங்ஙனம்: பர்வதத்தில் புகையின் பிரத்தியக்ஷ ஞானமுண்டாய் வந்நியின் ஞானமுண்டாகின்றது. ஆண்டுத் தூமத்தின் பிரத்தியக்ஷ ஞானம் லிங்கஞான மெனப்படும். அதனால் வந்நியின் ஞானம் உண்டாகின்றது. ஆதலால் பர்வதத்தில் வந்நியின் ஞானம் அநுமிதியாம்.

எதன் ஞானத்தால் சாத்தியத்தின் ஞானமுண்டாகின்றதோ, அது லிங்கமெனப்படும்.

அநுமிதிஞானத்தின் விஷயம் சாத்திய மெனப்படுகின்றது. அநுமிதிஞானத்தின் விஷயம் வஹ்நியாம். ஆதலால் அது சாத்தியமாம் (துணி பொருளாம்,

புகை ஞானத்தால் வன்னிவடிவ சாத்தியத்தின் நிச்சயமுண்டாகின்றது. ஆதலால் தூமம் (புகை) இலிங்கமாம். வியாப்பியத்தின் ஞானத்தால் வியாபகத்தின் ஞானம் உண்டாகின்றது. ஆதலால்,

வியாப்பியத்தினை இலிங்கமென்பர்.

வியாபகத்தினைச் சாத்திய மென்பர்.

வியாப்தியுடையதனை வியாப்பிய மென்பர்.

வியாப்தியின் நிரூபகத்தை வியாபக மென்பர்.

அவிநாபாவரூப சம்பந்தத்தை வியாப்தி யென்பர்.

எங்ஙனம்: தூமத்தில் வஹ்நியின் அவிநாபாவரூப சம்பந்த மிருக்கின்றது. அதுவே தூமத்தில் வஹ்நியின் வியாப்தியாம். ஆதலால் தூமம் வஹ்நியின் வியாப்பியமாம். அந்த வியாப்

நிரூப சம்பந்தத்தின் நிரூபகம் வந்நியாம். ஆதலால் தூமத்தின் வியாப்பியம் வந்நியன்று.

எஃது இன்றி எது அமையாதோ, அதன் அவிநாபாவரூப சம்பந்தம் அதன்கட் சொல்லப்படுகின்றது. வந்நியின்றித் தூம முண்டாகிறதில்லை யாகலின் வந்நியின் அவிநாபாவ ரூப சம்பந்தம் தூமத்திலுளது. வந்நியில் தூமத்தின் அவிநாபாவமில்லை. ஏனெனின் காய்ச்சிய இரும்பில் தூமமின்றி வந்நியுளது. ஆதலால் தூமத்தின் வியாப்பியம் வந்நி யன்று; வந்நியின் வியாப்பியம் தூமமாம்.

கூ0. ஆதலால் யாண்டு அநுமிதி யுண்டாகின்றதோ, ஆண்டு முதலில் அடுக்களை முதலியவற்றில் அடிக்கடித் தூம வந்நிகளின் உடனிகழ்ச்சியைக் கண்டு, மூலம் கண்டிக்கப்படுதலின்றிய உயர்ந்த தூமரேகையில் வந்நியினது வியாப்தியின் பிரத்தியக்ஷவடிவ நிச்சய முண்டாகின்றது.பர்வத முதலியவற்றில் ஏதுவின் பிரத்தியக்ஷ முண்டாகின்றது. அதன் பின்னர்ச் சம்ஸ்காரத்தின் உற்பவமுண்டாய் வியாப்தியின் ஸ்மிருதியுண்டாகின்றது. அதன் பின்னர்

"வந்நியுடையது பர்வதம்" என்னும் அநுமிதி ஞான முண்டாகின்றது.

கூக. ஆண்டு, வியாப்தியின் அநுபவம் கரணம்; வியாப்தியின் ஸ்மிருதி வியாபாரம். பக்ஷத்தில் சாத்தியத்தின் ஞான வடிவ அநுமிதி பயன்.

இவ்வாற்ருல் வாக்கியப்பிரயோகமின்றி வியாப்திஞான முதலியவற்ருல் உண்டாகும் அநுமிதி சுவார்த்தாநுமிதி யெனப்படும். அதன் கரணமாகிய வியாப்திஞான முதலியன சுவார்த்தாநுமான மெனப்படும்.

கூஉ. யாண்டு, இருவருக்கு விவாத முள தாகின்றதோ, ஆண்டு வந்நிநிச்சயமுள்ள புரு டன் தன் பிரதிவாதியை நிவர்த்தித்தற் பொருட்டு வாக்கியப்பிரயோகஞ் செய்கின்ருன் அதனைப் பரார்த்தாநுமான மென்பர்.

கூங. அவ்வாக்கியம் வேதாந்தமதத்தில் மூன்று அவயவங்களினதாம். பிரதிஞ்ஞை ஏது உதாகரணம் என்பன வாக்கியத்தினது அவய

வங்களின் பெயர்களாம். "பர்வதம் வந்நி யுடைத்து, புகையுடைமையால், யாது யாது புகையுடைத்து அது அது வந்நியுடைத்து, அடுக்களைபோல" என்னும் இத்துணை மகா வாக்கியமாம். அதன்கண் மூன்று அவாந்தர வாக்கியங்களுள. அவற்றிற்குப் பிரதிஞ்ஞை முதலியன முறையே பெயர்களாம்.

கூச. சாத்தியவிசிஷ்ட (துணிபொருளை யடுத்த) பக்ஷத்தையறிவிக்கும் வாக்கியம் பிர திஞ்ஞாவாக்கிய மெனப்படும். இத்தன்மையது "பர்வதம் வந்நியுடைத்து" என்னும் வாக்கிய மாம். வந்நிவிசிஷ்டம் பர்வதம் என்னும் உணர்ச்சி இவ்வாக்கியத்தா லுண்டாகின்றது. ஆண்டு,

க. வந்நி சாத்தியம்.

உ. பர்வதம் பக்ஷம்.

ங. பிரதிஞ்ஞா வாக்கியத்திற்குப் பின் இலிங்கத்தை யறிவிக்கும் வாக்கியம் எதுவோ அது ஏதுவாக்கிய மெனப் படும். இத்தன்மையவாக்கியம் "புகை யுடைமையால்" என்பதாம்.

ச. ஏதுசாத்தியங்களின் உடனிகழ்ச்சியை யறிவிக்கும் திருஷ்டாந்தத்தினைப் பிரதிபாதிக்கும் வாக்கியம் உதாகரண வாக்கிய மெனப்படும்.

வாதி பிரதிவாதிகளுக்கு யாண்டு விவாத முண்டாகவில்லையோ, ஆனால் இருவருக்கும் நிச்சயமான பொருள் யாண்டு உளதாகின்றதோ, அது திருஷ்டாந்தமெனப்படும்.

கூரு. இவ்வாற்றால் பிரதிஞ்ஞை முதலிய மூன்றும் அவாந்தர வாக்கியங்களாம். அவற்றின் சமுதாய வடிவ மகா வாக்கியத்தினால் விவாதத்தின் நிவிருத்தி யுண்டாகின்றது. மகாவாக்கியத்தைக் கேட்டுப் பிரதிவாதி ஆக்கிரகஞ் செய்வானாயின், அல்லது வியபிசாரத்தின் சங்கை யுண்டாமாயின், தர்க்கத்தினால் அதன் நிவிருத்தி யுண்டாகின்றது. ஆதலால் பிரமாணத்தின் சககாரி தர்க்கமாம்.

அநிஷ்டத்தினைச் சம்பாதித்தலைத் தர்க்க மென்பர்.

௬௬. இவ்வாற்றுல்,

௧. மூன்று அவயவங்களின் சமுதாயவடிவ மகாவாக்கியத்தினைப் பரார்த்தாநுமானமென்பர்.

௨. அதன்பின் உண்டாகும் அநுமிதி யாதோ அது பரார்த்தாநுமிதி யெனப்படும்.

௧௪. வேதாந்தத்தில் உபயோகமுள்ள அநுமானத்தின் நிச்சயம் ௬௭-௧௦௧.

௬௭. வேதாந்த வாக்கியங்களினுல் ஜீவனிடத்துப் பிரஹ்மத்தின் அபேதம் நிச்சயிக்கப்பட்டிருக்கின்றது. அது அநுமானத்தினுலும் இவ்வாறு சித்திக்கின்றது:—“ஜீவன் பிரஹ்மாபின்னன்; சேதனத்தன்மையால்; யாண்டு யாண்டுச் சேதனத்தன்மை ஆண்டாண்டுப் பிரஹ்மாபேதமுண்டு; பிரஹ்மத்திற்போல.” இது மூன்று அவயவங்களின் சமுதாய வடிவ மகாவாக்கியமாம்; ஆதலாற் பரார்த்தாநுமானமெனப்படுகின்றது. ஈண்டு,

௧. ஜீவன் பக்ஷம்.

௨. பிரஹ்மாபேதம் சாத்தியம்.

௩. சேனத்துவம் ஏது.

௪. பிரஹ்மம் திருஷ்டாந்தம்.

௯௮. ஈண்டுப் பிரதிவாதி ஜீவனிடத்துச் சேதனத்தன்மை ஏதுவோ விருக்கின்றது பிரஹ்மாபேதவடிவ சாத்தியமில்லை யென்றிவ்வாறு பக்ஷத்தில் சேதனத்தன்மையேதுவிற்குப் பிரஹ்மாபேதவடிவச் சாத்தியத்தோடு வியபிசாரசங்கை செய்யின் தர்க்கத்தினுல் அச்சங்கையை நிவிருத்தி செய்வாம்.

௯௯. ஈண்டுத் தர்க்கத்தின் சுவரூபம் இதுவாம்:—ஜீவனிடத்தில் சேதனத்தன்மையாகிய ஏதுவைக்கொண்டு பிரஹ்மாபேதவடிவ சாத்தியத்தைக் கொள்ளாவிடின், சேதனத்திற்கு அத்துவிதீயத்தன்மையைப் பிரதிபாதிக்கும் சுருதிகளுக்கு விரோதமுண்டாகும்.

அநிஷ்டத்தைச் சம்பாதிப்பதனைத் தர்க்கமென்பர்.

சுருதிக்கு விரோதம் சகல ஆஸ்திகர்களுக்கும் அநிஷ்டமாம்.

௧00. "வியாவகாரிகப் பிரபஞ்சம் மித்தை; ஞானத்தால் நிவிருத்திக்கப்படுந்தன்மையால்; யாண்டு யாண்டு ஞானத்தால் நிவிருத்திக்கப்படுந் தன்மை யுண்டோ, ஆண்டாண்டு மித்தியாத் தன்மை யுண்டு; இப்பிவெள்ளி முதலியவற்றிற் போல." என்டு,

க. "வியாவகாரிகப் பிரபஞ்சம்" பக்ஷம்.

உ. "மித்தியாத்தன்மை" சாத்தியம்.

ந. "ஞானத்தால் நிவிருத்திக்கப்படுந் தன்மை" ஏது.

ச. "வியாவகாரிகப் பிரபஞ்சம் மித்தை" என்பது பிரதிஞ்ஞாவாக்கியம்.

"ஞானத்தால் நிவிருத்திக்கப்படுந் தன்மையால்" என்பது ஏதுவாக்கியம்.

ரு. "யாண்டு யாண்டு ஞானத்தால் நிவிருத்திக்கப்படுந்தன்மையோ, ஆண்டாண்டு மித்தியாத்தன்மையுண்டு; இப்பி

வெள்ளி முதலியவற்றிற் போல"
என்பது உதாகரணவாக்கியம்.

கOக. ஈண்டும் பிரபஞ்சத்திற்கு ஞானத்தால் நிவிருத்திக்கப்படுந்தன்மையை அங்கிகரித்து மித்தியாத்தன்மையை அங்கிகரியாவிடின், சத்திற்கு ஞானத்தினுல் நிவிருத்தி பொருந்தாமையால் ஞானத்தினுல் சகலப் பிரபஞ்சத்தின் நிவிருத்தியைப் பிரதிபாதிக்கும் சுருதிஸ்மிருதிகளுக்கு விரோதமுண்டாகும் என்னும் தர்க்கத்தால் வியபிசாரசங்கையின் நிவிருத்தி உண்டாகின்றது.

கரு. நியாய வேதாந்தங்களின் மதத்தில் அநுமானத்தைக் கொள்ளுதலின் நிர்ணயம் கOஉ-கOச.

கOஉ. இவ்வாற்றுல் வேதாந்த அர்த்தத்தை அநுசரித்த அநேக அநுமானங்களுள. ஆனுல் அநுமானப்பிரமாணம் வேதாந்த வாக்கியத்தினுல் அத்துவிதீயப் பிரஹ்மத்தின் எந்த நிச்சயமுண்டாகின்றதோ, அதன் சம்பாவனை (பொருத்த) மாத்திரத்திற்கு ஏதுவாம். சுவதந்திர

அநுமானம் பிரஹ்ம நிச்சயத்திற்கு ஏதுவன்று. ஏனெனின், வேதாந்தவாக்கியமின்றிய வேறு பிரமாணங்கட்குப் பிரஹ்மத்திற் பிரவிருத்தி யில்லை யென்பது சித்தாந்தம்.

கОங. நியாயமதத்தில் க. கேவலாந்வயி உ. கேவலவியதிரேகி ங. அந்வயிவியதிரேகி என்னும் பேதத்தால் மூவகை அநுமானம் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது.

க. எதில் ஏது சாத்தியங்களின் உடனிகழ்ச்சி யுணர்வால் ஏதுவில் வியாப்தியின் ஞானம் உண்டாகின்றதோ, அது அந்வயியநுமான மெனப்படும்.

உ. எதில் சாத்தியாபாவத்தில் ஏதுவபாவத்தின் உடனிகழ்ச்சிக் காட்சியால் ஏதுவில் சாத்தியத்தினது வியாப்தியின் ஞானமுண்டாகின்றதோ, அது கேவலவியதிரேகியநுமான மெனப்படும்.

கேவலாந்வயி யநுமானத்தில் அந்வயத்தின் உடனிகழ்ச்சிக்கு உதாகரணம் கிடைக்கின்றது. கேவலவியதிரேகி யநுமானத்தில் வியதிரேகத்

தினது உடனிகழ்ச்சியின் உதாகரணம் கிடைக்கின்றது. இது வேற்றுமையாம்.

௩. எதில் இரண்டற்கும் உதாரணம் கிடைக்கின்றதோ, அது அந்வயிவியதிரேகியநுமான மெனப்படும். இத்தன்மைய அநுமானம் "பர்வதம் வன்னியுடைத்து" என்பதாம். இதனைப் பிரசித்தாநுமான மென்பர்.

ஈண்டு, அந்வயத்தின் உடனிகழ்ச்சிக்கு உதாரணம் அடுக்களேயாம்; வியதிரேகத்தின் சகசாரத்திற்கு (உடனிகழ்ச்சிக்கு) உதாரணம் மடுவாம்.

இவ்வாறு மூவகை யநுமானங்களை நையாயிகர் கூறுவர்.

கOச. வேதாந்தமதத்தில் கேவல வியதிரேகியின் பிரயோஜனம் அர்த்தாபத்தியினுல் உண்டாகிறது. கேவலாந்வயியநுமான மென்பதொன்றில்லை. ஏனெனின், சர்வ பதார்த்தங்களுக்கும் பிரஹ்மத்தில் அபாவ முண்டு. ஆதலால் வியதிரேக சகசாரத்திற்கு உதாரணமாகப் பிரஹ்மம் கிடைக்கின்றது.

விருத்திஞானத்திற்கு விஷயமாந்தன்மை வடிவ ஜ்ஞேயத்தன்மை பிரஹ்மத்திலுளது. அதன் அபாவம் பிரஹ்மத்திற் பொருந்தாது. என்றுலும் ஜ்ஞேயத்தன்மை முதலியன மித்தையாம். மித்தியா பதார்த்தமும் அதன் அபாவமும் ஒரு அதிஷ்டானத்தி லிருக்கின்றன. ஆதலால் எதனை நையாயிகர் அந்வயிவியதிரேகி என்பரோ, அதுவே அந்வயி யென்னும் ஒருவகை அநுமானமாகக் கொள்ளப்பட்டிருக்கின்றது. விசாரதிருஷ்டியினுல் கேவலவியதிரேகி யநுமானமும் அர்த்தாபத்தியின் வேருகக் கொள்ளுதற்குரியதா மென்பது வேதாந்தத்தின் மதம்.

வேதாந்த வாக்கியத்திஞல் அத்வைதப் பிரஹ்மத்தின் எந்த நிச்சய முண்டாயிருக்கின்றதோ, மனனவாயிலாக அதன் சம்பாவனை மாத்திரத்திற்கு எதுவாம் அநுமானப் பிரமாணம்; சுவதந்திரமாகப் பிரஹ்மநிச்சயத்திற்கு எதுவன்று. இது அநுமானத்தின் பிரயோஜனமாம்.

இவ்வாறு சுருக்கமாக அநுமானப்பிரமாணம் சொல்லப்பட்டது.

அநுமானப்பிரமாண நிரூபணமென்னும்
மூன்றுவது ரத்நம் முடிந்தது.

நான்காவது ரத்நம்.

௩. உபமானப்பிரமாண நிரூபணம் ௧௦௫—௧௧௪.

௧௬. வியவகாரத்தில் உபயோகியான உபமிதி உபமானங்களின் சாதிருசியத் தோடு கூடிய சுவரூபம் ௧௦௫-௧௦௭.

௧௦௫. உபமிதிப்பிரமையின் காரணம் உபமானப் பிரமாணமெனப்படும்.

வேதாந்தமதத்தில் உபமிதி உபமானங்களுக்கு இது சுவரூபமாம்:—நகரத்தில் கோவியக்தியை (ஆவின் பிண்டத்தை)க் காண்பவன் வனத்திற்சென்று கவயத்தை (காட்டாவை)க் காணுங்காலத்து அவனுக்கு "இப்பசு ஆவையொத்ததாம்" என்னும் பிரத்தியக்ஷ முண்டாகின்றது. அதன்பின்னர் "என் ஆ இப்பசுவினையொத்ததாம்" என்னும் ஞானமுண்டாகின்றது. ஆண்டு,

௧. கவயத்தி (ஆமாவி)ல் கோ (ஆ) ஒப்புமை யின் ஞானம் உபமானப்பிரமாண மெனப்படுகின்றது.

௨. கோவில் கவயத்தின் சாதிருசிய (ஒப்புமை) ஞானம் உபமிதியெனப் படும்.

௩. ஆதலால், சாதிருசிய ஞானத்தாற்றோன் றும் ஞானவடிவ உபமிதி கோவில் கவயத்தின் சாதிருசியஞானமாம்.

௪. அதன் கரணம் கவயத்தில் கோவின் சாதிருசிய ஞானமாம். அதுவே உப மானமாம்.

௧0௫. பேதத்தோடுகூடிய சமானதர்மத் தினை (ஒத்த இயல்பினை)ச் சாதிருசியமென்பர். எங்ஙனம்: கோவின் பேதத்தோடுகூடிய சமான அவயவம் கவயத்திலிருக்கின்றது. அதுவே கோவின் சாதிருசியமாம். கோவின் சமான தர்மம் கோவிலுளது; பேதமில்லை. கோவின் பேதம் குதிரையிலுளது; சமானதர்மமில்லை. ஆதலால் சாதிருசியமன்று. சந்திரனது பேதத்தோடு கூடிய சுகத்தை யுண்டுபண்ணுந்தன்மை வடிவ

சமான தர்மம் முகத்திலுளது; அதுவே முகத்தில் சந்திரனது சாதிருசியமாம்.

௧0எ. முற்கூறிய ஞானத்தினையே உபமிதியெனக்கொள்ளின், ஆத்மாவினிடத்து எதன் சாதிருசியமுமில்லை. இதனால் ஜிஞ்ஞாசுவுக் கநுகூல உதாரணம் கிடைப்பதில்லை.

௧எ. ஜிஞ்ஞாஸுவுக்கநுகூலமான உபமிதி உபமானங்களின் சுவரூபம்

௧0அ-௧௧௪.

௧0அ. அசங்கத்தன்மை முதலிய தர்மங்களினால் ஆகாயத்திற்கொப்பானது ஆத்மாவாம். ஆதலால் ஆகாயத்தில் ஆத்மாவின் ஒப்புமை ஞானம் உபமானமாம். ஆத்மாவில் ஆகாயத்தின் ஒப்புமை ஞானம் உபமிதியாம். அங்ஙனமாயினும், எவ்வதிகரணத்தில் எப்பதார்த்தத்தினது அபாவத்தின் ஞானம் உளதாகின்றதோ, ஆண்டு அபாவ ஞானத்தில் பிரமபுத்தி (மயக்க வுணர்ச்சி) உண்டாதலின்றி அவ்வதிகரணத்தில் அப்பதார்த்தத்தின் ஞானம் உளதாதலில்லை. எங்ஙனம்: ஆத்மாவில் கர்த்திருத்தன்மை முதலியவற்றின்

அபாவ ஞானம் உண்டாய், நியாயமுதலிய சாஸ்திரங்களைக் கேட்டும், முதல் ஞானத்தில் பிரமபுத்தி யுண்டாதலின்றிக் "கர்த்தா போக்தா ஆத்மா" என்னும் ஞானம் உண்டாதலில்லை.

எவனுக்கு வேதாந்த அர்த்தத்தை நிச்சயஞ் செய்து நையாயிகர் முதலியோரது குசங்கத்தால் "கர்த்தா போக்தா ஆத்மாவரம்" என்னும் ஞானம் உண்டாகின்றதோ, ஆண்டு அது முதல் ஞானத்தில் பிரமபுத்தி யுண்டாய் உண்டாகின்றது. முதல் ஞானத்தில் பிரமபுத்தி யுண்டாதலின்றி விரோதி ஞானம் உண்டாகிறதில்லை. அந்தப் பிரமபுத்தி பிரமவடிவினதாகுக; அல்லது யதார்த்தமாகுக; இதில் ஆக்கிரகமில்லை. ஆனால் பிரமபுத்தியில் பிரமத்தன்மை நிச்சயமுண்டாகலாகா தென்னும் ஆக்கிரகமுண்டு.

இவ்வாற்றால் எக்காலத்தில் குருவாக்கியங்களால் ஜிஞ்ஞாசுவுக்கு, ஆகாயமுதலிய சகலப் பிரபஞ்சங்களும் கந்தர்வ நகரம்போலத் திருஷ்டநஷ்ட சுபாவமாம் (பார்த்தபொழுதே அழியும் இயல்பினவாம்), அதனின் விலக்ஷண சுபாவமும் ஆத்மாவுக்குளது, ஆகாயமுதலியவற்றில் ஆத்மாவின் ஒப்புமை சிறிதுமில்லையென்னும் திட

நிச்சயமுண்டாகின்றதோ. அக்காலத்தில் ஆகாயத்திற்கும் ஆத்மாவிற்கும் ஒப்புமை ஞானம் சம்பவியாது. ஆதலால் உத்தம ஜிஞ்ஞாசுவுக்கநுகூலமான சித்தாந்தத்தினது உபமிதியின் உதாரணங் கிடைக்கிறதில்லை.

௧0௬. அங்ஙனமாயினும், சாதிருசியஞான ஜந்நியஞானம் (ஒப்புமையுணர்ச்சியாற்றோன்றிய உணர்வு) அல்லது வைதர்மிய ஞானஜந்நிய ஞானம் (வேற்றியல் உணர்ச்சியாற் றோன்றிய ஞானம்) என்னும் இரண்டனுள் யாதேனும் ஒன்றுளதாயின் அது உபமிதி யெனப்படும்.

கட்கமிருகமென்னும் காண்டாமிருகத்தில் ஒட்டையின் வைதர்மிய ஞானத்தால் ஒட்டையினிடத்துக் காண்டாமிருகத்தின் வைதர்மிய ஞானம் உண்டாகின்றது. பிருதிவியில் ஜலத்தின் வைதர்மியஞானத்தினுல் ஜலத்திற் பிருதிவியின் வைதர்மிய ஞானமுண்டாகின்றது. ஆதலால் ஒட்டையினிடத்துக் காண்டாமிருகத்தின் வைதர்மிய ஞானமும் ஜலத்திற்பிருதிவியின் வைதர்மிய ஞானமும் உபமிதியாம். அதன் கரணம் உபமானமெனப்படும். ஈண்டுக் காண்டாமிருகத்தில்

ஒட்டையின் வைதர்மியஞானமும் பிருதிவியில் ஜலத்தின் வைதர்மியஞானமும் காரணமாயிருத்தலின் உபமானமாம்.

கக0. அன்றியும், விபரீதமாகவும் உபமான உபமிதித்தன்மைகள் சம்பவிக்கின்றன. இந்திரிய சம்பந்தத்தில் சாதிருசிய ஞானம் உபமானமாம். இந்திரியத்தின் மறைபட்டதில் சாதிருசிய ஞானம் உபமிதியாம். அங்ஙனமே பிரபஞ்சத்தில் ஆத்மாவினது வைதர்மியத்தின் ஞானம் உபமானமாம். பிரபஞ்சத்தில் ஆத்மாவின் வைதர்மிய ஞானத்தால் ஆத்மாவினிடத்துண்டாம் பிரபஞ்சத்தின் வைதர்மியஞானம் உபமிதியாம்.

கககக. நியாயமதத்திலோ சம்ஞைக்கு சம்ஞியிலுள்ள வாச்சியத்தன்மையின் ஞானம் உபமிதியாம். அது வியவகாரத்தில் உபயோகியாம். எங்ஙனம் சாதிருசிய ஞானத்தினால் உபமிதி உண்டாகின்றதோ, அங்ஙனமே விதர்ம ஞானத்தினாலும் உண்டாகின்றது. ஒருவன் காண்டாமிருகத்தின் வாச்சியத்தை யறியாது ஆரண்யபுருஷனினின்றும் ஒட்டையின் "விதர்மமுடையதாய்க் கொம்போடு கூடிய மூக்கினையுடையது காண்டா

மிருகமென்னும் பதத்திற்கு வாச்சியமாம்'' என்னும் வாக்கியத்தைக்கேட்டு, வாக்கியார்த்தாநுபவத்திற்குப்பின் வனத்திற் சென்று ஒட்டையின் விதர்மமான காண்டாமிருகத்தின் பிரத்தியக்ஷத்தினுல் முற்கூறிய பிண்டத்தில் காண்டாமிருக பதத்தின் வாச்சியத்தன்மையை அறிகின்றுன்.

விருத்ததர்மமுடையதனை விதர்ம மென்பர்.

விருத்ததர்மத்தினை வைதர்மிய மென்பர்.

காண்டாமிருகத்தில் ஒட்டையின் விருத்தமான தர்மம் குறுகிய கழுத்து முதலியனவாம். பிருதிவியில் ஜலமுதலியவற்றினும் விருத்ததர்மம் கந்தமாம்.

சாரத்தைக் கிரகிப்பவனது திருஷ்டியினுல் முற்கூறிய விதத்தை அங்கீகரிக்கின் சித்தாந்தத்தில் ஆனியில்லே; மாருன அநுகூலத்தன்மையுளது. அதன் சித்தாந்தத்திற் கநுகூலமானது இவ்வுதாரணமாம்.

கக௨. ஆத்மாவென்னும் சொல்விற்குப் பொருள் யாது என்னும் வினுவிற்குத் "தேக

முதலிய வைதர்மமுடையது ஆத்மா" என்று கூறும் குருவின் விடையால் அநித்தியமும் அசுசியும் துக்க சுவரூபமுமான தேகாதிகளினும் விதர்மமான நித்திய சுத்த ஆநந்தரூபம் ஆத்மாவென்னும் சொல்லிற்கு வாச்சியமாம். இவ்வாறு ஏகாந்தமாகிய இடத்திலிருந்து விவேகிக்குங்காலத்தில் மனதிற்கு ஆத்மாவோடு சையோகமுண்டாய் உபமிதிஞான முண்டாகின்றது. முற்றும் நையாயிகர் கிரமத்தில் வெறுப்புளதாயின் முதற்கூறிய சித்தாந்தத்தின் கிரமமே அங்கீகரிக்கத்தக்கதாம்.

கக௩. ஆனல் "வியாபாரமுடைய அசாதாரணகாரணம் கரண மெனப்படும்" என்று முற்கூறிய லக்ஷணம் சித்தாந்தத்தின்படி ஈண்டுப் பொருந்தாது. ஏனெனின்,

க. பிரத்தியக்ஷம் அநுமானம் சப்தமென்னும் மூன்றும் பிரத்தியக்ஷப்பிரமை அநுமிதிப்பிரமை சாப்திப்பிரமையென்பவற்றின் வியாபாரமுடைய காரணமாம்.

உ. உபமானம் அர்த்தாபத்தி அநுபலப்தி என்னும் மூன்றும் உபமிதி முதலிய பிரமைகளின் நிர்வியாபார காரணமாம்.

ஆதலால் "வியாபாரத்தின் வேருய அசாதாரண காரணத்தினைக் கரண" மெனல் வேண்டும். ஏனெனின், எங்ஙனம் வியாபாரத்தில் வியாபாரத்தன்மை யில்லையோ, அங்ஙனமே வியாபாரத்தின் வேருதலும் வியாபாரத்திலில்லை. ஆதலால் சித்தாந்தத்தின்படி வியாபாரமுடையதென்னும் சொல்லுளவிடத்து வியாபாரத்தின் வேருயதென்று சொல்லுதல் வேண்டும்.

கககச. இவ்வாற்ருல் பிரபஞ்சத்தில் பிரஹ்மத்தின் விதர்மத்தன்மையினது ஞானம் உபமானமாம். பிரபஞ்சத்தினும் விதர்மம் பிரஹ்மமென்பது உபமானப் பிரமாணம். அதன் பயன் உபமிதிஞானமாம்.

உபமானப்பிரமாண நிரூபண மென்னும்

நான்காவது ரத்நம் முடிந்தது.

ஐந்தாவது ரத்நம்.

ச. சப்தப்பிரமாண நிருபணம் ககரு-கருக

கஅ. சாப்திப் பிரமையின் பேதம் ககரு-ககஅ.

ககரு. சாப்திப்பிரமையின் கரணத்தினைச் சப்தப்பிரமாண மென்பர். சாப்திப்பிரமை இரு வகைத்தாம்:—ஒன்று வியாவகாரிகம்; மற்றையது பாரமார்த்திகம்.

ககசு. வியாவகாரிக சாப்திப்பிரமையும் இருவகைத்தாம். க. ஒன்று இலௌகிகவாக்கிய ஜந்நியம்; உ. மற்றையது வைதிகவாக்கிய ஜந்நியம்.

க. "நீலம் குடம்" என்றல் முதலியன இலௌகிகவாக்கியங்களாம்.

உ. "வச்சிரஹஸ்தன் புரந்தரன்" என்றல் முதலியன வைதிகவாக்கியங்களாம்.

க. எங்ஙனம் நீலத்தின் அபேதமுடையது குடமென்பது முதல் வாக்கியத்திற்குப் பொருளோ,

உ. அங்ஙனமே வச்சிரஹஸ்தனினும் அபேதமுடையவன் புரந்தரன் என்பது இரண்டாவது வாக்கியத்திற்குப் பொருளாம்.

க. முதல்வாக்கியத்தில் விசேஷணத்தை யறிவிப்பது "நீல" மென்னுஞ் சொல்; விசேஷியத்தை யறிவிப்பது "குட" மென்னுஞ் சொல்.

உ. இரண்டாவது வாக்கியத்தில் "வச்சிரஹஸ்தன்" என்னுஞ் சொல் விசேஷணத்தை யறிவிப்பதும்; "புரந்தரன்" என்னுஞ் சொல் விசேஷியத்தை யறிவிப்பதுமாம்.

இவ்வாற்றால் இலௌகிக வைதிக வாக்கியங்களுக்குச் சமானக்கிரம முண்டு.

கசஎ. ஆனால் வைதிகவாக்கியங்கள் இருவகைத்தாம். க. ஒன்று வியாவகாரிக அர்த்

தத்தை அறிவிப்பதாம்; உ. மற்றையது பரமார்த்த தத்துவத்தை அறிவிப்பதாம்.

க. பிரஹ்மத்தின் வேருகிய சகலமும் வியாவகாரிகப் பொருளெனப்படும்.

உ. பரமார்த்த தத்துவம் பிரஹ்ம மெனப்படும்.

ககஅ. பிரஹ்மத்தை யறிவிக்கும் வாக்கியமும் இருவகைத்தாம்.

க. "தத்" பதார்த்தத்தின் சுவரூபத்தையாவது "துவம்" பதார்த்தத்தின் சுவரூபத்தையாவது அறிவிப்பது அவாந்தரவாக்கியமாம்,

(க) எங்ஙனம் "சத்தியஞானநந்தம் பிரஹ்மம்" என்னும் வாக்கியம் "தத்" பதார்த்தத்தை அறிவிப்பதாம்.

(உ) "யாதொரு இவன் இருதயத்தின் உட்சோதியாகிய புருஷனும்" என்னும் வாக்கியம் "துவம்" பதார்த்தத்தின் சொரூபத்தை யறிவிப்பதாம்.

உ. "தத்" பதார்த்த "துவம்" பதார்த்தங்களின் அபேதத்தை அறிவிப்பன "தத்துவமஸி" முதலிய மகா வாக்கியங்களாம்.

கக. சப்தத்தினது விருத்தியின் பேதமும் சக்திவிருத்தியினது நிரூபணமும்

கககூ-கஉச.

கககூ. எந்த அர்த்தத்தில் எந்தப் பதத்தின் விருத்தி உளதாகின்றதோ, அவ்வர்த்தத்தின் உணர்ச்சி அப்பதத்தால் உண்டாகின்றது. பதத்திற்கு அர்த்தத்தோடுள்ள சம்பந்தம் விருத்தி யெனப்படுகின்றது. சக்தி லக்ஷணைகளின் பேதத்தால் அந்த விருத்தி இருவகைத்தாம்.

கஉ0. பதார்த்தத்தின் போதத்திற்கு ஏதுவாகிய சாமர்த்தியத்தினைச் சக்தி (ஆற்றல்) என்பர்.

எவ்வர்த்தத்தில் பதத்தின் சக்தி யுளதாகின்றதோ, அவ்வர்த்தம் பதத்தின் சக்கியமெனப்படுகின்றது.

எங்ஙனம்: கடம் படம் என்னும் பதங்களில் கலசம் வஸ்திரமென்னும் பொருள்களையறிவிக்கும் சாமர்த்தியம் உளது. அது சக்தியாம்.

ஆதலால் கடம் படம் என்னும் இரண்டு பதங்கட்கும் கலசமும் வஸ்திரமும் சக்கியார்த்தமாம். அதனையே வாச்சியார்த்தமென்றும் கூறுவர்.

கஉக. அந்தச் சக்தி க. யோகம், உ. ரூடம், ந. யோகரூடமென்னும் பேதத்தால் மூவகைத்தாம்.

க. அவயவ சக்தியினை யோக மென்பர். எங்ஙனம்: பாசக (அடுவா) னென்னும் பதத்தில் பாச் (அடு) என்னும் அவயவத்திற்குப் பாகம் (சமைத்தல்) பொருளாம். அகன் (ஆன்) என்னும் அவயவத்திற்குக் கர்த்தா (செய்வோன்) பொருளாம்.

இவ்வாற்றான் பாசகபதத்தின் அவயவங்களிலுள்ள அர்த்தத்தை யறிவித்தற் கேது

வாகிய சாமர்த்தியம் எதுவோ, அது பாசக பதத்தில் அவயவசக்தியாம்.

அவயவசக்தியால் எந்தச் சத்தம் தனது பொருளை அறிவிக்கின்றதோ. அது யௌகிக சப்த மெனப்படும். அது பாசகன் முதலிய சப்தங்களைப்போலவாம்.

௩௨௨. உ. பரிபாஷா சக்தியினை ரூடி யென்பர். சாஸ்திரத்தின் அசாதாரணசங்கேதம் பரிபாஷை யெனப்படுகின்றது. எங்ஙனம்: யாப்புநூல்களில் பாணம், இரசம் முனி, என்னும் சொற்களுக்கு ஐந்து ஆறு ஏழு என்பன பொருள்களாம். இது சாஸ்திரத்தின் அசாதாரண சங்கேதமாயிருத்தலின் பரிபாஷையாம். ஆதலால் பரிபாஷையினால் சப்தத்திலுள்ள போதத்திற் கேதுவான சாமர்த்தியம் யாதோ, அது ரூடிசக்தி யெனப்படுகின்றது.

ரூடிசக்தியில் எச்சத்தம் தனது பொருளை அறிவிக்கின்றதோ, அது ரௌடிகசப்த மெனப்படுகின்றது. அவை கடம் நிலம், பொன் என்னும் சொற்களாம்.

கஉ௩. ௩. அவயவம் பரிபாஷையென்னும் இரண்டன் அர்த்தபோதத்திற்கும் ஏதுவாய சாமர்த்தியத்தினை யோகரூட உபயவடிவசக்தி யென்பர். எங்ஙனம்: பங்கஜமென்னும் சொல்லின் பங்கமென்னும் அவயவத்திற்குச் சேறு பொருளாம்; ஜம் என்னும் அவயவத்திற்குப் பிறந்தது என்பது பொருளாம்.

(க) இவ்வாற்ருல் சேற்றினின்றும் உண்டாகிய கமலம் பங்கஜ மென்னும் சொல்லிற்குப் பொருளாம். ஏனெனின், பங்கஜமென்னும் சொல்லில் அவயவ சக்தி யிருக்கின்றது.

(உ) ஜலஜந்துவும் பங்கத்தினின்றும் உற்பத்தியாயிருக்கின்றது. அதனைப் பங்கஜ மென்பதில்லை; ஆனுல் தாமரைப் பூவினையே பங்கஜ மென்பர். ஆதலால் பங்கஜ மென்னும் சொல்லில் பரிபாஷா சக்தியுமிருக்கின்றது.

ஆதலால் பங்கஜ மென்னும் சொல்லில் இரண்டு சாமர்த்தியமு மிருத்தலின் யோகரூட உபயவடிவ சக்தியிருக்கின்றது.

கஉ௪. எல்லோர் மதத்தினும் சக்தி லக்ஷணையென்னும் இரண்டு விருத்திகளுள. பிரஹ்மப்பிரமையின் கரணமாகிய மகா வாக்கியத்தின் அர்த்த நிரூபணத்திலும் இரண்டின் உபயோகமே யுளது.

உ0. சத்தத்தினது விருத்தியின் பேதமும் லக்ஷணாவிருத்தியின் நிரூபணமும்

கஉ௫-கங௧.

கஉ௫

க. "யந்மநஸா ந மநுதே எந்தப் பிரஹ்மத்தை மனதினால் உலகம் அறிகிறதில்லையோ" என்றல் முதலிய சுருதிகளில் எங்ஙனம் மானஸஞானத்திற்கு விஷயமாதல் நிஷேதிக்கப்பட்டிருக்கின்றதோ,

உ. அங்ஙனமே "யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ-வாக்குகள் மனதோடு அடையாது எதனின்றும் நிவர்த்தியாகின்றனவோ" என்றல் முதலிய சுருதிகளில் சப்தத்திற்கு

விஷயமாதலும் நிஷேதிக்கப்பட்டு நிற்கின்றது. ஆதலால் மகாவாக்கியங்களைப் பிரஹ்மப்பிரமைக்குக் காரணமென்று கூறுதல் விருத்தமாம்.

கஉசா. அங்ஙனமாயினும், சப்தம் பிரஹ்ம ஞானத்திற்குக் காரணமாகாதென்னும் பொருளில் சுருதிக்குத்தாற்பரியம் உளதாயின், "தம் த்வௌபநிஷதம் புருஷம் ப்ருச்சாமி-அந்த உபநிஷதத்தினால் அறியப்படும் புருஷனை யான் கேட்கின்றேன்" என்னும் சுருதியினால் பிரஹ்மத்திற்கு உபநிஷத்தினால் அறியப்படுந்தன்மை வடிவ ஔபநிஷதத்தன்மை கூறுதல் அசங்கதமாகும். ஆதலால் சக்திவிருத்தியால் பிரஹ்மத்தின் ஞானம் சப்தத்தினால் உண்டாகிறதில்லை, லக்ஷணா விருத்தியினால் பிரஹ்மகோசர ஞானமுண்டாகின்றது. ஆதலால் சக்திவிருத்தியினால் சப்தம் பிரஹ்ம ஞானத்திற்குக் காரணமாதலின் நிஷேதமும் லக்ஷணாவிருத்தியினால் சப்தம் பிரஹ்ம ஞானத்திற்குக் காரணமாதலும் உண்டு. ஆதலால் லக்ஷணாவிருத்தி ஜந்நிய ஞானத்தின் விஷயமாயிருத்தலின், பிரஹ்மத்திற்கு ஔபநிஷதத் தன்மை சம்பவிக்கின்றது.

லக்ஷணுவிருத்தி ஜந்நியஞானத்திலும் சிதாபாசவடிவ பலத்தின் விஷயம் பிரஹ்ம மன்று; ஆனல் ஆவரணபங்கவடிவ விருத்திமாத்திரத்தின் விஷயத்தன்மை பிரஹ்மத்திலுளது. எங்ஙனம் சப்தஜந்நிய ஞானத்திற்கு விஷயமாந்தன்மை முற்றும் நிஷேதிக்கப்படுகிறதில்லையோ, அங்ஙனமே மானஸஞானத்திற்கு விஷயமாந்தன்மையும் முற்றும் நிஷேதிக்கப்படுகிறதில்லை. ஆனல் சமதமாதி சம்ஸ்காரமின்றிய விக்ஷிப்தமனத்திற்குப் பிரஹ்மஞானத்தில் ஏதுவாதலில்லை. மானஸஞானத்தில் எந்தச் சிதாபாஸ அம்ச முளதோ அதற்கு விஷயமாந்தன்மையில்லை. ஆதலால் பாஷியகாரர் கிரமப்படி பிரஹ்மப்பிரமைக்கு முற்கூறிய மனம் சககாரியும் சப்தம் கரணமுமாம்; இவ்வாற்ருல் மகாவாக்கியங்கள் பிரஹ்மப்பிரமைக்குக் கரணமா மென்று கூறுதலில் யாதும் விரோத மில்லை.

கஉஎ. இவ்வாறு இரண்டு விருத்திகளுள்: அவற்றுள் சக்தியைக் கூறிவந்தோம்.

சக்கிய சம்பந்தத்தினை லக்ஷணை யென்பர்.

கஉஅ. முற்கூறியபடி சக்திவிருத்தி ஜந்நிய ஞானத்திற்கு விஷயமாகாமை யிருத்தலின் சக்தி விருத்தியைக் கூறுதல் பயனின்றியதாம்.

கஉகூ. அங்ஙனமாயினும்,

க. சக்தி ஞானமின்றிச் சக்கியமாகிய வாக்கியார்த்தத்தின் ஞானம் உண்டாகிறதில்லை.

உ. சக்கிய ஞானமின்றிச் சக்கிய சம்பந்த வடிவ லக்ஷணையின் ஞானம் நிகழாது.

ந. லக்ஷணையின் ஞானமின்றி லக்ஷியமாகிய பதார்த்தத்தின் ஞானம் பொருந்தாது.

ச. பதார்த்தஞானமின்றி வாக்கியார்த்த ஞானம் நிகழாது.

ஆதலால்,

க. சக்தி ஞானத்திற்குச் சக்கியஞானத்திலும்,

உ. சக்கியஞானத்திற்கு லக்ஷணை ஞானத்திலும்,

௩. லக்ஷணை ஞானத்திற்கு லக்ஷியவடிவ பதார்த்த ஞானத்திலும்,

௪. பதார்த்த ஞானத்திற்குப் பதார்த்த சமுதாயத்தினது சம்பந்தத்தின் ஞானவடிவ அல்லது சம்பந்தத்தோடு கூடிய பதார்த்த சமுதாயத்தின் ஞான வடிவ வாக்கியார்த்த ஞானத்திலும், உபயோகமிருத்தலால் சக்திவிருத்தியைக் கூறுதல் நிஷ்பலமன்று. ஆனால் பரம்பரையாக வாக்கியார்த்த ஞானத்தில் உபயோகியா யிருத்தலின் ஸபலமாம்.

கஙO. இவ்வாற்றாற் கூறிய லக்ஷணையாதோ, அது க. கேவல லக்ஷணை உ. லக்ஷித லக்ஷணை என்னும் பேதத்தால் இருவகைத்தாம்.

க. சக்கியத்தின் (ஆற்றலால் அறியப்படுவதின்) சாக்ஷாத் (நேர்) சம்பந்தத்தினை கேவல லக்ஷணை யென்பர்.

உ. சக்கியத்தின் பரம்பரைச் சம்பந்தத்தினை லக்ஷிதலக்ஷணை யென்பர்.

சக்கியசம்பந்தத்தன்மை இரண்டிலு முளது. அவற்றுள், சிலவிடத்து லக்ஷிதலக்ஷணை கேளணி யென்றும் சொல்லப்படுகின்றது.

கஙக. லக்ஷித லக்ஷணையின் உதாகரணம் "துவிரேபம் ஒலிக்கின்றது" என்றல் முதலியன வாம். இரண்டு ரகரம் சப்திக்கின்றதென்னும் பொருள் பதங்களின் சக்தியினுற்றோன்றுகின் றது. ஈண்டுத் துவிரேபம் என்னும் பதத்திற் குச் சக்கியம் இரண்டு ரகரங்களாம். அவற்றிற்கு,

க. அவயவமின்றிய சப்பந்தம் பிரமர மென்னும் சொல்லிலிருக்கின்றது.

உ. அச்சொல்லின் சக்திவடிவ சம்பந்தம் தனது வாச்சியமாகிய மதுபத்தில் (வண்டில்) இருக்கின்றது.

ஆதலால் சக்கியசம்பந்தியாகிய பிரமரமென் னுஞ் சொல் எதுவோ, அதன் சம்பந்த மிருத்தலின் சக்கியத்தின் பரம்பரைச் சம்பந்த மிருக்கின்றது. இதில் லக்ஷிதலக்ஷணை யுளது.

கருஉ. அந்தக் கேவலலக்ஷணை லக்ஷிதலக்ஷணை யென்னுமிரண்டும் ஜகல்லக்ஷணை (விட்ட லக்ஷணை) அஜகல்லக்ஷணை (விடாத லக்ஷணை) பாகத்தியாக லக்ஷணை (விட்டுவிடாத லக்ஷணை) என்னும் பேதத்தால் மூவகைத்தாம். அந்த ஒவ்வொரு லக்ஷணையும் க. பிரயோஜனவதிலக்ஷணை, உ. நிரூட லக்ஷணையென இருவகைப்படும்.

க. யாண்டுச் சக்தியுடைய பதத்தினைவிட்டு இலாக்ஷணிக சப்தப் பிரயோகத்தில் பிரயோஜனமுண்டாகின்றதோ, அது பிரயோஜனவதி லக்ஷணை யெனப் படும்.

எங்ஙனம்: "கரையிற் கிராமம்" என்று கூறின், கரையில் குளிர்ச்சி புனிதத்தன்மை முதலியவற்றின் உணர்ச்சி யுண்டாகிறதில்லை. கங்கையென்னும் பதத்தால் கரையை யறிவிக்கின், கங்கையின் தர்மமாகிய குளிர்ச்சி புனிதத்தன்மை முதலியன கரையிற் காணப்படும். ஆகையால் கங்கையென்னும் பதத்திற்குக் கரையில் பிரயோஜனவதிலக்ஷணை (பயனுடையிலக்கணை) யுளது.

உ. பதத்திற்கு எந்த அர்த்தத்தில் சக்தி விருத்தி யுண்டாகவில்லையோ, சக்கியத்தினைப் போல எவ்வர்த்தத்தின் பிரதீதி எப்பதத்தால் எல்லோருக்கும் பிரசித்தமாக உண்டாகின்றதோ, அவ்வர்த்தத்தில் அப்பதத்தின் பிரயோஜனசூன்யலக்ஷணை யென்னும் நிரூடலக்ஷணை சொல்லப்படுகின்றது.

எங்ஙனம்: "நீலக்குடம்" என்றல் முதலிய வாக்கியங்களைக் கேட்டல் மாத்திரத்தான் எல்லாப் புருஷர்களுக்கும் குணியின் உணர்ச்சி மிகப் பிரசித்தமா யிருக்கின்றது. ஆதலால் நீல முதலிய பதங்களுக்குக் குணியிற் பிரயோஜன சூனிய லக்ஷணை யிருத்தலால் நிரூடலக்ஷணை யுண்டு.

நிரூடலக்ஷணை சக்திக்குச் சமானமாகின்றது. யாதானுமோர் விலக்ஷண அநாதிதாற்பரியமுளதாயின், ஆண்டு நிரூட லக்ஷணை உண்டாகின்றது.

இவ்வாறு லக்ஷணையின் பேதத்தைக் கூறினும். அவற்றுள்,

கஙங. ஜகல்லக்ஷணேயும் அஜகல்லக்ஷணே யும் மகா வாக்கியங்களி லில்லை. ஆனுல் பாகத்தி யாகலக்ஷணே யுண்டு. அதன் றன்மையை முற் கூறி வந்தோம்,

அந்தப் பாகத்தியாகலக்ஷணே மகா வாக்கியங் களில் லக்ஷிதலக்ஷணே யன்று; ஆனுல் கேவல லக்ஷணேயாம். ஏனெனின், லக்ஷியசேதனத்தோடு வாச்சியத்திற்குச் சாக்ஷாத் சம்பந்த மிருக்கின் றது; பரம்பரை யில்லை.

யாண்டுப் பாகத்தியாகலக்ஷணே யுளதோ, ஆண்டு வாச்சியத்தின் ஏகதேசம் லக்ஷிய மாகின் றது. அந்த வாச்சியத்தின் ஏகதேசத்தோடு வாச்சியத்திற்குச் சாக்ஷாத்சம்பந்த மிருக்கின்றது ஆதலால் கேவலலக்ஷணே யாகின்றது

மகாவாக்கியங்களினுல் ஜிஞ்ஞாசுவுக்கு அகண்ட பிரஹ்மத்தின் ஞான முண்டாமென்று ஈசுவரனது அநாதி தாற்பரியமிருக்கின்றது. ஆதலால் நிருடலக்ஷணேயாம்; பிரயோஜனவதி யன்று.

கஙச. ஈண்டு இத்தன்மைச் சங்கை யுண் டாகின்றது: —

௧. வாச்சியார்த்தத்திற்கு லக்ஷியசேதனத்தோடு சம்பந்தத்தை அங்கீகரிக்கின், லக்ஷிய அர்த்தத்தில் அசங்கத்தன்மைக்கு ஹாநி யுண்டாகும்.

௨. சம்பந்தத்தைக் கொள்ளாவிடின் லக்ஷணை பொருந்தாது. ஏனெனின், । சக்திய சம்பந்தத்தினை அல்லதுபோத்திய (போதிக்கப்படுதற்) சம்பந்தத்தினை லக்ஷணையென்பர். அது அசங்கத்திற் சம்பவியாது.

௧௩௫. அ'தற்கு இது சமாதானமாம்:—வாச்சியார்த்தத்தில் ௧. சேதனம். ௨. ஜடம் என்று இரண்டு பாகங்களுள. அவற்றில்,

௧. சேதனபாகத்திற்கு லக்ஷியார்த்தத்தில் தாதாத்மிய சம்பந்த முளது.

சகல பதார்த்தங்களுக்கும் சுவரூபத்தில் தாதாத்மிய சம்பந்த முண்டாகின்றது.

வாச்சியபாகமாகிய சேதனத்தின் சுவரூபமே லக்ஷியசேதனமாம் ஆதலால் வாச்சி

யத்திலுள்ள! சேதனபாகத்திற்கு லக்ஷியசேதனத்தில் தாதாத்மியசம்பந்த மிருக்கின்றது.

உ. வாச்சியத்திலுள்ள ஜடபாகத்திற்கு லக்ஷியசேதனத்தோடு அதிஷ்டானத் தன்மைச் சம்பந்த மிருக்கின்றது.

கற்பிதத்தின் சம்பந்தத்தால் அதிஷ்டானத்தின் சுபாவம் கெடுவதில்லை. எங்ஙனம் கற்பித கானல்ஜலத்தால் அதிஷ்டானமாகிய பூமி நனைகிறதில்லையோ, அங்ஙனமே ஈண்டும் அறிந்து கொள்க.

கஈகா. வேறு சங்கை:—

க. "தத்" பதத்திற்கு அகண்ட சேதனத்தில் லக்ஷணையை அங்கீகரித்து, "துவம்" பதத்திற்கும் அகண்ட சேதனத்தில் லக்ஷணையை அங்கீகரிக்கின், புநருத்தி தோஷம் (கூறியது கூறுதலென்னும் குற்றம்) உண்டாகுதலான் "கடம் கடம்" என்னும் வாக்கியத்தினைப்போல அப்பிரமாண வாக்கியமாகும்.

உ. இரண்டு பதங்களுக்கும் லக்ஷியார்த்தம் வேறெனக் கொள்ளின் அபேதத்தை யறிவிக்குந்தன்மை யுண்டாகாது.

கஙஎ. அதற்கு இது சமாதானமாம்:—

ச. மாயாவிசிஷ்டனும் அந்தக்கரண விசிஷ்டனுமோ "தத்" பதத்திற்கும் "துவம்" பதத்திற்கும் சக்கியராவர்; உபகிதர் லக்ஷியராவர். பிரஹ்ம சேதனம் இரண்டு பதங்களுக்கும் லக்ஷியமாமாயின் புநருத்தி தோஷ முண்டாம். அந்தப் பிரஹ்மசேதனம் லக்ஷியமன்று. ஆனால் மாயா உபகித னும் அந்தக்கரண உபகிதனும் லக்ஷிய ராவர். அவர் உபாதிகளின் பேதத் தால் பின்னராவர்; புநருத்தி தோஷ மில்லை.

உ. உபகிதம் இரண்டும் பரமார்த்தமாக அபின்னமாம். ஆதலால் அபேதத்தை அறிவிக்குந்தன்மை வாக்கியத்திற்குச் சம்பவிக்கின்றது. இவ்வாற்றால் "தத்" பதார்த்த "துவம்" பதார்த்தங்களுக்கு

உத்தேச விதேயபாவத்தை அங்கீ கரிக்கின், அபேதத்தை அறிவிக்குந் தன்மை தோஷமின்றியதாம்.

௧. "தத்" பதார்த்தத்தில் பரோக்ஷத்தன் மைப் பிரமத்தை நிவர்த்தித்தற் பொருட்டு, "தத்" பதார்த்தத்தை உத்தேசித்து "துவம்" பதார்த்தத் தன்மை விதேயமாம்.

௨. "துவம்" பதார்த்தத்தில் பரிச்சின்னத் தன்மைப் பிரமத்தை நிவர்த்தித்தற் பொருட்டு, "துவம்" பதார்த்தத்தை யுத்தேசித்து "தத்" பதார்த்தத் தன்மை விதேயமாம்.

௧௩-அ. புநருத்தியைப் பரிகரித்தற் பொருட்டுச் சில நூலாசிரியர்களுக்கு இத்தாற் பரிய முண்டு:—பதங்களுக்கு வேறு வேறு லக்ஷ கத்தன்மை அங்கீகரிக்கின், புநருத்தியின் சங்கை யுண்டாம். அந்தப் பின்ன பின்னமான லக்ஷகத் தன்மையில்லை. ஆனால் மீமாம்சகர் கிரமப்படி இரண்டு பதங்களும் சேர்ந்து அகண்டப் பிரஹ்மத்தின் லக்ஷகங்களாம்.

இவ்வாற்ருல் இலக்ஷணையின் பிரசங்கத்தில் வெகு விசாரம் பழமையான ஆசிரியர்களால் எழுதப்பட்டிருக்கின்றது. அதன் தன்மைமாத்திரம் சுருக்கமாக அறிவிக்கப்பட்டது.

கஙக. இவ்வாறு முதலிலோ பதத்தின் சக்தி அல்லது லக்ஷணையின் ஞானத்தோடு கூடிய வாக்கியத்தின் சிரவண சாக்ஷாத்காரமுண்டாய், முன் அநுபவிக்கப்பட்ட பதார்த்தங்களின் ஸ்மிருதியுண்டாகின்றது. அதன் பின்னர்ப் பதார்த்தங்களினது சம்பந்தத்தின் ஞானவடிவ அல்லது சம்பந்தத்தோடுகூடிய பதார்த்தங்களின் ஞானவடிவ வாக்கியார்த்த போதமுண்டாகின்றது. அதனையே சாப்தபோதமென்றுங் கூறுவர். ஆதலால் சப்தத்தினது சக்தி அல்லது லக்ஷணுவிருத்திகளின் ஞானம் சாப்த போதத்திற் கேதுவாம்.

உக. சாப்தபோதத்தின் ஆகாங்க்ஷை முதலிய நான்கு சககாரிகளின் நிருபணம். கசO-கருக.

கசO. க. ஆகாங்க்ஷைஞானம் உ. யோக்கியதை ஞானம், ந. தாற்பரியஞானம், ச. ஆசத்தி என்னும் இவை நான்கும் சககாரிகளாம்.

ச. ஆகாங்க்ஷை (அவாய்நிலை) என்பது இச்சைக்காம். அது சேதனத்தில் உண்டாகின்றதாயினும் பதத்தினது அர்த்தத்திற்கு எவ்வளவு காலம் வேறு பதார்த்தங்களோடு அந்வயஞானம் உண்டாகவில்லையோ, அவ்வளவு காலம் தன் அர்த்தத்தின் அந்வயத்தின் பொருட்டு வேறு பதத்தின் இச்சை சமானமாகத் தோற்றுகின்றது. அந்வயபோதமுண்டாகியபின் தோற்றுவதில்லை. அது ஆகாங்க்ஷை யெனப்படுகின்றது. எங்ஙனம். "இவன் வருகின்றான் புத்திரன், ராஜனுடைய புருஷன், விலக்கப்படுக" இவன் ராஜாவின் புத்திரன் வருகின்றான் என்று ராஜ

பதார்த்தத்திற்குப் புத்திர பதார்த்தத்தோடு அந்வயபோதமுண்டாகியபின் புருஷ பதார்த்தத்தில் அந்வயபோதத்திற் கேதுவான ஆகாங்க்ஷை ராஜ பதார்த்தத்தி லில்லையாகலின், "ராஜனது புருஷன் விலக்கப்படுக" என்னும் ஞானம் உண்டாகிறதில்லை. ஆனால் "புருஷன் விலக்கப்படுக" என்னும் ஞானம் உண்டாகின்றது. ஆகாங்க்ஷைஞானம் சாப்தபோதத்திற்கு ஏதுவாகாவிடின், "ராஜாவின் புத்திரன் வருகின்றான் ராஜாவின் புருஷன், விலக்கப்படுக"? என்னும் போதம் உண்டாதல் வேண்டும். ஆதலால் ஆகாங்க்ஷை ஞானம் சாப்த போதத்திற்கு ஏதுவாம்.

கசக. உ. ஒரு பதார்த்தத்திற்கு வேறு பதார்த்தத்தோடுள்ள சம்பந்தத்தினை யோக்கியதை யென்பர். யாண்டு யோக்கியதையில்லையோ, ஆண்டுச்சாப்தபோத முண்டாகிறதில்லை. எங்ஙனம் "தீயால் நனைக்கின்றான்" என்னும் வாக்கியத்தில் தீயின்கணுள்ள கரணத்தன்மைவடிவமன்றும் வேற்றுமைப் பொருட்கு நனைத்தற் பதார்த்

தத்தில் நிரூபிக்குந்தன்மைச் சம்பந்தவடிவ யோக்கியதையில்லை யாகலின் சாப்தபோத முண்டாகிறதில்லை. சாப்தபோதத்தில் யோக்கியதையேதுவாகாவிடின், "தீயால் நனைக்கின்ருன்" என்னும் வாக்கியத்தினுல் சாப்தபோத முண்டாதல் வேண்டும். ஆதலால் யோக்கியதை ஞானம் சாப்தபோதத்திற்கு ஏதுவாம்.

கசுஉ. ௩. சொல்லுவோனது இச்சையினைத் தாற்பரிய மென்பர். எவ்வர்த்தத்தில் தாற்பரிய ஞான முண்டாகவில்லையோ அதன் சாப்தபோத முண்டாகிறதில்லை.

(க) எங்ஙனம் "*சைந்தவத்தைக் கொண்டுவா" வென்னும் வாக்கியத்தினுல் போஜனசமயத்தில் குதிரையின்கண் சொல்லுவோனது இச்சையாகிய தாற்பரியம் சம்பவியாமையால்

---

*சிந்துவினின்றும் உண்டாயது சைந்தவம். சிந்துவென்பது சமுத்திரத்திற்கும் ஓர் தேசத்திற்கும் பெயராம். சமுத்திரத்தினின் றுண்டாகிய உப்பிற்கும், சிந்துதேசத்தி லுண்டாகிய குதிரைக்கும் சைந்தவமென்பது காரண இடுகுறியாம்.

குதிரையின் சாப்தபோத முண்டாகிற தில்லை.

(உ) அங்ஙனமே நடத்தற் சமயத்தில் உப்பின் சாப்தபோத முண்டாகிறதில்லை.

தாற்பரிய ஞானம் சாப்தபோதத்திற்கு ஏதுவாகாவிடின் "சைந்தவத்தைக் கொண்டுவா" என்னும் வாக்கியத்தினுல் போஜன சமயத்தில் குதிரையின் ஞானமும், நடத்தற் சமயத்தில் உப்பின் ஞானமும் உண்டாதல்வேண்டும். ஆதலால் சாப்தபோதத்தில் தாற்பரியஞானம் ஏதுவாம்.

கசஙு. அங்ஙனமே வேதத்தினது அந்த பாகமாகிய வேதாந்தமென்னும் உபநிஷதங்களுக்குத் தாற்பரியம் கொள்ளப்படாததும் தள்ளப்படாததுமாகிய அத்துவிதீயப் பிரஹ்மத்தின் போதத்திலாம்; உபாசனுவிதியில் தாற்பரியமில்லை. ஏனெனின்

(க) இலௌகிக வாக்கியங்களின் தாற்பரியமோ பிரகரண முதலியவற்றுன் அறியப்படுகின்றது. அந்தப் பிரகரண முதலியன காவியப்பிரகாச காவியப்பிரதீபங்களில் எழுதப்பட்டிருக்கின்றன

(உ) வைதிக வாக்கியங்களின் தாற்பரியஞானத்திற்கு எது உபக்கிரம உபசங்காரமுதலிய ஆறும். [க] உபக்கிரம உபசங்காரங்களின் ஒருவடிவத் தன்மை, [உ] அப்பியாசம், [௩] அபூர்வதை, [ச] பலம், [ரு] அர்த்தவாதம், [சு] உபபத்தி யென்னும் ஆறும் வைதிக வாக்கியங்களினது தாற்பரியத்தின் லிங்கங்களாம். இவற்ருல் வைதிக வாக்கியங்களின் தாற்பரியம் அறியப்படுகின்றமையால் இவை தாற்பரியத்தின் லிங்க மெனப்படுகின்றன. அது தூமத்தினுல் வந்நியறியப்படுகின்றதாகவின் வந்நியின் லிங்கம் தூம* மெனப்படுவது போலவாம்.

(௩) உபநிடதங்களுக்கு வேருய்க் கர்மகாண்டத்தை யறிவிக்கும் வேதத்தின் தாற்பரியம் கர்மவிதியிலுளது. உபக்கிரம உபசங்காரமுதலியன பூர்வ

---

*இது "தத்துவமஸி மகாவாக்கிய உபதேசம்" என்னும் பெயரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுளது. இதன் விரிவை யறிய விரும்புவோர் ஆண்டுக் கண்டு கொள்க.

வேதத்தின் கர்மவிதியில் இருக்குமாறு ஜைமினியாற் செய்யப்பட்ட துவாத சாத்தியாயி யென்னும் பூர்வமீமாம்சை யில் ஸ்பஷ்டமாம்.

(ச) உபநிஷத்து வடிவ வேதத்தின் உபக்கிரம உபசங்கார முதலியன அத்துவிதீயப் பிரஹ்மத்தின் கண்ணும். ஆதலால் அத்துவிதீயப் பிரஹ்மத்தில் அவற்றிற்குத் தாற்பரிய முண்டு.

கசச. [க] எங்ஙனம்: சாந்தோக்கியத்தின் ஆறுவது அத்தியாயத்தினது உபக்கிரம (ஆரம்ப) த்தில் அத்துவிதீயப்பிரஹ்ம மிருக்கின்றது; உபசங்காரத்தி (முடிவி)லும் அத்விதீயப்பிரஹ்ம மிருக்கின்றது. எந்த அர்த்தம் ஆரம்பத்தி லுளதோ அதுவே முடிவிலும் உளதாயின், ஆண்டு உபக்கிரம உபசங்காரங்களின் ஏகரூபத்துவம் சொல்லப்படுகின்றது.

கசரு. [உ] அடிக்கடி சொல்லுதலே அப்பியாசமென்பர். சாந்தோக்கியத்தின் ஆறுவது அத்தியாயத்தில் ஒன்பது முறை " தத்துவமஸி "

வாக்கியமிருக்கின்றதாகலின் அத்விதீயப் பிரஹ்மத்தில் அப்பியாச மிருக்கின்றது.

கசகூ. [ந] வேறு பிரமாணங்களினுல் அறியப்படாத தன்மையினை அபூர்வதையென்பர். உபநிஷத்து வடிவ சப்தப்பிரமாணத்தின் வேருய பிரமாணங்கட்கு அத்துவிதீயப் பிரஹ்மம் விஷயமன்ருகலின், அத்விதீயப் பிரஹ்மத்தில் அறியப்படாததன்மைவடிவ அபூர்வதை யிருக்கின்றது.

கசஎ. [ச] அத்விதீயப் பிரஹ்மத்தின் ஞானத்தினுல் மூலத்தோடுகூடிய சோக மோகங்களின் நிவிருத்தி பயனெனப்பட்டிருக்கின்றது.

[ரு] ஸ்துதியினையாவது நிந்தையினையாவது அறிவிக்கும் வசனம் அர்த்தவாதமெனப்படும். அத்விதீயப் பிரஹ்மத்தை யறிவிக்கும் ஸ்துதி உபநிடதங்களில் ஸ்பஷ்டமாம்.

கசஅ. [கூ] சொல்லிய அர்த்தத்திற்கு அநுகூலமான யுக்தியினை உபபத்தியென்பர். சாந்தோக்கியத்தில் சகல பதார்த்தங்களுக்கும் பிரஹ்மத்தோடு அபேதத்தைச் சொல்லுதற்பொருட்

டுக் காரியத்திற்குக் காரணத்தோடு அபேதத்தைப் பிரதிபாதித்தல் அநேக திருஷ்டாந்தங்களாற் சொல்லப்பட்டிருக்கின்றது.

கசகூ. இவ்வாறு ஆறு லிங்கங்களால் சகல உபநிஷதங்களுக்கும் தாற்பரியம் அத்விதீயப் பிரஹ்மத்தி லுளது. அந்த ஆறு லிங்கங்களை உபநிஷதங்களின் வியாக்கியானத்தில் பகவான் பாஷியகாரர் வெளிப்படையாய் எழுதியிருக்கின்றனர். அவற்ருல் வேதாந்த வாக்கியங்களுக்கு அத்வைதப் பிரஹ்மத்தில் தாற்பரியநிச்சயமுண்டாகின்றது.

எந்த அர்த்தத்தில் சொல்லுவோனது தாற்பரியத்தின் ஞானம் உளதாகின்றதோ, அவ்வர்த்தத்தின் ஞானம் கேட்பவனுக்குச் சப்தத்திஞல் உண்டாகின்றது. ஆதலால் தாற்பரிய ஞானமும் சாப்தபோதத்திற்கு ஏதுவாம்.

கருO. ச. யோக்கிய பதங்களின் சக்தி அல்லது லக்ஷணுவிருத்தியாகிய சம்பந்தத்திஞல் மறைப்பின்றிய பதார்த்தங்களின் ஸ்மிருதி உண்டாகின்றது. அது ஆசக்தி (அண்மை) எனப்

படுகின்றது. இத்தன்மைய ஆசத்தி சுவரூபமாகச் சாப்தபோதத்திற்கு ஏதுவாம். அதன் ஞானம் ஏதுவன்று. இவ்வாற்றால் ஆகாங்க்ஷை ஞானம், யோக்கியதை ஞானம், தாற்பரியஞானம், ஆசத்தி என்பன சாப்தபோதத்திற்கு ஏதுவாம். இந் நான்கினையும் சாப்தசாமக்கிரி யென்பர்.

கருக. இவ்வாற்றால்,

க. ஈண்டுச் சக்தி அல்லது லக்ஷணையோடு கூடிய சப்தத்தின் ஞானம் பிரமைக்குக் கரணமா யிருத்தலின் பிரமாணமாம்.

உ. பதார்த்தங்களின் ஸ்மிருதி அதினின்றும் உண்டாகிச் சாப்திப்பிரமையைப் பெறுகின்றது. ஆதலால் அது வியாபாரமாம்.

ந. சாப்திப்பிரமை பயனும்.

சப்தப்பிரமாண நிரூபணமென்னும்
ஐந்தாவது ரத்நம் முடிந்தது.

ஆறுவது ரத்நம்.

—∘∘⁂∘∘—

ரு. அர்த்தாபத்திப்பிரமாண நிரூபணம் கரு௨-கக௲௨.

௨௨. அர்த்தாபத்திப்பிரமை பிரமாணங்களினது சுவரூபத்தின் நிச்சயம் கரு௨-கருரு.

கரு௨. அர்த்தாபத்திப்பிரமையின் கரணத்தினை அர்த்தாபத்திப்பிரமாண மென்பர். எங்ஙனம் பிரமாணப்பிரமைகளை யறிவிப்பது பிரத்தியக்ஷ சப்தமோ, அங்ஙனமே அர்த்தாபத்திச் சத்தமும் பிரமாணம் பிரமை யென்னும் இரண்டனையும் அறிவிப்பதாம்.

கருரு. உபபாதக கற்பனைக்கு ஏதுவான உபபாத்திய ஞானத்தை அர்த்தாபத்திப்பிரமாண மென்பர். உபபாதக ஞானத்தினை அர்த்தாபத்திப் பிரமை யென்பர்.

உபபாதகம் சம்பாதகம் என்பன பரியாயச் சொற்கள்.

உபபாத்தியம் சம்பாத்தியம் என்பன பரியாயச்சொற்கள்.

௧. எஃதின்றி எது சம்பவியாதோ அதற்கு அது உபபாத்தியமெனப்படுகின்றது. எங்ஙனம்: இராத்திரி போஜனமின்றி பகலுண்ணுப் புருடனிடத்துப் பருமை சம்பவியாதாகலின் இராத்திரி போஜனத்தின் உபபாத்தியம் ஸ்தூலத்தன்மையாம்

௨. எதன், அபாவத்தால் எதன் அபாவம் உளதாகின்றதோ, அது அதன் உபபாதகமெனப்படுகின்றது. எங்ஙனம்: இராத்திரி போஜனத்தின் அபாவத்தால் பகலுண்ணுதவனுக்கு ஸ்தூலத்தன்மையின் அபாவமிருத்தலால் இராத்திரி போஜனம் ஸ்தூலத்தன்மையின் உபபாதகமாம்.

௩. இவ்வாறு உபபாத்தியத்தினது அநுபபத்தியின் (அசம்பவத்தின்) ஞானத்திருல் உபபாதகத்தைக்கற்பித்தல் அர்த்தாபத்திப்பிரமை யெனப்படுகின்றது உபபாதக கற்பனைக்கு ஏதுவான உபபாத்தி

யத்தினது அநுபபத்தியின் ஞானம் அர்த்தாபத்திப் பிரமாண மெனப்படுகின்றது.

அர்த்தமென்பது உபபாதக வஸ்து; அதன் ஆபத்தியென்பது கற்பனே; இவ்வர்த்தத்தால் அர்த்தாபத்தியென்னுஞ்சொல் பிரமையை யறிவிப்பதாம். அர்த்தத்தின் கற்பனே எதனுல் உளதாகின்றதோ, அந்த உபபாத்தியத்தினது அநுபபத்தியின் ஞானமாகிய பிரமாணம் அர்த்தாபத்தியென்னுஞ் சொல்லிற்குப் பொருளாம்.

உ௩. அர்த்தாபத்திப்பிரமையின் பேதம் கரு௪-கருஎ.

கரு௪. அவ்வர்த்தாபத்தி க. திருஷ்டார்த்தாபத்தி (காண்டலருத்தாபத்தி), உ. சுருதார்த்தாபத்தி (கேள்வியருத்தாபத்தி) என்னும் பேதத்தால் இருவகைத்தாம்.

க. யாண்டுத் திருஷ்ட உபபாத்தியத்தினது அநுபபத்தியின் ஞானத்திஞல் உபபாதகத்தினது கற்பனே உண்டாகின்றதோ, ஆண்டுத் திருஷ்டார்த்தாபத்தி சொல்லப்படுகின்றது. எங்ஙனம்: பகலுண்ணுதனது பருமனில் இராத்திரி

போஜனத்தின் ஞானம் திருஷ்டார்த்தாபத்தியாம். ஏனெனின், உபபாத்தியமாகிய ஸ்தூலத்தன்மை திருஷ்டமாம்

கருரு. உ. யாண்டுச் சுருத உபபாத்தியத்தினது அநுபபத்தியின் ஞானத்தால் உபபாதகத்தினது கற்பனை உண்டாகின்றதோ, ஆண்டுச் சுருதார்த்தாபத்தி சொல்லப்படுகின்றது. எங்ஙனம் "வீட்டிவில்லாத தேவதத்தன் ஜீவிக்கின்ருன்" னென்னும் வாக்கியத்தைக் கேட்டு, வீட்டிற்கு வெளியிடத்தில் தேவதத்தனது இருப்பின்றி வீட்டிவில்லாத தேவதத்தனது ஜீவனம் பொருந்தாதாகலின், வீட்டிவில்லாத தேவதத்தனது ஜீவனத்தின் அநுபபத்தியினுல் தேவதத்தனது வீட்டிற்கு வெளியிலிருத்தற்றன்மை கற்பிக்கப்படுகின்றது. ஆண்டு வீட்டிவில்லாத தேவதத்தனது ஜீவனம் திருஷ்டமன்று; ஆனுல் சுருதமாம்.

க. சுருத அர்த்தத்தின் (கேட்ட பொருளின்) அநுபபத்தியினுல் உபபாதகத்தைக் கற்பித்தல் சுருதார்த்தாபத்திப்பிரமை யெனப்படுகின்றது.

உ. அதற்கேதுவான சுருத அர்த்தத்தினது அநுபபத்தியின் ஞானம் சுருதார்த்தா பத்திப்பிரமாண மெனப்படுகின்றது.

ஈண்டு வீட்டிலில்லாத தேவதத்தனது ஜீவனம் உபபாத்தியமாம்; வீட்டினும் வெளியி லிருத்தல் உபபாதகமாம்.

௧௫௬. ௧. அபிதாநாநுபபத்தி உ. அபிகிதாநுபபத்தி என்னும் பேதத்தால் சுருதார்த்தா பத்தி இருவகைத்தாம்.

௧. "துவாரம் (வாயிலை)" அல்லது "மூடு" என்றல் முதலிய இடங்களில் யாண்டு வாக்கியத்தின் ஏகதேசம் உச்சரிக்கப்பட்டு, ஏகதேசம் உச்சரிக்கப்படவில்லையோ, ஆண்டுச் சுருதபதத்தினது அர்த்தத்தின் அந்வயயோக்கிய அர்த்தத்தின் அல்லது அந்வயயோக்கிய அர்த்தத்தை யறிவிக்கும் பதத்தின் அத்தியாகாரம் உண்டாகின்றது. அவ்வர்த்தத்தின் அல்லது பதத்தின் அத்தியாகாரத்தின் ஞானம் வேறு பிரமாணத்தாற் சம்பவியாது. அர்த்தாபத்திப் பிரமாணத்தால் உண்டாகின்றது. ஈண்டு அபிதாநாநுபபத்தி வடிவச் சுருதார்த்தாபத்தி யுளது. ஏனெனின்

ஒருபதார்த்தத்திற்கு இஷ்டமாகிய வேறு பதார்த்தத்தோடு அந்வய போதத்தில் உள்ள சொல்லுவோனது தாற்பரியத்தினை அபிதான மென்பர். "வாயிலை" அல்லது "மூடு" என்றிவ்வளவு மாத்திரங்கூறின், ஆண்டு "வாயிலை மூடு" என்னும் உணர்ச்சி கேட்பவனுக் குண்டாதல்வேண்டு மென்பது சொல்லுவோனது தாற்பரியமாகிய அபிதாநமாம். ஆதலால் அது அபிதாநாநுபத்தி யெனப்படுகின்றது. ஈண்டு,

(க) அர்த்தத்தின் அல்லது சப்தத்தின் அத்தியாகாரம் உபபாதகமாம்.

(உ) முற்கூறிய தாற்பரியம் உபபாத்தியமாம்.

கருஎ. உ. யாண்டுச் சகலவாக்கியங்களின் அர்த்தமும் வேறு அர்த்தத்தைக் கற்பித்தலின்றி உண்டாகாததாகின்றதோ, ஆண்டு அபிகிதாநுபபத்தி வடிவச் சுருதார்த்தாபத்தியுளது. எங்ஙனம்: ஸ்வர்க்காமோ யஜேத "சொர்க்ககாமன் யாகஞ் செய்யக்கடவன்" என்னும் வாக்கியத்தின் பொருள் அபூர்வத்தைக் கற்பித்தலின்றி உண்டாகாததாயிருத்தலின் அபிகிதாநுபபத்திவடிவச் சுருதார்த்தாபத்தியாம். ஈண்டு,

(க) யாகம் சுவர்க்கத்திற்குச் சாதனமாதல் உபபாத்தியமாம். அதன் அநுபபத்தியிஞல் உபபாதகமான அபூர்வத்தின் கற்பனையுளது.

(உ) கடைசி ஆகுதியை யாக மென்பர்.

(ங) சுகவிசேஷத்தினைச் சுவர்க்க மென்பர் கர்மஜந்நிய சம்ஸ்காரவடிவ அதிருஷ்டத்தினை அபூர்வ மென்பர். சுவர்க்க சாதனத்தன்மை திருஷ்ட மன்று; ஆனுல் சுருதமாம்; ஆதலால் சுருதார்த்தாபத்தியாம்.

உச. அர்த்தாபத்திப்பிரமை ஜிஞ்ஞாசுவுக்கு உபயோகமாதல் கருஅ-கசுஉ.

கருஅ. சுருதார்த்தாபத்தியின் ஜிஞ்ஞாசுவுக் கநுகூலமான உதாரணம்:-“தரதி ஶோகமாத்மவித் ஆத்மஞானி சோகத்தைக் கடக்கின்முன்” என்பதாம். ஈண்டு ஞானத்திஞல் சோகத்தின் நிவிருத்தி சுருதமாம். அது சோகத்தின் மித்தியாத்தன்மையின்றி நிகழாது. ஆதலால் ஞானத்தால் சோகத்ினது நிவிருத்தியின் அநுபபத்தியிஞல் பந்தமித்தியாத்தன்மையின் கற்பனை

உண்டாகின்றது. பந்தமித்தியாத்தன்மை உபபாதகமாம். ஞானத்தாற் சோகம் நீங்குதல் உபபாத்தியமாம். அது திருஷ்டமன்று; ஆனால் சுருதமாம்; ஆதலால் சுருதார்த்தாபத்தியாம்.

கருக. அங்ஙனமே மகாவாக்கியங்களில் ஜீவப்பிரஹ்மங்களினது அபேதம் கேட்கப்படுகின்றது. அது ஔபாதிகபேதம் (உபாதியினாலாகிய வேற்றுமை) உளதாயின் சம்பவிக்கும்; சுவரூபமாகப் பேதமுளதாயின் சம்பவியாது. ஆதலால் ஜீவப் பிரஹ்மங்களினது அபேதத்தின் அநுபபத்தியினால் பேதத்தின் ஔபாதிகத் தன்மைஞானம் அர்த்தாபத்திப் பிரமாணஜந்நியமாம்.

க. ஈண்டு ஜீவப்பிரஹ்மங்களின் அபேதம் உபபாத்தியமாம்.

உ. பேதத்தில் ஔபாதிகத்தன்மை உபபாதகமாம்.

க. சகல உபபாத்திய ஞானமும் பிரமாணமாம்.

உ. உபபாதகத்தின் ஞானம் பிரமையாம்.

ஈண்டு ஜீவப்பிரஹ்மங்களின் அபேதம் வித்வானுக்குத் திருஷ்டமும் அந்நியருக்குச் சுருதமு

மாமாகலின், இது திருஷ்டார்த்தாபத்தி சுருதார்த்தாபத்தி யென்னும் இரண்டற்கும் உதாரணமாம்.

கஙo. அங்ஙனமே இரஜதத்தின் அதிகரணமாகிய சுத்தியில் இரஜதத்தின் நிஷேதம் திருஷ்டமாம். அது இரஜதத்தின் மித்தியாத்தன்மையின்றிச் சம்பவியாது. ஆதலால் நிஷேதத்தின் அநுபபத்தியினால் இரஜதமித்தியாத்தன்மையின் கற்பனை உண்டாகின்றது. இது திருஷ்டார்த்தாபத்திக்கு உதாரணமாம். ஈண்டு,

க. இரஜதநிஷேதம் உபபாத்தியமாம்.

உ. மித்தியாத்தன்மை உபபாதகமாம்.

கஙக. மனதின் விலயத்திற்குப் பின்னர் நிருவிகற்ப சமாதிகாலத்தில் அத்விதீயப் பிரஹ்ம மாத்திரம் எஞ்சியிருக்கும். சகல அநாத்ம வஸ்துக்களுக்கும் அபாவமுண்டாகின்றது. அவ்வநாத்ம வஸ்துக்கள் மானதமாயின், மனதின் விலயத்தால் அவற்றிற் கபாவம் சம்பவிக்கும்; மானதமன்றாயின் மனதின் விலயத்தால் அபாவமுண்டாகிறதில்லை. ஏனெனின், ஒன்றின் விலயத்தால்

ஒன்றற் கபாவம் உண்டாகாது. ஆதலால் மனதின் விலயத்தால் சகல துவைதாபாவங்களின் அநுபபத்தியினுல் சகல துவைதங்களும் மனோமாத்திரமாமென்னும் கற்பனை உண்டாகின்றது. ஈண்டு,

க. மனதின் விலயத்தால் சகல துவைதங்களின் விலயம் உபபாத்தியமாம்.

உ. அதன் ஞானம் அர்த்தாபத்திப் பிரமாணமாம்.

ங. சகல துவைதங்களுக்கும் மானதத்தன்மை உபபாதகமாம்.

ச. அதன் ஞானம் அர்த்தாபத்திப் பிரமையாம்.

கசுஉ. இந்த ஸ்தானத்தில் உபபாதகப் பிரமையின் அசாதாரணகாரணம் அர்த்தாபத்திப் பிரமாணமாம். அது நிர்வியாபாரமாயிருக்கினும், அதன்கண் உபபாதகப்பிரமையின் காரணத்தன்மை சம்பவிக்கின்றது. இது உபமானநிரூபணத்திற் கூறப்பட்டிருக்கின்றது.

அர்த்தாபத்திப் பிரமாண நிரூபணமென்னும் ஆறுவது ரத்நம் முடிந்தது.

ஏழாவது ரத்நம்.

௯. அநுபலப்திப்பிரமாண நிரூபணம் ௧௯௩—௧௮௧.

௨௫. நியாயசாஸ்திரத்தின்படி அபாவத்தின் சுவரூபத்தை நிச்சயித்தல் ௧௯௩—௧௯௩.

௧௯௩. அபாவப்பிரமையின் அசாதாரண காரணத்தை அநுபலப்திப்பிரமாண மென்பர்.

க. பிராசீனநையாயிகர் நிஷேதமுகப்பிரதீதி (விலக்கு முக வுணர்ச்சி)யின் விஷயத்தினை அபாவ மென்பர்.

உ. நவீனநையாயிகர் சம்பந்த சாதிருசியங்களுக்குப் பின்னமாய்ப் பிரதியோகியபேக்ஷையுடைய பிரதீதிக்கு விஷயமாவதனை அபாவ மென்பர்.

பிரதியோகி யபேக்ஷையுடைய பிரதீதிக்கு விஷயமோ சம்பந்தமும் சாதிருசியமுமாம். அது

அதனினும் வேறன்று. ஆதலால் பின்னமாகவோ பிறவும் உள. அவை பிரயோகி சாபேக்ஷப் பிரதீதிக்கு விஷய மன்று; ஆனால் பிரதியோகியின் நிரபேக்ஷப் பிரதீதிக்கு விஷயமாம். ஆதலால் அபாவத்தின் லக்ஷணத்திற்கு ஓரிடத்தும் அதிவியாப்தியில்லை.

கசுச. அந்த அபாவம் இருவகைத்தாம். க. ஒன்று அந்நியோந்நியாபாவம்; உ. மற்றையது சம்சர்க்காபாவம். அவற்றுள் அந்நியோந்நியாபாவம் ஒருவிதமேயாம். சம்சர்க்காபாவத்திற்கு நான்கு பேதமுண்டு. அவை (க) பிராகபாவம், (உ) பிரத்துவம்ஸாபாவம், (ங) சாமயிகாபாவம், (ச) அத்தியந்தாபாவம் என்பனவாம்.

கசுரு. க. அபேதத்தை நிஷேதிக்கும் அபாவத்தினை அந்நியோந்நியாபாவ மென்பர்.

அல்லது அத்தியந்தாபாவத்தின் வேறாய் உற்பத்தி நாசங்களில்லாத அபாவத்தினை அந்நியோந்நியாபாவ மென்பர். அதனைப் பேத மென்றும், பின்னத்தன்மை யென்றும், அதிரிக்தத் தன்மை யென்றும், வேற்றுமை யென்றும் கூறுவர்.

(க) உற்பத்திசூநியமோ பிராகபாவமுமாம்; அது நாசசூநிய மன்று.

(உ) நாசசூநியமோ பிரத்துவம்சாபாவமுமாம்; அது உற்பத்திசூநிய மன்று.

(ந) உற்பத்தி நாசசூநியமோ ஆத்மாவுமாம்; அது அபாவவடிவ மன்று; பாவவடிவமாம்.

(ச) உற்பத்திநாசசூநிய அபாவவடிவமோ அத்தியந்தாபாவமுமாம். அது அந்நியோந்நியாபாவவடிவ மன்று; ஆனால் அதனின் வேறும்.

"கடம் படமன்று" என்று சொல்லுதலால் கடத்தில் படத்ினது அபேதத்தின் நிஷேதமுண்டாகிறது. ஆதலால் கடத்தில் படத்தினது அபேதத்தை நிஷேதிப்பது கடத்தில் படத்தின் அந்நியோந்நியாபாவமாம்.

௯௯. உ. அதனின் வேறுய அபாவத்தினைச் சம்சர்க்காபாவ மென்பர்.

(க) அநாதிஸாந்த அபாவ மெதுவோ அது பிராகபாவ மெனப்படுகின்றது. தனது பிரதி

யோகியின் உபாதானகாரணத்தில் பிராகபாவ மிருக்கின்றது. அது கடத்தின் பிராகபாவத்திற்குப் பிரதியோகி கடமாதலாம். அதன் உபாதான காரணமாகிய கபாலத்தில் கடத்தின் பிராகபாவ மிருக்கின்றது. அது அநாதியும் (உற்பத்தியின்றியதும்) ஸாந்தமு (அந்தமுடையது) மாம்.

[க] அநாதி அபாவமோ அத்தியந்தா பாவமுமாம்; அது ஸாந்தமன்று.

[உ] ஸாந்த அபாவமோ சாமயிகாபாவமுமாம்; அது அநாதியன்று.

[ங] வேதாந்த சித்தாந்தத்தில் அநாதி ஸாந்தம் மாயையாம்; அது அபாவமன்று. ஆனல் ஜகத்திற்கு உபாதான காரணமா யிருத்தலின், சத்தசத்திற்கு விலக்ஷணமான அநிர்வசநீயபாவரூபம் மாயையாம்.

கககஎ. (உ) ஸாதி அநந்த அபாவம் பிரத்துவம்ஸாபாவ மெனப்படுகின்றது. அது தண்ட முதலியவற்றாற் கட முதலியவற்றின் துவம்ஸமுண்டாவதாம்.

[க] அநந்த அபாவமோ அத்தியந்தாபாவமுமாம்; அது ஸாதியன்று.

[உ] ஸாதியபாவமோ ஸாமயிகாபாவமுமாம்; அது அநந்த மன்று.

[ங] ஸாதி அநந்தமோ மோக்ஷமுமாம். ஏனெனின்,

(க) ஞானத்தால் மோக்ஷமுண்டாகின்றது; ஆதலால் ஸாதியாம்.

(ங) முக்தனுக்கு மீண்டும் சமுசாரமுண்டாவதில்லை; ஆதலால் அநந்தமாம்.

ஆனால் மோக்ஷம் அபாவவடிவமன்று; பாவவடிவமாம்.

அஞ்ஞான தற் (அதன்) காரியங்களின் நிவிருத்தியினை மோக்ஷமென்பர். நிவிருத்தியென்பது துவம்ஸத்திற்காம். ஆதலால் மோக்ஷமும் அபாவவடிவமாம். அங்ஙனமாயினும், கற்பிதத்தின் நிவிருத்தி அதிஷ்டானவடிவ மாகின்றது. அஞ்ஞானமும் அதன் காரியமும் கற்பிதமாம். ஆதலால் அவற்றின் நிவிருத்தி அதிஷ்

டானப் பிரஹ்மவடிவமாம். ஆதலால் அபாவ வடிவம் மோக்ஷமன்று; ஆனால் பிரஹ்மவடிவமா யிருத்தலின் பாவவடிவமாம்.

கசா௩. (ங) உற்பத்தி நாசமுடைய அபாவம் ஸாமயி காபாவ மெனப்படும். யாண்டு ஓர்காலத்திற் பதார்த்த முளதாய், ஓர்காலத்திற் பதார்த்த மிலதாகின்றதோ, ஆண்டுப் பதார்த்த சூநிய காலத்தில் அப்பதார்த்தத்தின் ஸாமயிகா பாவம் உண்டாகின்றது. எங்ஙனம்: பூதலமுதலிய வற்றில் கடமுதலியன ஓர்காலத்திருந்து ஓர் காலத் திலவாகின்றன. ஆண்டுக் கடசூநிய கால சம்பந்தியாகிய பூதகால முதலியவற்றில் கட முதலியவற்றின் ஸாமயிகாபாவ முளது.

சமயவிசேஷத்தில் உற்பத்தியாய்ச் சமய விசேஷத்தில் நஷ்டமாவதெதுவோ, அது ஸாம யிகாபாவ மெனப்படும். எங்ஙனம்: பூதலத்தி னின்றும் கடத்தை வேறிடத்திற் கொண்டு போயின், அப்போது கடத்தின் அபாவம் பூத லத்தில் உற்பத்தி யாகின்றது. அதே பூதலத்திற் கடத்தைக் கொண்டுவரின், அப்போது கடத்தின் அபாவம் பூதலத்தில் நஷ்டமாகின்றது. இவ் வாற்றால் ஸாமயிகாபாவம் உற்பத்தி நாசமுடைய தாம்.

[க] உற்பத்தியுடையதோ பிரத்துவம்ஸா பாவமுமாம்; அது நாசமுடையதன்று.

[உ] நாசமுடையதோ பிராகபாவமுமாம்; அது உற்பத்தியுடைய தன்று.

[ங] உற்பத்திநாச முடையனவோ கட முதலிய பூத பௌதிகமான அநேக பதார்த்தங்களாம்; அவை அபாவரூப மன்று. ஆனால் விதிமுகவுணர்ச்சி (இருக்கிறதென்னும் உணர்ச்சி) க்கு விஷயமாயிருத்தலின் பாவரூபங் களாம்.

கசுகூ. [ச] அந்நியோந்நியாபாவத்திற்கு வேறான உற்பத்திசூநியமும் நாசசூநியமுமான அபாவம் அத்தியந்தாபாவ மெனப்படும். யாண்டு ஒருகாலத்திலும் எப்பதார்த்தம் இருப்ப தில்லையோ, ஆண்டு அப்பதார்த்தத்தின் அத்தி யந்தாபாவம் சொல்லப்படுகின்றது எங்ஙனம்: வாயுவில் உருவமும் கந்தமும் எக்காலத்திலும் இருப்பதில்லை ஆண்டு உருவத்திற்கும் கந்தத் திற்கும் அத்தியந்தாபாவ மிருக்கின்றது. ஆத்மா வினிடத்து உருவம் இரசம், கந்தம், ஸ்பரிசம்,

சப்தம் என்பன என்று மிருப்பதில்லை. ஆதலால் உருவமுதலியவற்றின் அத்தியந்தாபாவம் ஆத்மாவி லிருக்கின்றது.

[க] உற்பத்திசூநியமோ பிராகபாவமுமாம்; அது நாசசூநியமன்று.

[உ] நாசசூநியமோ பிரத்துவம்ஸாபாவமுமாம்; அது உற்பத்திசூநிய மன்று.

[ந] உற்பத்திநாசசூநியம் பிரஹ்மமுமாம்; அது அபாவரூபமன்று; ஆனால் பாவரூபமாம்.

[ச] உற்பத்திநாசசூநிய அபாவரூபமோ அந்நியோந்நியா பாவமுமாம்; அது அந்நியோந்நியா பாவத்தின் வேறன்று.

உகூ. முற்கூறிய அபாவத்தில் சுவரூபத்தில் வேதாந்தத்திற்கு விருத்தமான அம்சங்களைக் காட்டுதல் கஎ0-கஎஅ.

கஎ0. இவ்வாறு அபாவங்கள் நியாயசாஸ்திரத்தின்படி சொல்லப்பன. இதில் வேதாந்தத்திற்கு விருத்தமான அம்சங்களைச் சுருக்கமாய்க் காட்டுவாம்.

க. கபாலத்தில் கடத்தின் ப்ராகபாவத்தினை அநாதி யென்பர். அது பிரமாணவிருத்தமாமாகலின் வேதாந்தத்தை அநுசரித்த தன்று. ஏனெனின் கடப்பிராகபாவத்தின் அதிகரணம் ஸாதியாம்; பிரதியோகியாகிய கடமும் ஸாதியாம். பிராகபாவத்திற்கு அநாதித்தன்மை எவ்வாறுண்டாம்?

மாயையில் சகல காரியங்களின் பிராகபாவத்திற்கும் அநாதித்தன்மை கூறின் சம்பவிக்கின்றது; மாயை அநாதியாகலின். ஆனால் மாயையிற் காரியத்தின் பிராகபாவத்தை அங்கீகரித்தல் வியர்த்தமாம். சித்தாந்தத்தில் இஷ்டமுமன்று; ஆதலால் பிராகபாவம் ஸாதிஸாந்தமாம்.

கஎக. உ. அங்ஙனமே நையாயிகமதத்தில் பிரத்துவம்ஸாபாவமும் தனது பிரதியோகியின் உபாதானத்திலேயே யிருக்கின்றது; ஆதலால் கடத்தின் துவம்ஸம் கபாலமாத்திரத்திருப்பதாம்; அது அநந்தமாம் என்று கூறுதல் அசங்கதமாம். கடத்துவம்ஸத்தின் அதிகரணமாகிய கபாலத்தின் நாசத்தால் கடத்துவம்ஸத்திற்கு நாசம் உண்டாகுதலால் பிரத்துவம்ஸாபாவமும் ஸாதிஸாந்தமுமாம்.

கஎஉ. ங. அங்ஙனமே அந்நியோந்நியா பாவமும் ஸாதிஸாந்த அதிகரணத்தில் ஸாதி ஸாந்தமாம். எங்ஙனம்: கடத்தில் படத்தின் அந்நியோந்நியாபாவ மிருக்கிறது; அதன் அதி கரணம் கடமாம்; அது ஸாதியும் ஸாந்தமுமாம். ஆதலால் கடத்தி லிருப்பதாகிய படாந்நியோந் நியாபாவமும் ஸாதிஸாந்தமாம். அநாதி அதி கரணத்தில் அந்நியோந்நியாபாவம் அநாதியாம். ஆனால் அது அநாதியும் ஸாந்தமுமாம்; அநந்த மன்று.

கஎங. எங்ஙனம் பிரஹ்மத்தில் ஜீவனது பேதமிருக்கின்றது. அது ஜீவனது அந்நியோந்நி யாபாவமாம். அதன் அதிகரணம் பிரஹ்மமாம்; அது அநாதியாம். ஆதலால்,

(க) பிரஹ்மத்தில் ஜீவனது பேத வடிவ அந்நியோந்நியாபாவம் அநாதியாம்.

(உ) பிரஹ்மஞானத்தினல் அஞ்ஞான நிவிருத்திவாயிலாகப் பேதத்திற்கு அந்த முண்டாகின்றது. ஆதலால் அது ஸாந்தமாம்.

கஎச. அநாதி பதார்த்தத்திற்கும் ஞானத்தினுல் நிவிருத்தி அத்வைத வாதத்தில் இஷ்டமாம். இதனுற்ருன் க. சுத்தசேதனம், உ ஜீவன், ந. ஈசுவரன், ச. அவித்தை, ரு. அவித்தியா சேதனங்களின் சம்பந்தம், சு. அநாதிகளுக்கு ஒன்றற்கொன்றுள்ள பேதம் என்னும் ஆறு பதார்த்தங்களேயும் அத்வைத மதத்தில் சுவரூபமாக அநாதியென்பர். சுத்த சேதனமொழிந்த ஐந்தினுக்கும் ஞானத்தினுல் நிவிருத்தியை அங்கீகரித்திருக்கினறனர்.

கஎரு. இதில் இச்சங்கை யுண்டாகின்றது:—ஜீவஈசுவரர்களே அத்வைத வாதத்தில் மாயிகமென்பர். மாயையின் காரியம் மாயிக மெனப்படும். ஜீவனும் ஈசுவரனும் மாயையின் காரியமும் அநாதியுமாவர் என்று கூறுதல் விருத்தமாம்.

கஎசு. அச்சங்கைக்கு இது சமாதானமாம்:—ஜீவேசுவரர்கள் மாயையின் காரியமாவரென்பது மாயிகமென்னும் சொல்லிற்கு பொருளன்று. ஆனுல் மாயையினது ஸ்திதியின் அதீனம் ஜீவேசுவரர்களது ஸ்திதியென்பதுபொருளாம். மாயையின் ஸ்திதியின்றி ஜீவேசுவரர்களது ஸ்திதி யிரா

தாகலின் அவர் மாயிக மாவர். மாயையினைப் போல அநாதியுமாவர். இவ்வாற்றால் அநாதிஅந்நியோந்நியாபாவமும் ஸாந்தமுமாம். அந்நியோந்நியாபாவம் அநந்தமன்று.

கஎஎ. ச. அங்ஙனமே அத்தியந்தாபாவமும் ஆகாய முதலியவற்றினைப்போல அவித்தையின் காரியமும் விநாசியுமாம்.

இவ்வாற்றால் அத்வைதவாதத்தில் சகல அபாவங்களும் விநாசியாம். எவ்வபாவமும் நித்தியமன்று; அத்வைதவாதத்தில் அநாத்மபதார்த்தங்கள் முழுவதும் மாயையின் காரியமாகலின், ஆத்மாவின் வேறாயவற்றிற்கு நித்தியத்தன்மை சம்பவியாது, எங்ஙனம் கடமுதலிய பாவபதார்த்தங்கள்மாயையின் காரியமோ, அங்ஙனமே அபாவமும் மாயையின் காரியமாகலின் மித்தையாம்.

கஎஅ. ஓர் நூலாசிரியராகிய அத்வைதவாதி ஒருவர் அத்தியந்தாபாவத்தினை அங்கீகரித்து, மற்றைய அபாவங்களைப் போய் யென்பர்.

க. எங்ஙனம்: கடத்தின் பிராகபாவத்தைக் கடத்திற் கூறுவர். அது பொய்யாம்

ஏனெனின், கடத்தின் உற்பத்திக்கு முற்கால சம்பந்தியாகிய கபாலமே "கடம் உண்டாகும்" என்னும் உணர்ச்சிக்கு விஷயமாம். கடத்தின் பிராகபாவம் அப்பிரசித்தமாம்.

௨. அங்ஙனமே தண்ட முதலியவற்றால் பொடிக்கப்பட்ட கபாலத்தின் அல்லது பிரிவுபட்ட் கபாலத்தின் வேறான கடத்துவம்ஸமும் அப்பிரசித்தமாம்.

௩. அங்ஙனமே கடசம்பந்த மின்றிய பூதலமேகடத்தின் சாமயிகாபாவமாம். கடமுளதாயின் அப்போது கடத்தில் சம்பந்தியாகிய பூதலமிருக்கின்றதாகலின் கடசம்பந்தமின்றிய பூதலமில்லை. இவ்வாற்றால் ஸாமயிகபாவம் அதிகரணத்தின் வேறன்று.

௪. அங்ஙனமே கடத்தில் படத்தின் பேதத்தைக் கடத்திலிருப்பதாகிய படாந்நியோந்நியபாவ மென்பர். அது இரண்டின் அபேதத்தினது அத்தியந்தாபாவவடிவமாம். இரண்டு பதார்த்தங்களினது அபேத அத்தியந்தாபாவத்தின்

வேருன அந்நியோந்நியாபாவம் அப்பி
ரசித்தமாம். இவ்வாற்ருன் அத்தியந்தா
பாவம் ஒன்றே யிருக்கின்றது; பிறி
தோரபாவமுமில்லை. இவ்வாறு அபா
வத்தின் நிரூபணத்தில் வெகு விசார
முளது, நூல் விரிதலஞ்சி அதன்றன்
மை மாத்திரம் அறிவிக்கப்பட்டது.

உஎ. சாமக்கிரியோடு கூடிய அபாவப்பிரமையும், அது ஜிஞ்ஞாசுவுக்கு உபயோகமாதலைக் கூறுதலோடு பிரமா விருத்தியின் உபசங்காரமும்

களகூ-கஅக:

களகூ. இவ்வாற்ருல் முற்கூறிய அபாவமெதுவோ அதற்குப் பிரமாஞானம் உளதாயின், ஆண்டு அபாவப்பிரமையின் அசாதாரணகாரணவடிவப் பிரதியோகியின் அநுபலம்பம் எதுவோ அது க்ரணமாயிருத்தலின் பிரமாணமாம்.

உபலம்பம் என்பது ஞானத்திற்காம். அதனையே பிரதீதி யென்றும் உபலப்தி யென்றும்

கூறுவர். ஆதன் அபாவத்தினை அநுபலம்பம் என்றும் அநுபலப்தி என்றும் கூறுவர்.

உபமானத்திற்கும் அர்த்தாபத்திக்கும்போல இதற்கும் வியாபாரமில்லை. ஆதலால் ஈண்டும் கரணலக்ஷணத்தில் வியாபாரமுடையதென்றும் பதத்தின் பிரவேசமில்லை. ஆனல் வியாபாரத்தின் வேருயவென்னும் பதத்தின் பிரவேசமுண்டு.

இவ்வாறு அநுபலப்திப்பிரமாண முளது; அநுபலப்திப்பிரமை பயனும். அதனையே அபாவப்பிரமை யென்றுங் கூறுவர்.

கஅ௦. ஜிஞ்ஞாசுவுக்கு அநுபலப்திநிரூபணத்தின் உபயோகம் இதுவாம்:—

க. "நேஹ நாநாஸ்தி கிஂசந — ஈண்டு நாநாவென்பது சிறிதுமில்லை" என்றல் முதலிய சுருதிகள் பிரபஞ்சத்தின் முக்காலத்தைய வின்மையைக் கூறுகின்றன. அநுபவசித்தப் பிரபஞ்த்திற்கு முக்காலத்தின்மை பொருந்தாது. ஆதலால் பிரபஞ்சத்தைச் சுவரூபமாக நிஷேதஞ் செய்வதில்லை. ஆனல் பிரபஞ்சம் பாரமார்த்திக மன்ருதலால் பாரமார்த்திகத்தன்மை விசிஷ்டப்பிர

பஞ்சத்திற்கு முக்காலத்தின்மையைச் சுருதி கூறுகின்றது. இவ்வாற்றால் பாரமார்த்திகத்தன்மை விசிஷ்டப்பிர பஞ்சத்தின் அபாவம் சுருதிசித்தமாம்.

உ. அநுபலப்தி பிரமாணத்தினாலும் சித்தமாம். பாரமார்த்திகத்தன்மைவிசிஷ்டப்பிரபஞ்சம் உளதாயின் எங்ஙனம் பிரபஞ்சத்தின் உபலப்தி சுவரூபாமக உண்டாகின்றதோ, அங்ஙனமே பாரமார்த்திகப் பிரபஞ்சத்தின் உபலப்தியும் உண்டாம். சுவரூபமாகவோ பிரபஞ்சத்தின் உபலப்தி யுண்டாகின்றது. பாரமார்த்திக வடிவத்தால் பிரபஞ்சத்தின் உபலப்தி யுண்டாகிறதில்லை. ஆதலால் பாரமார்த்திகத்தன்மை விசிஷ்டப் பிரபஞ்சத்தின் அபாவமிருக்கின்றது. இவ்வாற்றால் பிரபஞ்சபாவத்தின் ஞானம் அநுபலப்தியினால் உண்டாகின்றது; மற்றும் அநேக அபாவங்களின் ஞானம் ஜிஞ்ஞாசுவுக்கு இஷ்டமாம். அதற்கு ஏது அநுபலப்திப்பிரமாணமாம்.

கஅக இவ்வாற்றுற் சுருக்கமாய் ஈசுவர ஆசிரிதம், பிரமாணத்தோடு கூடிய பிரத்திய க்ஷாதி அறுவகை ஜீவாசிருதம் என்னும் பேதத்தால் பிரமை இருவகையாகச் சொல்லப்பட்டது. இது ஸ்மிருதியின் வேறுகிய யதார்த்த விருத்திஞான வடிவாம்.

அநுபலப்திப்பிரமாண நிரூபணமென்னும்
ஏழாவது ரத்நம் முடிந்தது.

எட்டாவது ரத்நம்.

க. அப்பிரமாவிருத்தியின் பேதமும் அநிர்வசநீயக்கியாதியின் நிரூபணமும்.

உஅ. யதார்த்த அப்பிரமையின் பேதத்தைக் கூறுதல் கஅஉ-கஅகூ.

கஅஉ. அப்பிரமாவிருத்தியும் யதார்த்தம் அயதார்த்த மென்னும் பேதத்தால் இருவகைத்

தாம். ஸ்மிருதி வடிவ அந்தக்கரணத்தின் விருத்தியினை யதார்த்த அப்பிரமை யென்பர். அந்த ஸ்மிருதியும் க. யதார்த்தம் உ. அயதார்த்தம் என்னும் பேதத்தால் இருவகைத்தாம், அவற்றுள்

கஅங. க. யதார்த்த ஸ்மிருதி இருவகைத்தாம். (க) ஒன்று ஆத்மஸ்மிருதி; (உ) மற்றையது அநாத்ம ஸ்மிருதி.

(க) தத்துமஸி முதலிய வாக்கியஜந்நிய அநுபவத்தினால் உண்டாகும் ஆத்ம தத்துவத்தின் ஸ்மிருதி யதார்த்த ஆத்மஸ்மிருதியாம்.

(உ) வியாவகாரிக மித்தியாத்தன்மை அநுபவ முண்டாக அதன் ஸம்ஸ்காரத்தால் மித்தியாத்தன்மை வடிவமாக வுண்டாகும் பிரபஞ்சத்தின் ஸ்மிருதி யதார்த்த அநாத்மஸ்மிருதியாம்.

கஅச. அங்ஙனமே அயதார்த்த ஸ்மிருதியும் இருவகைத்தாம். (க) ஒன்று ஆத்மகோசரம்; (உ) மற்றையது அநாத்மகோசரம்.

(க) அகங்கார முதலியவற்றில் ஆத்மத் தன்மைப் பிரமவடிவ அநுபவத்தின் ஸம்ஸ்காரத்தால் அகங்கார முதலியவற்றில் உண்டாகும் ஆத்மத் தன்மையின் ஸ்மிருதியும், ஆத்மாவில் கர்த்திருத்தன்மை அநுபவத்தின் ஸம்ஸ்காரத்தினால் உண்டாகும் "ஆத்மா கர்த்தா" என்னும் ஸ்மிருதியும் ஆகிய இரண்டும் ஆத்மகோசர அயதார்த்த ஸ்மிருதிகளாம்.

(உ) பிரபஞ்சத்தில் சத்தியத் தன்மைப் பிரமத்தின் ஸம்ஸ்காரத்தினால் உண்டாகும் "பிரபஞ்சம் சத்தியம்" என்னும் ஸ்மிருதி அநாத்மகோசர அயதார்த்த ஸ்மிருதியாம்.

கஅரு. ஸம்ஸாரதசையில் எந்த ஞானத்தின் விஷயத்திற்குப் பாதமுண்டாகிறதில்லையோ, அல்லது பிரமாதாவிருக்க எந்தஞானத்தின் விஷயத்திற்குப் பாதமுண்டாகிறதில்லையோ அது யதார்த்தஞானமெனப்படும். ஆதலால் முற்கூறிய ஸ்மிருதி அப்பிரமையாயினும் யதார்

த்தமென்றே சொல்லப்பட்டது. பின் அதனையே அயதார்த்தமென்று கூறுதல் அசம்பவமாம்.

கஅசா. அங்ஙனமாயினும், ஈண்டு முற்கூறிய ஸ்மிருதிக்குப் பரமார்த்த திருஷ்டியினாலோ அயதார்த்தத் தன்மையுண்டு. முற்கூறிய லக்ஷணத்தின் அநுசாரம் சம்ஸாரதிருஷ்டியினால் யதார்த்தத்தன்மை யிருத்தலின் ஆபேக்ஷிக யதார்த்தத்தன்மையு முளது. ஆதலால் முற்கூறிய ஸ்மிருதியினை யதார்த்த அப்பிரமை யென்று கூறுதலில் அசம்பவ தோஷமில்லை. இவ்வாற்றால் யதார்த்த அப்பிரமை சொல்லப் பட்டது.

உகூ. அயதார்த்த அப்பிரமையின் பேதமும் ஸம்சயப்பிரமங்களின் நிச்சயமும் கஅஎ - ககூஎ

கஅஎ. அயதார்த்த அப்பிரமையும் இருவகைத்தாம். க. ஒன்று ஸ்மிருதிவடிவ அவித்தையின் விருத்தி; உ. மற்றையது அநுபவ வடிவம்.

கஅஅ. க. உற்பூத ஸம்ஸ்கார மாத்திர ஜந்நிய ஞானத்தினை ஸ்மிருதி யென்பர்.

(க) ஞானமோ ஜந்நியமுமாம்; அது ஸம்ஸ்கார ஜந்நிய மன்று.

(உ) ஸம்ஸ்கார ஜந்நியமோ பிரத்தியபிஞ்ஞாப்பிரத்தியக்ஷமுமாம்; அது ஸம்ஸ்காரமாத்திர ஜந்நிய மன்று.

(ங) அநுபவம் பாதமாகிய யுண்டாகிய ஸ்மிருதிக் கேதுவான பாவனை யென்னும் ஸம்ஸ்காரம் எதுவோ, அது நிரந்தர மிருக்கின்றதாகலின் எப்போதும் ஸ்மிருதி யுண்டாதல் வேண்டும். ஆனல் அந்த ஸம்ஸ்காரம் உற்பூத மன்று; அநுற்பூதமாம்.

ஆதலால் ஓரிடத்தும் அதிவியாப்தி யில்லை. அந்த ஸ்மிருதி (க) யதார்த்தம் (உ) அயதார்த்தம் என்னும் பேதத்தால் இருவகைத்தாம்.

(க) யதார்த்த அநுபவஜந்நிய ஸ்மிருதி யதார்த்தமாம். அது முன்னரே சொல்லப்பட்டது.

(உ) அயதார்த்த அநுபவ ஜந்நிய ஸ்மிருதி அயதார்த்தமாம். அது அயதார்த்த அப்பிரமையில் அடங்கியதாம்.

அநுபவத்தில் யதார்த்தத்தன்மை அபாதித அர்த்தத்தினுலாகியதாம். அபாதித அர்த்தத்தை விஷயிக்கும் அநுபவம் யதார்த்த மெனப்படுகின்றது. அது பிரமை யென்றும் சொல்லப் படும். ஆதலால் அபாதித அர்த்தத்தின் அதீனமாம். அநுபவத்தில் யதார்த்தத்தன்மை யுளது. ஸ்மிருதியிலுள்ள யதார்த்தத்தன்மை அயதார்த்தத்தன்மைகள் அநுபவத்தின் அதீனமாம்.

கஅகூ. உ. ஸ்மிருதிக்கு வேருகிய ஞானத்தினை அநுபவ மென்பர். அதுவும் (க) யதார்த்தம் (உ) அயதார்த்த மென்னும் பேதத்தால் இருவகையாம்.

(க) யதார்த்த அநுபவமோ முன் சொல்லப் பட்டது.

(உ) அயதார்த்த அநுபவமும் ஸம்சயம் நிச்சயம் தர்க்க மென்னும் பேதத்தால் மூவகைப்படும்.

அயதார்த்தத்தினையே பிரமம் என்றும் பிராந்தி யென்றும் அத்தியாச மென்றுங் கூறுவர்.

கக௦. ஸம்ஸயநிச்சயவடிவப் பிரமங்கள் அநர்த்தத்திற்கு ஏதுவாம்; ஆதலால் அவை நிவர்த்திக்கத்தக்கனவாம். ஜிஞ்ஞாசுவுக்கு நிவர்த்திக்கத்தக்க பிரமத்தின் பேதத்தைக் கூறுகின்றார்:- ஒரு தர்மியிலுள்ள விருத்தமான நாநா தர்மங்களின் ஞானம் ஸம்ஸய மெனப்படும். அந்தச் சம்சயம் (க) பிரமாணஸம்சயம்; (உ) பிரமேய ஸம்சயமென இருவகைப்படும்.

க. பிரமாணகோசர ஸந்தேகம் பிரமாண ஸம்சய மெனப்படும். அதனையே பிரமாணகத (பிரமாணத்தின் கண்ணுள்ள) அசம்பாவனை யென்பர். "வேதாந்த வாக்கியம் அத்விதீயப் பிரஹ்மத்தில் பிரமாணமா? அன்று?" என்பது பிரமாண ஸம்சயம். அதன் நிவிருத்தி சாரீரகத்தினது முதல் அத்தியாயத்தைப் படித்தாலுங் கேட்டாலும் உண்டாகின்றது.

உ. பிரமேய ஸம்சயமும் ஆத்மஸம்சயம் அநாத்ம ஸம்சய மென்னும் பேதத்தால் இருவகைத்தாம். அநாத்ம ஸம்சயம் அநந்தவிதமாம். அதனைக் கூறுதலால் உபயோகமில்லை.

கக௯. ஆத்மஸம்சயமும் அநேகவிதமாய்:-

க. ஆத்மா பிரஹ்மத்தின் அபின்னமா? அல்லது பின்னமா?

உ. அபின்ன மாயினும் எப்போதும் அபின்னமா? மோக்ஷமாத்திரத்திலேயே அபின்னமா? அல்லது எப்போதும் அபின்னமன்று?

ந. எப்போதும் அபின்னமாயினும் ஆநந்தாதி ஐசுவரியமுடையதா? அல்லது ஆநந்தாதிக ளின்றியதா?

ச. ஆநந்தாதி ஐஸ்வரியமுடையதாயினும் ஆநந்தாதிகள் குணங்களா? அல்லது பிரஹ்மாத்மாவின் ஸ்வரூபமா?

இவை முதலியனவாகத் "தத்" பதார்த்தா பின்ன "துவம்" பதார்த்தத்தில் அநேகவகை ஸம்சயங்களுள.

ககஉ. க. அங்ஙனமே கேவல "துவம்" பதார்த்த கோசர ஸம்சயமும் ஆத்மகோசர ஸம்சயமாம்.

(க) ஆத்மா தேகாதிகளின் வேறு? அன்று?

(உ) பின்னமெனின் அணுவடிவமா? மத்திம பரிமாணமா? அல்லது விபு பரிமாணமா?

(ங) விபுவெனினும் கர்த்தாவா? அல்லது அகர்த்தாவா?

(ச) அகர்த்தாவெனினும் ஒன்றற்கொன்று பின்னமான அநேகமா? அல்லது ஏகமா? இவ்வாறான அநேக ஸம்சயங்கள் கேவலம் "துவம்" பதார்த்த கோசரமாம்.

ககங. உ. அங்ஙனமே கேவலம் "தத்" பதார்த்த கோசரமாகவும் அநேகவித ஸம்சயங்களுள.

(க) வைகுண்டமுதலிய உலகவிசேஷத்தில் வசிப்பவராகிய ஈசுவரன் பரிச்சின்னமான கைகால் முதலிய அவயத்தோடு கூடிய சரீரியா? அல்லது சரீரமின்றிய விபுவா?

(உ) சரீரமின்றிய விபுவெனினும், பரமாணுமுதலிய அபேக்ஷயினையுடைய ஜகத் கர்த்தாவா? அல்லது அபேக்ஷயின்றிய கர்த்தாவா?

(ஙு) பரமாணு முதலியவற்றின் அபேக்ஷயின்றிய கர்த்தாவெனினும், கேவல கர்த்தாவா? அல்லது அபின்ன நிமித்தோபாதானவடிவ கர்த்தாவா?

(ச) அபின்ன நிமித்தோபாதான மெனினும், பிராணிகளது கர்மாபேக்ஷயின்றிய கர்த்தாவாயிருத்தலின் விஷமமாகச் செய்வித்தற்றன்மை முதலிய தோஷமுடையவரா? அல்லது பிராணிகளின் கர்மாபேக்ஷயுடைய கர்த்தாவாயிருத்தலின் விஷமமாகச் செய்வித்தற்றன்மை முதலிய தோஷமின்றியவரா?

இவை முதலியனவாக அநேகவகைத் "தத்" பதார்த்த கோசர ஸம்சயங்களுள. அவ்வெல்லா சம்ஸயங்களும் பிரமேயஸம்சய மெனப்படும்.

கக௯௪. அவற்றின் நிவிருத்தி மனனத்தினுல் உண்டாகின்றது. சாரீரகத்தினது இரண்டாவது அத்தியாயத்தின் அத்தியயனத்தினுலேனும் சிரவணத்தினுலேனும் மனனம் சித்தமாகின்றது. அதனுல் பிரமேய ஸம்சயத்தின் நிவிருத்தியுண்டாகின்றது.

கக௯௫. ஞானசாதனத்தின் ஸம்சயமும் மோக்ஷ சாதனத்தின் ஸம்சயமும் பிரமேய ஸம்சயமாம். ஏனெனின் பிரமையின் விஷயத்தினைப் பிரமேய மென்பார். ஞானசாதனமும் மோக்ஷ சாதனமும் பிரமையின் விஷயமாயிருத்தலின் பிரமேயமாம். ஆதலால் ஞானசாதனத்தின் ஸம்சயமும் மோக்ஷ சாதனத்தின் ஸம்சயமும் பிரமேய ஸம்சயமாம். அதன் நிவிருத்தி சாரீரகத்தின் மூன்ருவது அத்தியாயத்தினுல் உண்டாகின்றது.

கக௯௬. அங்ஙனமே மோக்ஷத்தின் சுவரூபத்தின் ஸம்சயமும் பிரமேய ஸம்சயமாம். அதன் நிவிருத்தி சாரீரகத்தினது நான்காவது அத்தியாயத்தினுல் உண்டாகின்றது.

கககஎ. சாரீரகத்தின் நான்காவது அத்தியாயத்தில் முதலில் சாதனவிசாரமே யிருக்கின்றது. பின்னர்ப் பல (பிரயோஜன) விசாரமிருக்கின்றது. மோக்ஷத்தினைப் பல மென்பர். அங்ஙனமாயினும்,

க. நான்காவது அத்தியாத்தின் சாதன விசாரம் எவ்வளவிலிருக்கின்றதோ, அவ்வளவு நான்காவது அத்தியாயத்தோடுகூடிய மூன்றுவது அத்தியாயத்தினுல் சாதனஸம்சயத்தின் நிவிருத்தி உண்டாகின்றது.

உ. எஞ்சிய நான்காவது அத்தியாயத்தினுல் பல ஸப்சயத்தின் நிவிருத்தி உண்டாகின்றது.

இவ்வாற்ருல் ஸம்சயவடிவப் பிரமத்தின் நிரூபணஞ் செய்யப்பட்டது.

௩௦. அயதார்த்த அப்பிரமைமயின் பேதமான நிச்சயவடிவப் பிரம ஞானத்தின் நிச்சயம்

கஅ-உ0எ.

கஅ. நிச்சவடிவப் பிரமத்தைக் கூறுவாம்:— ஸம்சயத்தின் வேறாகிய ஞானத்தினை நிச்சயமென்பர். சுத்தியின் சுத்தித்தன்மைவடிவ யதார்த்த ஞானமும் சுத்தியின் இரஜதத்தன்மை வடிவப் பிரமஞானமுமாகிய இரண்டும் ஸம்சயத்தின்வேறாகிய ஞானமாயிருத்தலின் நிச்சயவடிவமாம். தனது அபாவாதிகரண அபவாசத்தினைப் பிரமமென்பர். எங்ஙனம் சுத்தியில் இரஜதப் பிரமம் உண்டாயின் ஆண்டு,

க. சுவ என்பது இரஜதமும் அதன் ஞானமும்,

உ. அதன் பாரமார்த்திக அல்லது வியாவகாரிக அபாவம்,

ந. அதன் அதிகரணம் அதாவது அதிஷ்டானமாகிய இரஜ்ஜு அல்லது இரஜ்ஜு விசிஷ்டசேதனம் அல்லது இரஜ்ஜு உபகிதசேதனம் அல்லது இதுவெனும்வடிவ விருத்தி உபகித சேதனம்,

அ

ச. அதில் அவபாசமாகிய இரஜதமும் அதன் ஞானமுமாகிய இவை பிரம மெனப்படுகின்றன.

ககக. அல்லது அதிஷ்டானத்தின்விஷம சத்தையுடைய அவபாசத்தினைப் பிரமமென்றும் அத்தியாச மென்றும் கூறுவர். வியாகரணத்தின் படி அத்தியாச பதத்திற்கும் அவபாச பதத் திற்கும் விஷயமும் ஞானமுமாகிய இரண்டும் வாச்சியமாம்.

உOO. ஆதலால் அர்த்தாத்தியாசம் ஞானத்தியாசமென்னும் பேதத்தால் அத்தியாசம் இருவகைத்தாம்.

அர்த்தாத்தியாசம் அநேக வகையினதாம்.

க. சிலவிடத்துக் கேவல சம்பந்தமாத் திரத்தின் அத்தியாச முள்ளது.

உ. சிலவிடத்துச் சம்பந்தவிசிஷ்ட சம் பந்தியின் அத்தியாசமுளது.

ந. சிலவிடத்துக்கேவல தர்மத்தின்அத்தி யாசமுளது.

ச. சிலவிடத்துத் தர்மவிசிஷ்ட தர்மியின் அத்தியாச முளது.

ரு. சிலவடத்து அந்நியோந்நியாத்தியாச முளது.

சா. சிலவிடத்து அந்நிய தராத்தியாச முளது. அந்நியதராத்தியாசமும் இரு வகைத்தாம்:—

(க) ஒன்று ஆத்மாவில் அநாத்மாத்தியாசம்.

(உ) அநாத்மாவில் ஆத்மாத்தியாசம்.

இவ்வாற்றால் அர்த்தாத்தியாசம் அநேக வகையினதாம். முற்கூறிய லக்ஷணத்திற்கு எங்கும் சமன்வய (பொருத்த) முண்டு.

உ0க. அங்ஙனமே முக்கிய சித்தாந்தத்திலோ சகல அத்தியாசங்களுக்கும் அதிஷ்டானம் சேதனமாம். இரஜ்ஜுவில் சர்ப்பம் தோற்று மாயின் ஆண்டும் இதுவெனும்வடிவ விருத்தியவச் சின்ன சேதனத்திற்கு அபின்னமான இரஜ்ஜு அவச்சின்ன சேதனமே சர்ப்பத்தின் அதிஷ்டான மாம்; இரஜ்ஜு அதிஷ்டானமன்று. இப்பொருள் விசாரசாகரத்தில் வெளிப்படையாம். ஆண்டு,

க. சேதனத்திற்குப் பரமார்த்த சத்தையுண்டு.

உ. அல்லது அதன் உபாதியாகிய இரஜ்ஜு விபாவகாரிகமா யிருத்தலின் இரஜ்ஜு அவச்சின்ன சேதனத்திற்கு வியாவகாரிக சத்தையுண்டு.

இருவகையானும் சர்ப்பத்திற்கும் அதன் ஞானத்திற்கும் பிராதிபாசிகசத்தை யிருத்தலால் அதிஷ்டானத்தின் சத்தையினும் விஷமசத்தையுடைய அவபாசம் சர்ப்பமும் அதன் ஞானமுமாம். ஆதலால் இரண்டனையும் அத்தியாசமென்றும் அவபாசமென்றுங் கூறுவர்.

உ0உ. சத்தைக்கு மூன்று பேதமுண்டு. க. ஒன்று பிராதிபாஸிகம். உ. இரண்டாவது வியாவகாரிகம். ௩. மூன்றாவது பாரமார்த்திகம்.

க. எதற்குப் பிரஹ்மஞானமின்றி இரஜ்ஜுவாதி யவச்சின்ன சேதனத்தின் ஞானத்தினுல் பாதமுண்டாகின்றதோ அதற்குப் பிராதிபாஸிகசத்தை யுண்டு.

இத்தன்மையன இரஜ்ஜு சர்ப்ப முதலியனவாம்.

உ. பிரஹ்மஞானமின்றி எதற்குப் பாத முண்டாகிற தில்லையோ. பிரஹ்ம ஞானமுண்டாக எதற்கு அதிஷ்டானத் தினும் வேருய சத்தாஸ்பூர்த்தி யிருப் பதில்லையோ, அதற்கு வியாவகாரிக சத்தையுண்டு. இத்தன்மையான அவித் தையும் ஆகாய முதலியனவுமாம்.

ங. மூன்று காலத்திலும் எதற்குப்பாத முண்டாகிறதில்லையோ அதற்குப் பார மார்த்திகசத்தையுண்டு. இத்தன்மை யது சேதனமாம்.

இவ்வாற்ருல் சகல அத்தியாசங்களிலும் ஆரோபிதத்தினும் அதிஷ்டானத்திற்கு விஷம சத்தையுண்டு.

உ0ங. எப்பதார்த்தத்தில் ஆதாரத்தன் மைதோற்றுகின்றதோ அது அதிஷ்டானமெனப் படும். அவ்வாதாரத்தன்மை பரமார்த்தமாயிருக் குக அல்லது ஆரோபிதமாகுக. அதன் பரமார்த் தத்தன்மையில் ஆக்கிரகம் இதன் பிரசங்கத் திலில்லை. ஏனெனின் எங்ஙனம் ஆத்மாவில்

அநாத்மாவின் அத்தியாசமிருக்கின்றதோ அங்ஙனமே அநாத்மாவில் ஆத்மாவின் அத்தியாசமிருக்கின்றது. அநாத்மரவில் பரமார்த்தமாக ஆத்மாவின் ஆதாரத்தன்மையில்லை. ஆனால் ஆரோபித ஆதாரத்தன்மையுளது. ஆதலால் ஆதாரமாத்திரத்தினை இப்பிரசங்கத்தில் அதிஷ்டானமென்பர்.

உ0ச ஆத்மாவிற்கு அதிஷ்டானம் அநாத்மாவாமென்று கூறுதலாலும் ஆத்மாவும் ஆரோபிதமாகுதலால் கற்பிதமாகும்.

உ0ரு. அங்ஙனமாயினும் பாஷியகரர் சாரீரகத்தின் ஆரம்பத்தில் ஆத்ம அநாத்மாக்களின் அந்நியோந்நியாத்தியாசத்தைக் கூறியிருக்கின்றனர். ஆகலால் அநாத்மாவில் ஆத்மாவினது அத்தியாசத்தின் நிஷேதமோ பொருந்தாது.

பரஸ்பர அத்தியாசத்தினை அந்நியோந்நியாத்தியாசமென்பர். ஆதலால் அநாத்மாவில் ஆத்மாத்தியாசத்தை அங்கீகரித்து முற்கூறிய சங்கைக்குச் சமாதானம் சொல்லுதல்வேண்டும், அச்சமாதானம் இவ்வாறும்:—

அத்தியாசம் இருவகைத்தாம். க. ஒன்றே சுவரூபாத்தியாசமாம். உ. மற்றையது ஸம்சர்க்காத்தியாசமாம்.

க. எப்பதரார்த்தத்தின் சுபரூபம் அநிர்வச நீயமாயுண்டாயிருக்கின்றதோ அதனைச் சுவரூபாத்தியாசமென்பர். எங்ஙனம்:

(க) சுத்தியில் இரஜதத்தின் சுவரூபாத்தியாசமுளது.

(உ) ஆத்மாவில் அகங்காரமுதலிய அநாத்மாக்களின் சுவரூபாத்தியாசமுளது,

உ. அங்ஙனமே எப்பதார்த்தத்திற்குச்சுவரூபமோ வியாவகாரிகமாகவாவது பாரமார்த்திகமாகவாது முதலிற் சித்தித்திருக்க அநிர்வசநீய சம்பந்தம் உத்பத்தி யாகின்றதோ, அது ஸம்சர்க்காத்தியாச மெனப்படும். எங்ஙனம் முகத்தில் கண்ணுடியின் ஓர் சம்பந்த மமில்லை. இரண்டு பதார்த்தங்களும் வியாவகாரிகமாயிருக்கின்றன. ஆண்டுக் கண்ணுடியில் முகத்தின் சம்பந்தம் தோற்றுகின்றது. ஆதலால் அநிர்வசநீய சம்பந்தம் உற்பத்தியாயிருக்கின்றது. இவ்வாற்றல் அநேக இடங்களில் சம்பந்திகளோ வியாவகாரிகமாயிருக்கின்றன. அவற்றின் சம்பந்தமும் சமபந்தங்களின் ஞானமும் அநிர்வசநீயமாயுண்டாயிருக்கின்றன. அவற்றை ஸம்சர்க்காத்தியாச மென்பர்.

உ0௬. அங்ஙனமே தேசத்தின் அத்தியாசம் அகங்காரத்திலில்லை; சேதனமோ பாரமார்த்திகமாம். அதன்சம்பந்தத்தின் அத்தியாசம் அகங்காரத்திலுளது. ஆத்மத்தன்மை சேதனத்திலுள்ளது; அகங்காரத்தில் தோற்றுகின்றது. இதனால் ஆத்மாவின் தாதாத்மியம் சேதனத்திலுளதாய் அகங்காரத்திற் றோற்றுகின்றது. ஆதலால் ஆத்மசேதனத்தின் தாதாத்மிய சம்பந்தம் அகங்காரத்தில் அநிர்வசநீயமா யிருக்கின்றது.

அல்லது ஆத்மாவின் கண்ணுள்ள தாதாத்மியத்தின் அநிர்வசநீயசம்பந்தம் அகங்காரத்திலுளது. ஆதலால் சேதனம் கற்பிதமன்று. ஆனால் சேதனத்தின் தாதாத்மிய சம்பந்தம் அல்லது ஆத்மசேதனத்தினது தாதாத்மியத்தின் சம்பந்தம் கற்பிதாமாம்.

உ0௭. இவ்வாற்றால்,

க. யாண்டுப்பாரமார்த்திக பதார்த்தத்தின் அபாவ முண்டாய் அதன் பிரதீதி யாண்டு உண்டாகின்றதோ, ஆண்டுப் பாரமார்த்திக பதார்த்தத்தின் அநிர்வசநீய சம்பந்தம் வியாவகாரிக பதார்த்தத்தில் உற்பத்தியாகின்றது. அதன் ஞானமும் அநிர்வசநீயமாகவே உற்பத்தியாகின்றது.

உ. வியாவகாரிக பதார்த்தத்தின் அபாவ முண்டாக யாண்டுத் தோற்றுகின்றதோ ஆண்டு அநிர்வசநீயமாகவே சம்பந்தி உற்பத்தியாகின்றது. சம்பந்தியின் ஞானமும் அநிர்வசநீயமாகவே உற்பத்தியாகின்றது. சிலவிடத்துச் சம்பந்தமாத்திரமும் சம்பந்தத்தின் அநிர்வசநீயஞானமும் உற்பத்தியாகின்றன.

சகல அதிஷ்டானங்களினும் அத்தியஸ்தத்தின் விஷமத்தையே அநிர்வசநீயசத்தையாம்.

ஆத்மாவின் அத்தியாசம் அநாத்மாவில் உண்டாயின் ஆண்டும் அதிஷ்டான அநாத்மா வியாவகாரிகமாம்; அத்தியஸ்தம் ஆத்மாவன்று. ஆனால் ஆத்மாவின் சம்பந்தம் அநாத்மாவில் அத்தியஸ்தமாம்; ஆதலால் அது அநிர்வசநீயமாம்.

சத்தசத்தின் லக்ஷணத்தினை (சத்திற்கும் அசத்திற்கும் வேறாயதனை) அநிர்வசநீயமென்பர்.

௩க. பிரசங்கத்தால் நேர்ந்த சங்கை சமாதான முதலிய அர்த்தத்தைக் கூறுதல் உ0அ-உகக.

நான்கு சங்கைகள்.

உ0அ. க. இப்பிரசங்கத்தில் முதற்

சங்கை யிதுவாம்:—

"சொப்பனப் பிரபஞ்சத்தின் அதிஷ்டானம் சாக்ஷியாம்" என்று சொல்லப்பட்டது.

அதுசம்பவியாது. ஏனெனின், எவ்வதிஷ்டானத்தில் எவ்வாரோபித முண்டாகின்றதோ அவ்வதிஷ்டானத்தோடு அது சம்பந்தமுடையதாகத் தோற்றுகின்றது. எங்ஙனம்: சுத்தில் ஆரோபிதம் இரஜதமாம். அது "இது இரஜதம்" என்பதாகச் சுத்தியின் இதந்தை (இதுவெனுந் தன்மை) யோடு சம்பந்த முடையதாய்த்தோற்று கின்றது. ஆத்மாவினிடத்துக் கர்த்திருத்துவ முதலியன ஆரோபிதமாம். அவை "அகம் கர்த்தா (யான்செய்பவன்)" என்பதாக ஆத்மாவோடு சம்பந்த முடையனவாகத் தோற்றுகின்றன. அங்ஙனமே சொப்பனத்தின் யானை முதலியன சாக்ஷியினிடத்து ஆரோபிதமாமாயின், "யான் யானை" "என்னிடத்து யானை" என்றிவ்வாறு சாக்ஷியினோடு சம்பந்தமுடையனவாகத்தோற்றுதல்வேண்டும்.

உ0௬. இரண்டாவது சங்கை யிதுவாம்:- "சுத்தியில் இரஜதாபாவம் (வெள்ளியின்மை) வியாவகாரிகமும் பாரமார்த்திகமுமாம்" என்று முன் கூறப்பட்டது.

அது பொருந்தாது. எனெனின், அத்வைத வாதத்தில் ஒரு சேதனமே பாரமார்த்திகமாம். அதனின் வேருகியதனைப் பாரமார்த்திகமெனக் கொள்ளின் அத்வைத வாதத்திற்கு ஹானியுண்டாகும். பாரமார்த்திக ரஜதமில்லை யாகலின் பாரமார்த்திக ரஜதத்தின் அபாவமிருக்கின்றதென்று கூறுதல் பொருந்தும். பாரமார்த்திக அபாவமிருக்கின்றதென்று கூறுதல் பொருந்தாது.

உகO. ந மூன்ருவது சங்கை இதுவாம்:- "சுத்தியில் அநிர்வசநீய ரஜதத்தின் உற்பத்தி நாசங்கள் உண்டாகின்றன" என்று முன் கூறப்பட்டது.

அதுசம்பவியாது. எனெனின் இரஜதத்திற்கு உற்பத்தி நாசமுளதாயின், கடத்தின் உற்பத்தி நாசத்தினைப்போல இரஜதத்தின் உற்பத்தி நாசம் தோற்றுதல்வேண்டும்.

(க) எங்ஙனம் கடத்தின் உற்பத்தி உண்டாகுங்காலத்துக் "கடம் உற்பத்தியாகின்றது" என்று கடத்தின் உற்பத்தி தோன்றுகின்றதோ,

(உ) கடத்திற்கு நாசம் உண்டாகுங்கால

த்துக் "கடம் அழிந்தது" என்று கடத்தின் நாசம் தோன்றுகின்றதோ, (க) அங்ஙனமே சுத்தியில் இரஜதத்தின் உற்பத்தியுண்டாகுங்காலத்து "இரஜதத்தின் உற்பத்தியுண்டாயிற்று" என்பதாக உற்பத்தி தோற்றுதல்வேண்டும்.

(உ) இரஜதத்திற்கு ஞானத்தினல் நாசமுண்டாயின் அப்போது "இரஜதத்திற்குச் சுத்திதேசத்தில் நாசமுண்டாயிற்று" என்றிவ்வாறு நாசம் தோற்றுதல்வேண்டும்.

சுத்தியிற் கேவலரஜதம் தோற்றுகின்றது; அதன் உற்பத்தி நாசம் தோற்றுகிறதில்லை. ஆகலால் பிறநூல்களின்படி அந்நியதாக்கியாதி முதலியனவே நலமுடையனவாம். அநிர்வசநீயக்கியாதி சம்பவியாது.

உகக. ச. நான்காவது சங்கையிதுவாம்:- "சத்தசத்திற்கு விலக்ஷணமான அநிர்வசநீய ரஜத முதலியன உற்பத்தியாகின்றன" என்று முன் சொல்லப்பட்டது.

அது முற்றும் அசங்கதமாம் (பொருத்தமின்றியதாம்).

(க) சத்திற்கு விலக்ஷணம் அசத்தாம்.
(உ) அசத்திற்கு விலக்ஷணம் சத்தாம்.

(க) "சத்திற்கு விலக்ஷணமாகவோ யிருக்கின்றது; அசத்தன்று" என்று கூறுதல் விருத்தமாம்.
(உ) அங்ஙனமே "அசத்திற்கு விலக்ஷணமாம்; சத்தன்று" என்று கூறுதலும் விருத்தமாம்.

நான்கு சங்கைகளுக்கும் கிரமமாக இவை சமாதானமாம்:—

உகஉ. க. முதற்சங்கையின் சமாதானம்:- "சாக்ஷியில் சொப்பனுத்தியாச முண்டாயின் 'யான் யானே' 'என்னிடத்து யானே' என்றுதோற்றுதல்வேண்டும்" என்னும் சங்கைக்கு,

இது சமாதானம்:— பூர்வ அநுபவத்தாற் றோன்றிய ஸம்ஸ்காரத்தினுல் அத்தியாச முண்டாகின்கிறது. எவ்வாறு பூர்வ அநுபவமுண்டாகின்றதோ, அவ்வாறே ஸம்ஸ்காரமு முண்டாகின்றது. ஸம்ஸ்காரத்திற்குச் சமானமாக அத்தியாசமுண்டாகின்றது.

சகல அத்தியாசங்களுக்கும் உபாதான காரணமான அவித்தையோ சமானமாம். ஆனால் நிமித்தகாரணம் பூர்வ அநுபவ ஜந்நிய ஸம்ஸ்காரமாம். எவ்வாறு அநுபவ ஜந்நிய ஸம்ஸ்காரம் உண்டாகுமோ, அவ்வாறே அவித்தையின் பரிணாமம் உண்டாம்.

(க) எப்பதார்த்தத்தின் யானெனும்வடிவ ஞான ஜந்நிய ஸம்ஸ்காரத்தோடு கூடிய அவித்தை யுளதாகின்றதோ, அப்பதார்த்தத்தின் யானெனும் வடிவ அவித்தையின் பரிணாமரூப அத்தியாச முண்டாகின்றது.

(உ) எதன் எனதெனும்வடிவ அநுபவ ஜந்நிய ஸம்ஸ்காரத்தோடு கூடிய அவித்தை யுளதாகின்றதோ, அப்பதார்த்தத்தின் எனதெனும்வடிவ அவித்தையின் பரிணாமரூப அத்தியாசம் உண்டாகின்றது.

(ங) எப்பதார்த்தத்தின் இதுவெனும்வடிவ அநுபவ ஜந்நிய ஸம்ஸ்காரத்தோடு கூடிய அவித்தையுளதாகின்றதோ, அப்பதார்த்தத்தின் இது வெனும் வடிவ அவித்தையின் பரிணாமரூப அத்தியாச முண்டாகின்றது.

சொப்பனத்தினது யானை முதலியவற்றின் பூர்வ அநுபவம் இதுவெனும் வடிவமாகவே யுண்டாயிருக்கின்றது. யானெனும் வடிவ முதலிய அநுபவம் உண்டாகவில்லை. இதனால் அநுபவஜந்நிய ஸம்ஸ்காரமும் யானை முதலியவற்றைக் கோசரிக்கும் இதுவெனும் வடிவமே யாகின்றது. ஆதலால் "இது யானை" என்று தோற்றுகின்றது. "என்னிடத்து யானை" "யான் யானை" ! யென்று தோற்றுகிறதில்லை.

ஸம்ஸ்காரம் அநுமேயமாம். காரியத்திற்கநுகூலமான ஸம்ஸ்காரத்தின் அநுமிதியாகின்றது. ஸம்ஸ்காரத்தை யுண்டு பண்ணும் பூர்வ அநுபவமும் அத்தியாச வடிவமாம். அதனை யுண்டுபண்ணும் ஸம்ஸ்காரமும் இதுவெனும் வடிவமாகவே யுண்டாகின்றது. அத்தியாசம் பிரவாக அநாதியாம். ஆதலால் முதல் அநுபவத்தின் இதுவெனும் வடிவத்தன்மையில் ஓர் ஏதுவுமில்லை. என்னும் சங்கை சம்பவியாது ஏனெனில் அநாதிபக்ஷத்தில் ஓர் அநுபவமும் முதலிலில்லை. முன்முன் உள்ளவற்றினும் பின்பின் உள்ளவை யாவும் அநுபவமாம்.

௨௧௩. ௨. இரண்டாவது சங்கையின் சமாதானம்:—

"அபாவத்தினைப் பாரமார்த்திகமெனக் கொள்ளின் அத்வைதத்திற்கு ஆனியுண்டாகும்" என்ற இரண்டாவது சங்கைக்கு,

இது சமாதானமாம்:— சகல பதார்த்தங்களும் சித்தாந்தத்திற் கற்பிதமாம். அவற்றின் அபாவம் பாரமார்த்திகமாம். அது பிரஹ்மரூபமாம். இது பாஷியகாரருக்குச் சம்மதம். இதில் விசேஷவார்த்தை மேல் பதினான்காவது ரத்நத்திற்கூறுவாம். இக்காரணத்தால் அத்வைதத்திற்கு ஹானியில்லை.

௨௧௪. ௩. மூன்றாவது சங்கையின் சமாதானம்:—

"சுத்தியில் இரஜதத்தின் உற்பத்தியை அங்கீகரிக்கின் உற்பத்தி தோற்றுதல் வேண்டும்" என்பதற்கு,

இது சமாதானமாம்:—சுத்தியில் தாதாத்மிய சம்பந்தத்தினால் இரஜதம் அத்தியஸ்தமாம். சுத்தியினது இதந்தையின் சம்பந்தம் இரஜதத்தில் அத்தியஸ்தமாம். ஆதலால் "இது இரஜதம்" என்றிவ்வாறு இரஜதம் தோற்றுகின்றது. எங்ஙனம் சுத்தியின் இதந்தையினது சம்பந்தம்

இரஜதத்தில் அத்தியஸ்தமாம். அங்ஙனமே சுத்தியில் பிராக்சித்தத்துவ (முன்னரே பெறப்பட்டுள்ள தன்மைத்) தர்மமுமாம். இரஜதம் தோற்றுங்காலத்திற்கு முன்பெறப்பட்டுள்ளதனை பிராக்சித்த மென்பர். இரஜதம் தோற்றுங் காலத்திற்குமுன் சித்தித்துள்ளது சுத்தியாம். இவ்வாற்றால் சுத்தியில் பிராக்சித்தத்தன்மைத் தர்மமுளது அதன் சம்பந்தத்தின் அத்தியாசமும் இரஜதத்தி லுண்டாகின்றது. இவ்வாற்றால் "இப்பொழுது இரஜதம்" என்னும் உணர்ச்சி யுண்டாகிறதில்லை. "முன் உண்டாகிய இரஜதத்தைக் காண்கின்றேன்" என்று தோற்றுகின்றது. இவ்வுணர்ச்சிக்கு விஷயம் முன் உண்டாகிய தன்மையாம். அது இரஜதத்திலில்லை. ஆனால் இரஜத்தில் "இப்பொழுது உண்டாகிய தன்மை" இருக்கின்றது. "முன் உண்டாகிய தன்மை" இரஜதத்தில் தோற்றுகின்றது.

ஆண்டு இரஜதத்தில் அநிர்வசநீயமான முன்
னுண்டாயிருத்தற் றன்மையினது உற்பத்தி அங்
கீகரிக்கின் கௌரவமுண்டாகின்றது. சுத்தியின்
முன் உண்டாகிய தன்மையின் உணர்ச்சி இரஜ
தத்தில் அங்கீகரிக்கின் அந்நியதாக்கியாதிகொள்ள

வேண்டியதாகின்றது. இத்தன்மைய இடங்களில் அந்நியதாக்கியாதியை அங்கீகரித்து மிருக்கின்றனர். அங்ஙனமாயினும் சுத்தியின் முன்பெறப்பட்டுள்ள தன்மைத் தர்மத்தின் அநிர்வசநீய சம்பந்தம் இரஜதத்தில் உற்பத்தியாகின்றதென்னும்பக்ஷம் நலமுடையதாம்.

இவ்வாற்றால் சுத்தியினது பிராக்சித்தத தன்மையின் சம்பந்த உணர்ச்சினால் உற்பத்தி உணர்ச்சிக்குப் பிரதிபந்த முண்டாகின்றது. ஏனெனின் பிராக்சித்தத்தன்மையிம் வர்த்தமான உற்பத்தியுமாகிய இரண்டும் ஒன்றற்கொன்று விரோதிகளாம். யாண்டுப் பிராக்சித்தத்துவம் உண்டாகின்றதோ ஆண்டு அதீதஉற்பத்தி உண்டாகின்றது. வர்த்தமானஉற்பத்தி உள்ளவிடத்துப் பிராக்சித்தத்துவ மிருப்பதில்லை.

இவ்வாற்றால் சுத்தியின் கண்ணுள்ள பிராக்சித்தத்தன்மையின் சம்பந்தத்தினது உணர்ச்சியால் உற்பத்தி யுணர்ச்சிக்குப் பிரதிபந்தம் உண்டாகுதலால் இரஜதத்தின் உற்பத்தியுண்டாகியும் உற்பத்தியின் உணர்ச்சி யுண்டாகிறதில்லை.

“இரஜதத்திற்கு நாசமுண்டாயின் அது தோற்றுதல் வேண்டும்” என்று சொல்லப்பட்டது.

அதற்கு இது சமாதானமாம்:— அதிஷ்டானத்தின் ஞானமுண்டாயின் அப்போது இரஜதத்தின் நாசமுண்டாகின்றது. அதிஷ்டான ஞானத்தினால் இரஜதத்தின் பாதநிச்சயமுண்டாகின்றது. சுத்தியில் காலத்திரயத்திலும் இரஜதமில்லை யெனும் நிச்சயத்தினைப் பாதமென்பர். இத்தன்மைய நிச்சயம் நாசவுணர்ச்சிக்கு விரோதியாம். ஏனெனின் நாசத்தில் பிரதியோகி காரணமாகின்றது. பாதத்தினால் பிரதியோகியின் என்றுமின்மை தோன்றுகின்றது. எதற்கு ‘என்றுமில்லை” என்னும் ஞானமுண்டாகின்றதோ அதன் நாசபுத்தி சம்பவியாது.

அல்லது எங்ஙனம் கடமுதலியவற்றிற்குத் தண்டமுதலியவற்றால் பொடியாகுதல்வடிவ நாசமுண்டாகின்றதோ, அங்ஙனம் கற்பிதத்திற்கு நாசமுண்டாகிறதில்லை. ஆனால் அதிஷ்டானத்தின் ஞானத்தினால் அஞ்ஞானவடிவ உபாதானத்தோடு கற்பிதத்திற்கு நிவிருத்தி யுண்டாகின்றது. அதிஷ்டான மாத்திரத்தின் எஞ்சுதலே அஞ்ஞானத்தோடு கற்பிதத்தின் நிவிருத்தியாகின்றது. அவ்வதிஷ்டானம் சுத்தியாம். அதன் எஞ்சுதல் வடிவ இரஜதத்தின் நாசம் அநுபவசித்தமாம்; ஆதலால் இரஜதத்தினது நாசத்தின் உணர்ச்சி உண்டாகாதென்று கூறுதல் சாகசத்தினாலாம்,

உகரு. ச. நான்காவது சங்கையின் சமாதானம்:—

"சத்தசத்திற்கு விலக்ஷணமென்று கூறுதல் விருத்தமாம்" என்னும் நான்காவது சங்கைக்கு.

இது சமாதானமாம்:- சுவரூபமின்றியதனைச் சத்துவிலக்ஷணமென்றும் இருக்கின்ற சுவரூபத்தை அசத்துவிலக்ஷணமென்றும் கூறின் விரோதமுண்டாம். ஏனெனின் ஓரேபதார்த்தத்தில் சுவரூபமின்றிய தன்மையும் சுவரூபத்தோடுகூடிய தன்மையும் இல்லையாகலின் சத்தசத்திற்கு விலக்ஷமென்பதற்கு முற்கூறியது பொருளன்று. ஆனல்,

க. மூன்றுகாலத்திலும் எதற்குப்பாதமுண்டாகிறதில்லையோ அதனைச் சத்தென்பர்.

உ. எதற்குப் பாதமுண்டாகின்றதோ அது சத்துவிலக்ஷணமெனப்படும்.

ங. முயற்கொம்பையும் மலடிமைந்தனையும் போலச் சுவரூபமின்றியதனை அசத்தென்பர்.

ச. அதனின் விலக்ஷணம் சுவரூபமுடையதாம். இவ்வாற்றால்,

க. பாதயோக்கிய (பொய்யென நிச்சயித்தற்குரிய) சுவரூபமுடையது சத்தசத்திற்கு விலக்ஷணமேன்னும் சொல்லிற்குப் பொருளாம்.

உ. சத்துவிலக்ஷணம் என்னும் சொல்லிற்குப் பாதயோக்கியமென்பது பொருளாம்.

ங. சுவரூபமுடையதென்னும் இத்துணை அசத்துவிலக்ஷணமேன்னும் சொல்லிற்குப் பொருளாம்.

இவ்வாற்றால் யாண்டுப் பரமஞானமூளதோ ஆண்டு முழுவதும் அநிர்வசநீய பதார்த்தத்தின் உற்பத்தி யுண்டாகின்றது.

உகசா. சிலவிடத்துச் சம்பந்தியின் உற்பத்தி யுண்டாகின்றது. எங்ஙனம்:- சுத்தியில் இரஜதத்தின் உற்பத்தி யிருக்கின்றது. இரஜதத்தில் சுத்தியின்கண்ணுள்ள தாதாத்மியத்தினது சம்பந்தத்தின் உற்பத்தி யுண்டாகின்றது. சுத்தியின் கண்ணுள்ள தாதாத்மியத்திற்கு இரஜதத்தில் அந்நியதாக்கியாதி யில்லை. அங்ஙனமே

சுத்தியில் பிராக்சித்தத்துவ தர்மமிருக்கின்றது. அதன் அநிர்வசநீயசம்பந்தத்தின் உற்பத்தி இரஜதத்தி லுண்டாகின்றது. அதற்கும் அந்நியதாக்கியாதி யில்லை. இவ்வாற்ருல்,

க. அந்நியோந்நியாத்தியாசத்திற்கும் இது உதாரணமாம்.
உ. சம்பந்தாத்தியாசத்திற்கும் இது உதாரணமாம்.
ங. சம்பந்தி அத்தியாசத்திற்கும் இது உதாரணமாம்.
க. அநிர்வசநீயவஸ்துவின் தோற்றத்தை ஞானுத்தியாச மென்பர்.
உ. ஞானத்தின் அநிர்வசநீய விஷயத்தினை அர்த்தாத்தியாச மென்பர்.

ஆதலால்,

க. ஞானுத்தியாச அர்த்தாத்தியாசங்களுக்கும் இது உதாரணமாம்.
உ. இரஜதத்தன்மைத் தர்மவிசிஷ்ட இரஜதத்தின் அத்தியாசம் சுத்தியிலிருக்கின்றது. ஆதலால் தர்மி அத்தியாசத்திற்கும் இது உதாரணமாம்.

உகஎ. யாண்டு அந்நியோந்நியாத்தியாசம் உளதாகின்றதோ, ஆண்டு இரண்டற்கும் பரஸ்பரம் சுவரூபமாக அத்தியாச முண்டாகிறதில்லை ஆனால் ஆரோபிதத்தின் அத்தியாசம் சுவரூபமாக உண்டாகின்றது. சத்தியவஸ்துவின் தர்மம் அல்லது சம்மந்தம் அத்தியஸ்தமாகின்றது.

சம்பந்தாத்தியாசமும் இருவகைத்தாம்.

க. சிலவிடத்துத் தர்மத்தினது சம்பந்தத்தின் அத்தியாசம் உண்டாகின்றது.

(க) எங்ஙனம் முற்கூறிய உதாரணத்தில் சுத்தியின் கண்ணுள்ள இதந்தைவடிவ தர்மத்தினது சம்பந்தத்தின் அத்தியாசம் இரஜதத்திலிருக்கின்றது.

(உ) "சிவப்புப் படம்" என்னுமிடத்தில் குசும்பாவிலுள்ள சிவப்புவடிவ தர்மத்தினது சம்பந்தத்தின் அத்தியாசம் படத்திலிருக்கின்றது.

(ங) கண்ணாடியில் முகத்தினது சம்பந்தத்தின் அத்தியாசமுண்டாகின்றது.

உ. (க) அந்தக்கரணத்தின் அத்தியாசம் ஆத்மாவில் சுவரூபமாக இருக்கின்றது.

(உ) அந்தக்கரணத்தில் ஆத்மாவின் அத்தி யாசம் சுவரூபமாக இல்லை. ஆனுல் ஆத்மசம்பந்தத்தின் அத்தியாச மிருத் தலின் ஆத்மாவின் சம்சர்க்காத்தியாச மிருக்கின்றது. ஞானசுவரூபம் ஆத்மா வாம்; அந்தக்கரணமன்று. ஞானத்தின் சம்பந்தம் அந்தக்கரணத்தில் தோற்று கின்றது. ஆதலால் ஆத்மாவினது சம்பந்தத்தின் அத்தியாசம் அந்தக் கரணத்திலிருக்கின்றது. அங்ஙனமே "கடம் விளங்குகின்றது" "படம் விளங்குகின்றது" என்றிவ்வாறு விளக்க சம்பந்தம் சர்வ பதார்த்தங்களிலும் தோற்றுகின்றது. இவ்வாத்ம சம்பந் தத்தின் அத்தியாசம் சகல பதார்த் தங்களினு மிருக்கின்றது.

உகஅ. ஆத்மாவில் காணத்துவம் (ஒற்றைக்கண்ணுடைமை) முதலிய இந்திரிய தர்மங்கள் தோற்றுகின்றன வாகலின் காணத் துவாதி தர்மங்களின் அத்தியாசம் ஆத்மாவில் உண்டாகின்றது. இந்திரியங்களின் தாதாத்மிய அத்தியாசம் ஆத்மாவிலில்லை. ஏனெனின் "யான் காணன் (ஒற்றைக் கண்ணன்)" என்று தோன்று கின்றது. "யான் நேத்திரம்" என்று தோற்று

கிறதில்லை. ஆதலால் நேத்திர தர்மமாகிய காணத்துவத்தின் அத்தியாசம் ஆத்மாவிமலிருக் கின்றது; நேத்திரத்தின் அத்தியாசமில்லை.

நேத்திர முதலிய நிகிலப் பிரபஞ்சத்தின் அத்தியாசம் ஆத்மாவிலிருக்கின்ற தெனினும் பிரஹ்ம சேதனத்தில் சகல பிரபஞ்சத்தின் அத்தியாசமுமிருக்கின்றது. "துவம்" பதார்த் தத்தில் சகல பிரபஞ்சத்தின் அத்தியாசமுமில்லை. அவித்தைக்கு இத்தன்மைய அற்புதமகிமை யிருக்கின்றது ஒரே பதார்த்தத்திற்கு ஒரே தர்மவிசிஷ்டத்தன்மையின் அத்தியாச முண்டா கிறதில்லை. எங்ஙனம் பிராஹ்மணத்தன்மை முதலிய தர்ம விசிஷ்ட சரீரத்தின் தாதாத்மிய அத்தியாசம் ஆத்மாவில் உண்டாகின்றது. சரீரத் தன்மை விசிஷ்ட சரீரத்தின் அத்தியாசமுண்டா கிறதில்லை. இதனுற்றான் விவேகிக்கும் "பிராஹ் மணன்யான், மனுஷன்யான்" என்னும் வியவகார முண்டாகிறது. "சரீரம் யான்" என்னும் வியவ காரம் விவேகிக்கு உண்டாகிறதில்லை. ஆதலால் அவித்தைக்கு அற்புத மகிமை யிருத்தலின் இந்தி ரியங்களின் அத்தியாசமின்றி ஆத்மாவில் காணத் தன்மைமுதலிய தர்மங்களின் அத்தியாசம் சம்ப விக்கின்றது. இது தர்மத்தியாசத்திற்கு உதாரண மாம்.

உககூ. முற்கூயறிபடி சகல பிரமங்களி லும் முற்கூறப் பட்ட இரண்டு இலக்ஷணங்களும் பொருந்துகின்றன. ஆனால் க. பரோக்ஷம் உ. அபரோக்ஷம் என்னும் பேதத்தால் பிரமம் இரு வகைத்தாம்.

க. அபரோக்ஷப் பிரமத்திற்கு உதாரண மோ கூறிவந்தோம்.

உ. யாண்டு வந்நியசூந்ய தேசத்தில் மகான சத்தன்மை வடிவ ஏதுவினால் வந்நியின் அநுமிதி ஞானம் உண்டாகின்றதோ, அல்லது வஞ்ச கனது வாக்கியத்தினால் வந்நியின் சப்தப்பிரமம் உண்டாகின்றதோ, அவையிரண்டும் பரோக்ஷப் பிரமமாம். யாண்டுப் பரோக்ஷப் பிரமமுண்டாகின் றதோ, ஆண்டு நையாயிகர் முதலியோர் அந்நிய தாக்கியாதி முதலிய வற்றால் நிர்வாகம் செய்கின் றனர். அதனின் வேறாகக் கூறுதலில் அத்வை தவாதிக்கு ஆக்கிரகமில்லை.

அபரோக்ஷ அத்தியாசத்திலேயே பாரி பாஷிக அத்தியாசத்தினை விலக்ஷணமாகக் கொண்டிருக்கின்றனர். எனெனின் கர்த்திருத் தன்மை முதலிய அநர்த்தப் பிரமம் அபரோக்ஷ

மாம். அதன் சுவரூபத்தில் ஞானத்தால் நிவர்த் திக்கப் படுந்தன்மையின் பொருட்டு அத்தியாசத் தின் நிரூபண மிருக்கின்றது. ஆதலால் அப ரோக்ஷப் பிரமத்திற்கே திருஷ்டாந்தத் தன்மை யின் பொருட்டு அத்தியாசத் தன்மையைப் பிரதிபாதித்தலில் ஆக்கிரகமுண்டு. பரோக்ஷப் பிரமத்தில் பிறநூல்களினும் வேற்றுமையைக் கூறுதலில் பிரயோஜனமில்லை. அபரோக்ஷப் பிரமத்தில் முற்கூறியபடி லக்ஷணத்தின் சமன் வய முண்டாகின்றது.

ருஉ. சித்தாந்தத்தில் அங்கீகரித்துள்ள அநிர்வசநீயக்கியாதியின் நிச்சயம்.

உஉ0-உஉஉ.

உஉ0. சித்தாந்தத்தில் அநிர்வசநீயக்கியாதி யுளது. அதன் றன்மை இதுவாம்:— யாண்டு இரஜ்ஜு முதலியவற்றில் சர்ப்ப முதலிய பிரம முண்டாகின்றதோ, ஆண்டு

க. முதல் லக்ஷணத்திலோ சர்ப்பமுதலிய சம்ஸ்காரத்தோடு கூடிய புருஷர்து திமிராதி தோஷத்தோடு கூடிய நேத்

திரத்திற்கு இரஜ்ஜு முதலியவற்றோடு சம்பந்த முண்டாயின், அப்போது இரஜ்ஜுவின் விசேஷ தர்மமாகிய இரஜ்ஜுத்தன்மை தோற்றுவதில்லை. இரஜ்ஜுவில் பழுதைவடிவ அவயவ மிருக்கின்றது; அது தோற்றுகிற தில்லை. அப்போது,

உ. இரண்டாவது க்ஷணத்தில் இரஜ்ஜுவில் சாமாநிய தர்மமாகிய இதந்தை தோற்றுகின்றது.

(க) வர்த்தமானகால முன்னிடங்களின் சம்பந்தம் இதந்தை யெனப்படுகின்றது. அதனையே சாமாநிய அம்ச மென்றும் ஆதார மென்றும் கூறுவர்.

(உ) பழுதைவடிவமும் மூவளைய வடிவமுமான இரஜ்ஜுத் தன்மைத் தர்ம விசிஷ்ட இரஜ்ஜு விஷேச அம்ச மெனப்படுகின்றது. அதனையே அதிஷ்டான மென்றுங் கூறுவர்.

அவ்வதிஷ்டானத்தின் சாமாநிய ஞானமும் அத்தியாசத்திற்கு ஏதுவாம். அந்தச் சாமாநிய ஞானம் தோஷத்தோடு கூடிய நேத்திரவடிவப்

பிரமாணத்தினால் உண்டாயிருக்கின்றதாகலின் பிரமையாம். ஆதலால் நேத்திர வாயிலாக அந்தக்கரணம் இரஜ்ஜுவையடைந்து இதுவெனும் வடிவ பரிணாமத்தை அடைகின்றது. அதன் பின்னர்

ங. மூன்றாவது க்ஷணத்தில் அந்தத் தோஷ ஜந்நிய இது வென்னும் வடிவ விருத்தியுபகித சேதனத்தின் கண்ணுள்ள அவித்தையில் க்ஷோப முண்டாகின்றது. உபாதானத்தின்காரியாபிமுகத் (காரியத்திற்கு எதிர்ப்படுந்) தன்மையை க்ஷோப மென்பர்.

ச. நான்காவது க்ஷணத்தில் அந்த அவித்தையினது தமோகுணத்தி னம்சமும் சத்துவ குணத்தின் அம்சமுமாகிய இரண்டும் சர்ப்பாதி விஷயாகாரமும் ஞானாகாரமுமான பரிணாமத்தையடைகின்றன. அந்தச் சர்ப்ப முதலியனவும் அவற்றின் ஞானமும் அவித்தையின் பரிணாமமும் சேதனத்தின் விவர்த்தமுமாம். ஆதலால் சர்ப்ப முதலியனவும் ஞான வடிவமுமாகிய

ஒரு தர்மியில் இரண்டு தர்மங்களிருக்கின்றன. எங்ஙனம் ஒரே புருஷவடிவ தர்மயில் தனது பிதாவின் அபேக்ஷையால் புத்திரத்தன்மையும் பாட்டனது அபேக்ஷையால் பௌத்திரத் தன்மையுமாகிய இரண்டு தர்மங்களிருக்கின்றனவோ, அங்ஙனமே ஈண்டுச் சர்ப்ப முதல் ஆகாயாதி சகல பிரபஞ்சத்திலும் விகாரியான அவித்தையின் அபேக்ஷயால் பரிணாமத் தன்மையும் இரஜ்ஜுவாதி உபகித அல்லது மாயா உபகித சேதனவடிவ அதிஷ்டானத்தின் அபேக்ஷையால் விவர்த்தத்தன்மையுமாகிய இரண்டு தர்மங்களிருக்கின்றன.

(க) உபாதானத்தின் சமானசத்தையுடைய அந்நியதா சுவரூபம் (வேற்று வடிவம்) பரிணாம மெனப்படும். எங்ஙனம் தனது உபாதானமான பாலிற்குச் சமான சத்தை அதாவது வியாவகாரிக சத்தை யுடையதும் இனிமை பாற்றன்மைகளினின்றும் புளிப்பாயிருத்தலால் வேற்றுச்சுவரூபமும் தயிராம்; ஆதலால் அது பாலின் பரிணாமமாம். அங்ஙனமே முற்கூறிய பிரபஞ்சமும் அவித்தைக்குச் சமானமான பிராதிபாசிக அல்லது வியாவகாரிக சத்தையுடையதும் அரூபமாகிய அவித்தையினும் ரூபமுடையதா யிருத்தலின் வேற்றுச்சுவரூபமாம். ஆதலால் அது அவித்தையின் பரிணாமமாம்.

(உ) அஷ்டிடானத்தினும் விஷமசத்தையுடைய அந்நியதா சுவரூபம் விவர்த்தமெனப்படும். எங்ஙனம் வியாவகாரிகமும் பாரமார்த்திகமுமான சத்தையுடைய இரஜ்ஜு உபகிதமும் மாயா உபகிதமும் சேதனமாம். அதனினும் விஷம அதாவது விலக்ஷணப் பிராதிபாசிகமும் வியாவகாரிகமுமான சத்தையுடையதும் சமுசார தசையில் பாதிக்கப்படாத உபயசேதனங்களால் பாதிக்கப்படுவதாயிருத்தலின் வேற்றுச் சுவரூபமா யிருத்தலால் சர்ப்ப முதலிய பிரபஞ்சம் சேதனத்தின் விவர்த்தமாம்.

உஉக. இவ்வாற்றால் சர்ப்பம் தண்டம் மாலை ஜலதாரை பூமியின் பிளப்பு என்றல் முதலிய பத்துப் பதார்த்தங் களினின்றும் எந்தெந்தச் சம்ஸ்காரத்தோடு கூடிய புருஷனது தோஷத்தோடுகூடிய நேத்திரத்திற்கு இரஜ்ஜுவோடு சம்பந்தமுண்டாய், எதன் இதுவெனும் வடிவ விருத்தி உண்டாகின்றதோ, அதன் விருத்தி உபகித சேதனத்திலுள்ள அவித்தையின் பரிணாமம் அவ்வப் பதார்த்தமாகவும் அதனதன் ஞானவடிவமாகவும் கூடவே உண்டாகின்றது.

க. யாண்டு ஒரு இரஜ்ஜுவில் சர்ப்ப முதலியவற்றினுள் ஒரே பதார்த்தத்தின் சம்ஸ்காரத்தோடு கூடிய பத்துப் புருஷர்களது தோஷத்தோடு கூடிய நேத்திரங்கட்கு இரஜ்ஜுவோடு சம்பந்த முண்டாய், எதன் இதுவெனும் வடிவவிருத்தி உண்டாகின்றதோ, அதன் விருத்தியுபகித சேதனத்திலுள்ள அவித்தையின் பரிணாமம் அவ்வப்பதார்த்தமும் அதனதன் ஞானவடிவுமாக உண்டாகின்றது.

உ. யாண்டு ஒரு ரஜ்ஜுவில் பத்துப் புருஷர்களது தோஷத்தோடு கூடிய நேத்திரங்கட்கு இரஜ்ஜுவோடு சம்பந்தமுண்டாய்ச் சர்ப்பம் தண்டம் மாலை முதலிய ஒவ்வொன்றன் பிரமம் அவர்களுக்கு உண்டாகின்றதோ, ஆண்டு எவன் விருத்தி உபகித சேதனத்தில் எவ்விஷயம் உற்பத்தியாயிருக்கின்றதோ அது அவனுக்கே தோற்றுகின்றது; பிறனுக்கில்லை.

உஉஉ. இவ்வாற்றால் முற்கூறிய பிரமஞானம் எதுவோ அது இந்திரிய ஜந்நியமன்று; ஆனால் அவித்தையின் விருத்தி வடிவமாம். ஆனால் எந்த விருத்தி யுபகித சேதனத்திலுள்ள அவித்தையின் பரிணாமம் பிரமமா யிருக்கின்றதோ, அந்த இதுவெனும் வடிவவிருத்தி நேத்திரத்தினால் இரஜ்ஜு முதலிய விஷயங்களின் சம்பந்தத்தால் உண்டாகின்றது. ஆதலால் பிரமஞானத்தில் இந்திரிய ஜந்நியத் தன்மையின் பிரதீதி இருத்தலால் நையாயிகர்களுக்கு இந்திரிய ஜந்நியத்தன்மையின் பிராந்தி உண்டாகின்றது. ஓர் வேதாந்தியும் இவ்வாறு அங்கீகரித்திருக்கின்

றனர். ஆனால் அவர் வார்த்தை யுக்தி அநுப வங்களுக்கு விருத்தமாயிருத்தலின் நலமுடைய தன்று. இவ்வாற்றால் சித்தாந்தத்தில் அங்கீகரிக் கத்தக்க அநிர்வசநீயக்கியாதியின் கிரமம் சுருக்க மாகச் சொல்லப்பட்டது.

அநிர்வசநீயக்கியாதி நிரூபணமென்னும்

எட்டாவதுரத்நம் முடிந்தது.

ஒன்பதாவது ரத்நம்.

௨. அப்பிரமா விருத்தியின் பேதமான சத்கியாதியைக் காட்டுதலோடு அதன் கண்டனம்.

௨௨௩-௨௩௦

௩௩. சித்தாந்தத்திற்கு வேறாகிய சகல

கியாதிகளின் பெயர்களோடு சத்கியாதி வாதத்தைச் சொல்லுதல் பூர்வகமான அதன் நிராகரணத்தின் யோக்கியதை.

௨௨௩-௨௨௫

௨௨௩. சுத்தி முதலியவற்றில் இரஜத முதலிய பிரம முண்டாயின் ஆண்டுச் சித்தாந்த பக்ஷமின்றி ஐந்து பக்ஷங்களுள:— சத்கியாதி, அசத்கியாதி, ஆத்மக்கியாதி, அந்நியதாக்கியாதி, அக்கியாதி, என்பன பிரமத்தின் பெயர்களாம். எல்லோர் மதத்திலும் அந்நியதம (வேறு வேறான) பிரமத்தின் பெயர் பிரசித்தமாம். அத னின் வேறுவேறான அதனை அந்நியதம மென்பர்.

௨௨௪. அவற்றில் சத்கியாதி வாதியின் சித்தாந்தம் இதுவாம். சுத்தியின் அவயங்களோடு இரஜதத்தின் அவயவம் எப்போது மிருக்கின்றது. எங்ஙனம் சுத்தியின் அவயவம் சத்தியமோ அங் ஙனமே இரஜதத்தின் அவயவமுமாம்; மித்தை யன்று. எங்ஙனம் தோஷத்தோடு கூடிய நேத்திர சம்பந்தத்தால் சித்தாந்தத்தில் அவித்தையின் பரிணாமமாகிய அநிர்வசநீய ரஜதம் உற்பத்தியா

யிருக்கின்றதோ, அங்ஙனமே தோஷத்தோடு கூடிய நேத்திர சம்பந்தத்தால் இரஜதாயவங்களி னின்றும் சத்திய ரஜதம் உற்பத்தியா யிருக்கின் றது. அதிஷ்டான ஞானத்தினுல் எங்ஙனம் அநிர்வசநீய ரஜதத்தின் நிவருத்தி சித்தாந்தத் தில் உளதாகின்றதோ, அங்ஙனமே சுத்தி ஞானத்தால் சத்திய ரஜதத்திற்குத் தனது அவயங்களில் துவம்ச முண்டாகின்றது. இது சத்கியாதிவாதியின் மதம்.

௨௨௫. அந்தச் சத்கியாதிவாதியின் மதம் நிராகரிக்கத் தக்கதாம். ஏனெனின், சுத்தி ரஜத திருஷ்டாந்தத்தினுல் பிரபஞ்சத்தினது மித்தியாத்தன்மையின் அநுமிதி உண்டாகின் றது. சத்கியாதிவாதத்தில் சுத்தியில் இரஜதம் சத்தியமாம். அதனைத் திருஷ்டாந்தமாகக் கொண்டு பிரபஞ்சத்தில் மித்தியாத்தன்மைச் சித்தி உண்டாகிறதில்லை. ஆதலின் இப்பக்ஷம் நிராகரிக்கத் தக்கதாம்.

௯௪. சத்கியாதிவாதத்தின் கண்டனம்

௨௨௬-௨௩௦.

௨௨௬. இப்பக்ஷத்தில் இது தோஷமாம்:

சுத்திஞானத்திற்குப் பின் மூன்றுகாலத்திலும் இரஜதமில்லை. இவ்வாற்ருல் சுத்தியில் மூன்று காலத்து இரஜதமின்மை தோற்றுகின்றது. சித் தாந்தத்திலோ அநிர்வசநீய ரஜதம் மத்தியகாலத் திலுண்டாகின்றது. வியாவகாரிக ரஜதாபாவம் முக்காலத்தையதாம். சத்கியாதிவாதியின் மதத் தில் வியாவகாரிக ரஜதம் உளதாயின் அக்காலத் தில் வியவகாரிக ரஜதாபாவம் சம்பவியாது. ஆத லால் முக்காலத்தைய ரஜதமின்மையின் பிரதீ தியால் வியாவகாரிக ரஜதத்தைக் கூறுதல் விருத் தமாம்.

அநிர்வசநீய ரஜதத்தின் உற்பத்தியிலோ பிரசித்த ரஜதத்தின் சாமக்கிரிவேண்டியதில்லை. தோஷத்தோடுகூடிய அவித்தையினுல் அதன் உற்பத்தி சம்பவிக்கின்றது. வியாவகாரிக ரஜ தமோ இரஜதத்தின் பிரசித்த சாமக்கிரியின்றிச் சம்பவியாது. சுத்திதேசத்தில் இரஜத்தின் பிர சித்த சாமக்கிரி இல்லையாகலின் சத்திய ரஜத்தின் உற்பத்தி சுத்திதேசத்திற் சம்பவியாது.

௨௨௭. சுத்திதேசத்தில் இரஜதத்தின் அவயவம் இருக்கின்றது.அதுவே சத்தியரஜதத் தின் சாமக்கிரியாம் என்று கூறுவானுயின்,

அவனே இதுகேட்பாம்:— க. இரஜதாவயவங்களுக்கு உற்பூத உருவமுளதா?
உ. அநுற்பூத உருவமுளதா?

க. உற்பூத உருவமெனின் இரஜதாவயவங்களின் பிரத்தியக்ஷம் இரஜதத்தின் உற்பத்திக்கு முன் உண்டாதல் வேண்டும்.

உ. அநுற்பூத உருவமெனின் அநுற்பூத உருவமுடைய அவயங்களினின்று இரஜதமும் அநுற்பூத உருவமுடையதாகும். இதனால் இரஜதத்தின் பிரத்தியக்ஷம் உண்டாகாது.

உஉஅ. யாண்டு ஒரு இரஜ்ஜுவில் பத்துப் புருஷர்களுக்கு ஒருவனுக்குத் தண்டத்தினதும், ஒருவனுக்கு மாலையினதும், ஒருவனுக்குச் சர்ப்பத்தினதும், அங்ஙனமே ஜலதாரையினதுமாக வேறுவேறு பாதார்த்தங்களின் பிரமம் உண்டாகின்றதோ, ஆண்டுச் சொற்ப ரஜ்ஜு தேசத்தில் இத்துணைப் பதார்த்தங்களின் அவயவம் சம்பவியாது. ஏனெனின் மூர்த்தத் திரவியங்கள் இடத்தைத் தடுக்கும். சித்தாந்தத்திலோ அநிர்வசநீய தண்டாதிக ளிருக்கின்றன.

அவை வியாவகாரிக தேசத்தைத் தடுக்கமாட்டா. அந்தத் தண்டமுதலியவற்றில் இடத்தைத் தடுத்தல் முதலிய பயனை அங்கீகரியாவிடின், தண்டமுதலிய வற்றைச் சத்தென்று கூறுதல் விருத்தமும் பயனின்றியதுமாம்.

உஉகூ. தண்டமுதலியவற்றின் பிரதீதி மாத்திரம் உண்டாகின்றது; அந்நியகாரியம் அவற்றினின்றும் உண்டாகிறதில்லை என்று கூறின் அநிர்வசநீயவாதம் சித்திக்கின்றது.

உநO. பிரமஸ்தலத்தில் சத்பதார்த்தத்தின் உற்பத்தியை அங்கீகரிக்கின் நெருப்போடு கூடிய ஊஷரபூமியில் (பாலை நிலத்தில்) ஜலப்பிரமம் உண்டாகியவிடத்து ஜலத்தினால்நெருப்புச் சாந்தமாதல்வேண்டும். பஞ்சின் மேரில் வைக்கப்பட்ட குன்றிமணிக் கொத்தில் அக்கினிப் பிரமம் உண்டாயின் ஆண்டுப் பஞ்சு தாகமாதல்வேண்டும். ஆதலால் அவயவமோ இடத்தைச் தடுத்தல் முதலியவற்றிற்கு ஏதுவன்று. அவயவியினால் ஒருகாரியமும் உண்டாகிறதில்லையென் றிவ்வாறு பதார்த்தத்தினைச் சத்தியமாகக் கூறுதலைக் கேட்டுப் புத்திமான்களுக்கு நகையுண்டாம். ஆதலால்

முற்றும் யுக்தி யின்றியதா யிருத்தலின் இப் பக்ஷம் பொருந்தாததாம்.

சத்கியாதியைக் காட்டுதல் பூர்வகமான
கண்டன மென்னும்
ஒன்பதாவது ரத்நம் முடிந்தது.

பத்தாவது ரத்நம்

௩. அப்பிரமாவிருத்தியின் பேதமான அசத்கியாதியைக் காட்டுதல்

பூர்வகமான கண்டனம் ௨௩௧-௨௩௪

௩௫. இருவகை அசத்கியாதி வாதத்தைச் சொல்லுதலோடு அசத் கியாதி வாதியை நோக்கிய வினு

௨௩௧-௨௩௨

௨௩௧. அசத்கியாதியினை இருவயையாக்கக் கொண்டிருக்கின்றனர்,

௧. ஒன்றொரு சுத்தியதிஷ்டானத்தில் அசத் திரஜதத்தின் பிரதீதி வடிவமாம்.

௨. மற்றையது அசத் திரஜதத்தன்மைச் சமவாயத்தின் பிரதீதி வடிவமாம்.

அவ்விரண்டும் அசங்தமாம் ஏனெனின்,

௨௩௨. அசத்கியாதியை அங்கீகரிக்கின் அவனை இது கேட்பாம்:- அசத்கியாதி என்னும் வாக்கியத்தில்,

௧. சுவரூபமின்மை அசத்தென்னும் சொல்லிற்குப் பொருளா?

௨. அல்லது அசத்தென்னும் சொல் லிற்குப் பொருள் அபாத்தியத்தின் விலக்ஷணமா?

௩௬. அசத்கியாதி வாதியின் கண்டனம்.

௨௩௩-௨௩௪

௨௩௩. ௧. அசத்தென்னும் சொல்லிற்குப் பொருள் சுவரூபமின்மையாம் என்று கூறின்,

"என்வாயில் நாக்கில்லை" என்னும் வாக்கியம் போல அசத்கியாதி வாதத்தின் அங்கீகாரம் நாணமின்றியதாம் ஏனெனின், சத்தையின் ஸ்பூர்த்தியி(விளக்கமி)ன்றியதனைச் சுவரூப மில்லாததென்பர். ஆதலால் "சத்தாஸ்பூர்த்தி சூநியமும் காணப்படுகின்றது" என்னும் அசத்கியாதி வாதத்தைக் கூறின் அவ்வாறு சித்திக்கின்றது. சத்தையின் ஸ்பூர்த்தியின்றியதன் தோற்றத்தைக் கூறுதல் விருத்தமாம்.

உ௱௪. உ. ஆதலால் அபாத்திய விலக்ஷணம் அசத்தென்னும் சொல்லிற்குப் பொருளெனக்கூறின்,

அபாத்தியத்தின் விலக்ஷணம் பாத்தியமாகின்றது. பாதமாதற்குறியதனைப் பாத்தியமென்பர். இவ்வாற்றால் பாதமாதற்குறியத்தின் உணர்ச்சி அசத்கியாதியெனப்படுகின்றதென்பது சித்தித்து அதுவே சித்தாந்தியின் மதமாம். ஏனெனின் அநிர்வசநீயக்கியாதி சித்தாந்தத்திலுளது. பாதயோக்கியமே அநிர்வசநீயமாகின்றது. இவ்வாற்றால் சித்தாந்தத்திற்கு விலக்ஷணமாக அசத்கியாதிவாதம் இருக்கின்றதென்று கூறுதல் சம்பவியாது.

அசத்கியாதியைக்காட்டுதல் பூர்வகமான
கண்டனமென்னும்

பத்தாவது ரநத்ம் முடிந்தது.

பதினோராவது ரத்நம்.

௪. அப்பிரமா விருத்தியின் பேதமான ஆத்மக்கியாதியைக் காட்டுதல் பூர்வக கண்டனம்

உ௱௫-உ௪0

௱௭. ஆத்மக்கியாதி வாதத்தின் அநுவாதபூர்வக கண்டனம்

உ௱௫-உ௱௮.

உ௱௫. அங்கனமே ஆத்மக்கியாதி வாதமும். அசங்கதமாம். ஏனெனின் விஞ்ஞானவாதியின் மதத்தில் ஆத்மக்கியாதியுளது. க்ஷணிகவிஞ்ஞானவடிவ புத்தியினை விஞ்ஞான வாதி ஆத்மா வென்பர். அவர் மதத்தில் பாகிய (வெளி) ரஜதமில்லை. ஆனால் விஞ்ஞான வடிவ

ஆத்மாவின் தர்மமாகிய ரஜதம் ஆந்தர (உள்) சத்தியமாம். அது தோஷபலத்தால் வெளியிடத்திற் றோற்றுதல் பிரமமாம். ஆதலால் இரஜதஞானத்தில் இரஜதகோசரத்தன்மை யம்சம் பிரமமன்று; ஆனால்இரஜதத்தின் பாகிய தேசத்திருத்தற் றன்மைத் தோற்ற அம்சத்தில் பிரமமாம். இரஜதத்தின் பாகியதேசத்தில் உற்பத்தியை அங்கீகரிக்கின் பாகியதேசத்தில்சத்திய ரஜதமோசம்பவியாது. அநிர்வசநீயமாகக் கொள்ளுதல்வேண்டும். அவ்வநிர்வசநீய வஸ்து உலகத்தில் அப்பிரசித்தமாம். இதனால் அப்பிரசித்த கற்பனையாகிய தோஷம் உண்டாகும். ஆதலால் ஆந்தரரஜதம் உற்பத்தியாகிறதென்று கொள்ளுதலில் ஒரு தோஷமுமில்லை. இதுவிஞ்ஞானவாதியின் அபிப்பிராயமாம்.

௨௩௬. இம்மதம் நலமுடைய தன்று. இரஜதம் ஆந்தரமா மென்னும் அநுபவம் ஒருவருக்கு மில்லை. பிரமஸ்தலத்திலேனும் யதார்த்த ஸ்தலத்திலேனும் இரஜத முதலியவற்றின் ஆந்தரத்தன்மை எப்பிரமாணத்தினாலும் சித்தியாது. சுக முதலியன ஆந்தரமும் இரஜதமுதலியன பாகியமுமாமென்னும் அநுபவம் எல்லோருக்கும் உண்டாகின்றது. இரஜ

தத்தினை ஆந்தரமெனக் கொள்ளின் அநுபவத்திற்கு விரோதமாகின்றது ஆந்தரத்தன்மைக்குச் சாதகமான பிரமாண யுக்திகளில்லை. ஆதலால் இரஜதமுதலிய பதார்த்தங்கள் சொப்பனமின்றி ஜாக்கிரத்தில் ஆந்தரமென்பது அப்பிரசித்தமாம். பாகிய சுபாவத்திற்குப் பிரமஸ்தலத்தில் ஆந்தரகற்பனை அப்பிரசித்த கற்பனையாம். ஆந்தரமாயின் "என்னிடத்து இரஜதம் யான் இரஜதம்" என்று தோற்றுதல்வேண்டும். "இது இரஜதம்" என்றிவ்வாறு இரஜதத்தின் பாகியப் பிரதீதி யுண்டாகலாகாது. ஆதலால் ஆந்தரரஜதம் சம்பவியாது; பாகியதேசத்தில் அதன் தோற்றமும் பொருந்தாது. ஆனால்,

௨௩௭. பாகிய தேசத்திலேயே அநிர்வசநீயரஜதம் உற்பத்தியாகின்றது என்னும் சித்தாந்தத்தின் கிரமமே நலமுடையதாம். அநிர்வசநீயவஸ்துவிற்கு அப்பிரசித்த கற்பனையாகிய தோஷம் சொல்லப்பட்டது. அதுவும் அஞ்ஞானத்தினால் சொல்லப்பட்டதாம். ஏனெனின்,

௨௩௮. அத்வைத வாதத்திற்கு இது முக்கிய சித்தாந்தமாம்:—

௧. சேதனம் சத்தியம்.

உ. அதனின் வேறாய யாவும் மித்தை.

அநிர்வசநீயத்தினை மித்தையென்பர். ஆதலால் சேதனத்திற்குப் பின்னமாகிய பதார்த்தத்தினைச் சத்தியமென்று கூறுதலிலேயே அப்பிரசித்த கற்பனை இருக்கின்றது. சேதனத்திற்கு வேறாகிய பதார்த்தங்களில் அநிர்வசநீயத் தன்மையோ அதிப்பிரசித்தமாம். யுக்தியினால் விசாரிக்கின் அப்போது எவ்வநாத்ம பதார்த்தத்தின் சுவரூபமும் சித்தியாது; ஆனால் தோற்றுகின்றது. ஆதலால் சகல அநாத்ம பதார்த்தங்களும் அநிர்வசநீயமாம். சித்தாந்தத்தில் அநிர்வசநீய பதார்த்தம் எதுவும் சத்தியமன்று; கந்தர்வ நகரம்போலச் சகலப் பிரபஞ்சமும் திருஷ்டநஷ்ட சுபாவமாம்.

௩-அ. அநிர்வசநீயக்கியாதியின் கிரம பூர்வகமாக அத்வைதவாதிக்கு அநிர்வசநீய பதார்த்தத்தின் பிரசித்தி ௨௩௧-௨௪0.

௨௩௧. சொப்பனத்தினும் ஜாக்கிர பதார்த்தத்திற்குச் சிறிதும் வேற்றுமையில்லை. சுத்திரஜதம் பிராதிபாஸிகமாம். காந்தையின்

கரமுதலியவற்றிலுள்ள இரஜதம் வியாவகாரிகமாம்.

இவ்வாற்றால் அநாத்ம பதார்த்தங்களில் மித்தியாத்தன்மை சத்தியத்தன்மைகளாகிய விலக்ஷணத்தன்மைகள் ஒன்றற்கொன்று சொல்லப்பட்டிருக்கின்றது. அது ஸ்தூலபுத்தியுடையவர்களுக்கு அத்வைத ஞானத்திற் பிரவேசித்தற்பொருட்டு அருந்ததி நியாயத்தாற் சொல்லப்பட் டிருக்கின்றது. ஸ்தூல புத்தியுடைய புருஷர்களுக்கு முதலிலேயே முக்கிய சித்தாந்தத்தின் கிரமத்தைக்கூறின் அற்புத அர்த்தத்தைக் கேட்டு அநாத்ம சத்தியத்தன்மைப் பாவனையுடைய புருஷன் சாஸ்திரத்திற்கு விமுகனாய்ப் புருஷார்த்தத்தினின்றும் பிரஷ்டனாய் விடுவான் இதனாற்றான்,

௧-௨, அநாத்ம பதார்த்தங்களுக்கு வியாவகாரிகப் பிராதிபாஸிக பேதத்தால் இருவகைச் சத்தை சொல்லப்பட்டது.

௩. சேதனத்திற்குப் பாரமார்த்திக சத்தை சொல்லப்பட்டது.

௨௪0 சேதனத்தினும் பிரபஞ்சத்திற்குக் குறைந்த சத்தை புத்தியில் ஆரூடமாகச் சகல

அநாத்ம பதார்த்தங்களையும் சொப்பனமுதலிய திருஷ்டாந்தத்தால் பிராதிபாஸிகமென்றறிந்து நிஷேத வாக்கியங்களால் சகல அநாத்மாக்களையும் சத்தாஸ்பூர்த்தி சூனியமாகக் கண்டுகொள்க. இதனாற்றான் சத்தாபேதம் சொல்லப்பட்டிருக்கின்றது. அநாத்மபதார்த்தங்களொன்றற்கொன்றின் சத்தாபேதத்தில் அத்வைதசாஸ்திரத்திற்குத் தாற்பரியமில்லை. ஆதலால் அத்வைதவாதிக்கு அநிர்வசநீய பதார்த்தம் அப்பிரஸித்தமாமென்று கூறுதல் விருத்தமாம். இவ்வாற்றால் ஆத்மக்கியாதிவாதியின்மதம் அசங்கதமாம்

ஆத்மாக்கியாதியைக் காட்டுதல் பூர்வக கண்டனமென்னும்.

பதினோராவது ரத்நம் முடிந்தது.

பன்னிரண்டாவது ரத்நம்.

ரு. அப்பிரமா விருத்தியின் பேதமான அந்நியதாக்கியாதியைக் காட்டுதல் பூர்வகமான அதன் கண்டனம் உசக - உசஉ

ருக. அந்நியதாக்கியாதி வாதத்தைக் கூறுதலோடு அதன் கண்டனம்.

உசக-உசஉ.

உசக. அங்ஙனமே நையாயிகர் அந்நியதாக்கியாதியைக் கொண்டிருக்கின்றனர். அதன் கிரமம் இதுவாம்:— தோஷத்தோடு கூடிய நேத்திரத்தின் சையோகம் இரஜ்ஜுவோடு எப்போது உண்டாகின்றதோ, அப்போது இரஜ்ஜுத் தன்மைத் தர்மத்தோடு நேத்திரத்திற்குச் சையுக்தசமவாய சம்பந்தமோ இருக்கின்றது. ஆனால் தோஷத்தின் பலத்தால் இரஜ்ஜுத்தன்மை தோற்றுகிறதில்லை; இரஜ்ஜுவில் சர்ப்பத் தன்மை தோற்றுகின்றது. அந்தச் சர்ப்பத்தன்மையின் ஞானம் நேத்திர ஜந்நியமாம். அதில் முன்கண்ட சர்ப்பத்தின் உற்புத்த சம்ஸ்காரமும் சககாரியாம். இம்மதத்தில் தர்மியாகிய சர்ப்பம் எதுவோ அதன் அத்தியாச மில்லை. ஆனால் சர்ப்பத்தன்மை வடிவ தர்மமாத்திரத்தின் அத்தியாச மிருக்கின்றது. இது நவீன நையாயிகர்களது மதம்.

உசஉ. அந்த நவீன நையாயிகர்களது மதம் நலமுடையதன்று. ஏனெனின் நேத்திரத்தினால் மறைப்போடு கூடிய சர்ப்பத்தின் ஞானம் ரஜ்ஜுவிற் சம்பவியாது. இரஜ்ஜுவின் சமீபத்திற்

சர்ப்பமுளதாயின், இரண்டனேடும் நேத்திரத்திற்குச் சையோக முண்டாய்ச் சர்ப்பத்தின் கண்ணுள்ள சர்ப்பத்தன்மையின் நேத்திரஜந்நியப் பிரம உணர்ச்சி இரஜ்ஜுவிற் சம்பவிக்கும். யாண்டு இரஜ்ஜுவின் சமீபத்தில் சர்ப்பமில்லையோ, ஆண்டு இரஜ்ஜுவில் சர்ப்பத்தன்மைப் பிரமம் நேத்திர ஜந்நியமெனல் சம்பவியாது. ஈண்டு எதனுல் சர்ப்பவியக்தியோடு நேத்திர சையோகத்தின் அபாவத்தால் சர்ப்பத்தன்மையோடு நேத்திர சையுக்த சமவாயத்தின் அபாவமிருக்கின்றதோ, அதனுல் சர்ப்பத்தன்மை விசிஷ்ட ரஜ்ஜுவின் ஞானம் சம்பவியாது. இவ்வாற்ருல் அந்நியதாக்கியாதி அசங்கதமாம்.

அந்நியதாக்கியாதியைக் காட்டுதல் பூர்வக
அதன் கண்டன மென்னும்
பன்னிரன்டாவது ரத்நம் முடிந்தது.

பதின்மூன்ருவது ரத்நம்.

௬௯. அப்பிரமாவிருத்தியின் பேதமான அக்கியாதியைக காட்டுதலோடு அதன் கண்டனம்

உசரு-உசஅ.

௭0. அக்கியாதி வாதத்தின் அநுவாத பூர்வககண்டம் உசரு-உசச

உசரு. சாங்கியப் பிரபாகரர் மதத்தில் அக்கியாதியை அங்கீகரித்திருக்கின்றனர். அதன் றன்மை:-இதுவாம் யாண்டுச் சுத்தியோடும் அங்ஙனமேஇரஜ்ஜுவோடும் தோஷத்தோடுகூடிய நேத்திரத்திற்குச் சம்பந்த முண்டாகின்றதோ, ஆண்டுச் சுத்தியின் விசேஷவடிவமும் அங்ஙனமே இரஜ்ஜுவின் விசேஷ வடிவமும் தோற்றுகிறதில்லை; ஆனுல் சாமாநியவடிவ இதந்தை தோற்றுகின்றது. சுத்தியோடு நேத்திரத்தின் சம்பந்த ஜந்நிய ஞானமுண்டாக ரஜதத்தின் சம்ஸ்காரம்உற்புத்தமாய்ச் சுத்தியின் சாமாநிய ஞானத்திற்குப் பிற்கணத்தில் இரஜதத்தின் ஸ்மிருதி உண்டாகின்றது. அங்ஙனமே இரஜ்ஜுவின் சாமாநிய ஞானத்திற்குப் பிற்கணத்தில் சர்ப்பத்தின் ஸ்மிருதியுண்டாகின்றது. சகல ஸ்மிருதி ஞானங்களிலும் பதார்த்தத்தின் சத்தையும் விளங்குகின்றது. அங்ஙனமாயினும் தோஷத்தோடுகூடிய நேத்திரத்தின் சம்பந்தத்தால் சம்ஸ்காரம் உற்புத்தமாகுமிடத்துத் தோஷத்தின் மகாத்மியத்தால் அதுவெனுந் தன்மை அம்சத்தின் பிரமோஷ

முண்டாகின்றது. ஆதலால் பிரமுஷ்ட அது வெனுந் தன்மையின் ஸ்மிருதி யுண்டாகின்றது. பிரமுஷ்ட (லோபமாயிருக்கின்ற) அதுவெனுந் தன்மை எதற் குளதோ, அது பிரமுஷ்ட அது வெனுந்தன்மைச் சொல்லிற்குப் பொருளாம். இவ்வாற்றால் "இது சர்ப்பம்" என்றல் முதலிய ஸ்தலங்களில் இரண்டு ஞான முண்டு.

க. ஆண்டுச் சுத்திரஜ்ஜுக்களின் சாமாநிய இதுவெனும் வடிவத்தின் பிரத்தியக்ஷ ஞானம் யதார்த்தமாம்.

உ. இரஜதத்தின் ஸ்மிருதி ஞானமும் அங் ஙனமே சர்ப்பத்தின் ஸ்மிருதிஞான மும் யதார்த்தமாம்.

இவ்வாற்றால் பிரமஞானம் அப்பிரசித்தமாம்.

எந்தப் பதார்த்தத்தில் இஷ்டசாதனத்தன் மையின் ஞானம் உண்டாகின்றதோ அதிற் பிர விருத்தி யுண்டாகின்றது. எதில் அநிஷ்ட சாதனத்தன்மையின் ஞானமுண்டாகின்றதோ, அதினின்றும் நிவருத்தியுண்டாகின்றது. இம் மதத்தில் சுத்தியில் இஷ்டசாதனத்தன்மை ஞானமும் இரஜ்ஜுவில் அநிஷ்ட சாதனத்தன் மையின் ஞானமும் கூறின் பிரமத்தின் அங்கீகார முண்டாம் ஆதலால் இஷ்டசாதனத்தன்மை ஞானம் அநிஷ்ட சாதனத்தன்மை ஞானம்

என்பவற்றின் அபாவத்தால் சுத்தியில் இரஜத விருப்புடையோனுக்குப் பிரவிருத்தியும் இரஜ்ஜு வில் நிவிருத்தியும் உண்டாகலாகாது; ஆனல் உண் டாகின்றது. ஆதலால் பிரம ஞானம் வேண்டிய தாம்.

அங்ஙனமாயினும்,

க. எப்பதார்த்தத்தில் புருஷனுக்குப் பிர விருத்தி யுண்டாகின்றதோ அப்பதார் த்தத்தின் சாமாநிய வடிவப் பிரத்தி யக்ஷ ஞானமும்,

உ. இஷ்ட பதார்த்தத்தின் ஸ்மிருதியும்,

ங. ஸ்மிருதியின் விஷபத்தினும் முன்னி டத்திருக்கும் பதார்த்தத்திற்குப் பேத ஞானமின்மையும்,

ச. அங்ஙனமே ஸ்மிருதி ஞானத்திற்கு முன்னிடத் திருப்பதின் ஞானத்தி னும் பேத ஞானமின்மையுமாகிய

இத்துணைச் சாமக்கிரிகள் பிரவிருத்திக் குண்டு.

இரஜ்ஜுவில் சர்ப்பஞானத்தால் எந்த நிவி ருத்தி உண்டாகின்றதோ, அதுவும் விமுகப்பிர விருத்தியேயாம். ஆதலால் பிரமஞானமின்றிப் பிரவிருத்தி சம்பவிக்கின்றது. இது அக்கியாதி வாதியின் அபிப்பிராயம். ஞானமிரண்டின்

விவேகமின்மையும் உபயவிஷயங்களின் விவேகமின்மையும் அக்கியாதி யென்னும் சொல்லிற்குப் பாரிபாஷிகப் பொருளாம்.

உ௪௪. இவ்வக்கியாதி வாதியின் மதமும் நலமுடையதன்று. ஏனெனின்,

க. சுத்தியில் இரஜதப் பிரமத்தினால் பிரவிருத்தித்த புருடனுக்கு இரஜதத்தின் லாப முண்டாகாவிடின், அப்போது புருஷன் "இரஜதமின்றிய விடத்தில் இரஜதஞானத்தினால் எனக்கு நிஷ்பலப் பிரவிருத்தி (பயினில் முயற்சி) உண்டாயிற்று." என்று கூறுகின்றான். இவ்வாற்றால் பிரம ஞானம் அநுபவசித்தமாம். அதற்கு லோபம் சம்பவியாது.

உ. மருபூமியில் (பாலைநிலத்தில்) ஜலத்திற்குப் பாத முண்டாயின், அப்போது "மருபூமியில் மித்தையாகிய ஜலத்தின் தோற்றம் எனக்குண்டாயிற்று" என்று கூறுகின்றான். இந்தப் பாதத்தினாலும் மித்தியா ஜலமும் அதன் ஞானமு முண்டாகின்றன.

அக்கியாதிவாதியின் கிரமமாகவோ "இரஜதத்தின் ஸ்மிருதிக்கும் சுத்தி ஞானத்திற்கும் பேதம் கொள்ளப்படாமையால் எனக்குச் சுத்தியில் பிரவிருத்தி யுண்டாயிற்று" என்று பாதமுண்டாதல்வேண்டும். "மருபூமியின் பிரத்தியக்ஷத்தினாலும் ஜலத்தின் ஸ்மிருதியினாலும் எனக்குப் பிரவிருத்தி யுண்டாயிற்று" என்று பாதமுண்டாதல்வேண்டும்.

விஷயமும் அங்ஙனமே பிரமஞானமுமாகிய இரண்டையும் விட்டு அநேகவிதமான விருத்த கற்பனை அக்கியாதிவாதத்திலுளது. அங்ஙனமன்றே, நேத்திர சையோகமுண்டாய்த் தோஷத்தின் மகாத்மியத்தால் சுத்தியின் விசேஷரூப ஞானம் உண்டாகிறதில்லையென்னும் கற்பனையும், அங்ஙனமே அதுவெனுந்தன்மை யம்சத்தின் பிரமோஷத்தால் ஸ்மிருதி கற்பனையும், விஷயங்களின் பேத மிருக்கின்றது தோற்றுகிறதில்லையென்பதும், அங்ஙனமே ஞானங்களுக்குப் பேதமிருக்கின்றது ஒருபோதும் தோற்றுகிறதில்லையென்பதுமாகிய இவை முதலிய சகல கற்பனைகளும் விருத்தமாம். இரஜதத்தின் பிரதீதிகாலத்தில் எதிர்ப்பட்ட விடத்தில் இரஜதம் தோற்றுகின்றது. ஆதலால் அக்கியாதிவாதமும் அநுபவ விருத்தமாம்.

இவ்வாற்ருல் கியாதிகளின் நிரூபணம் சொல்லப் பட்டது.

சக. தர்க்கப்பிரமத்தின் நிர்ணயத்தோடு கியாதி நிரூபணமும் கண்டனத்தின் உபசங்காரத்தோடு பதினுன்கு ஞானங்களைக் கூறுதலும் உசரு-உசஅ

உசரு. அநிர்வசநீயக்கியாதியின் மண்டனமும் அந்நியதாக்கியாதிகளின் பிரதிபாதன கண்டனங்களும் பிறநூல்களில் விஸ்தாரமாக எழுதப் பட்டிருக்கின்றன. அங்ஙனமாயினும்

அந்தயுக்திகள் கடினமாயிருத்தலின் சொற்பமதியுடைய ஆஸ்திக அதிகாரிகளுக்கு உபயோகமில்லாதனவென் றறிந்து ஈண்டுச் சுருக்கமாக அதன் தன்மைமாத்திரம் அறிவிக்கப்பட்டது.

உசசு. இவ்வாறு சம்சயமும் நிச்சயமுமாகிய பிரமம் சொல்லப்பட்டது. அங்ஙனமே மூன்ருவது தர்க்கமும் பிரமமேயாம். ஏனெனின் வியாப்பியத்தை ஆரோபித்தலால் வியாபகத்தை ஆரோபித்தல் தர்க்க மெனப்படுகின்றது. எங்ஙனம்: "வந்நி இல்லையாயின் அப்போது தூமமும் இராது" என்னும் ஞானம் தூம வந்நிகளோடு

கூடிய தேசத்தி லுண்டாம். அது தர்க்கமாம்; ஆண்டு வந்நியின் அபாவம் வியாப்பியமாம். தூமத்தின் அபாவம் வியாபகமாம். வந்நியின் அபாவத்தை ஆரோபித்தலால் தூபாடாவத்தின் ஆரோபம் உண்டாகின்றது. வந்நி தூமங்களிருக்க வந்நியபாவத்தின் ஞானமும் தூமாபாவத்தின் ஞானமும் உளவாகலின் பிரமமாம். பாதமுளதாகப் பிரமம் உளதாயின் அதனை ஆரோபமென்பர். இவ்வாற்ருல் மூன்ருவது தர்க்கமும் பிரமமாம்.

உசஎ. தர்க்கஞானமும் பிரம நிச்சயித்தி லடங்கியதாம். அங்ஙனமாயினும், ஈண்டுத் தூம வந்நிகளின் சத்பாவமி (இருப்பி) ருத்தலால் அவற்றின் அபாவத்தினது பாதமிருக்கின்றது. அது யிருக்கும்போது புருஷனது இச்சையினுல் வந்நியபாவ தூமாபாவங்களின் பிரமஞானம் உண்டாகின்றது ஆதலால் ஆரோபவடிவ விலக்ஷணத் தன்மை யிருத்தலின் வேருகச் சொல்லப்பட்டது.

உசஅ. இவ்வாறு பிரமை அப்பிரமைகளின் பேதத்தால் விருத்திஞானம் பதின்மூன்ரும். விருத்திஞானங்களின் பிரசித்தபேதம் பதின்மூன்றேயாம் அவாந்தரபேதம் அநந்தமாம்.

அங்ஙனமாயினும், சொப்பனத்தின் பிராதி பாஸிக இரஜ்ஜு முதலியவற்றா லவச்சின்ன சேதனத்தில் அத்தியஸ்த சர்ப்பமுதலியவற்றின் ஞானம் சேர்ந்து பதினான்கு ஞானமாம். இவ்வாற்றால் ரத்நமாக உவமிக்கப்பட்ட பதினான்கு விருத்தி ஞானங்களின் சுவரூபமும் காரணமும் இலக்ஷண பூர்வகமாகச் சுருக்கமாய் நிரூபிக்கப் பட்டன.

அக்கியாதியைக் காட்டுதல் பூர்வக கண்டனமென்னும்.

பதின்மூன்றாவது ரத்நம் முடிந்தது.

பதினான்காவது ரத்நம்.

விருத்திபல நிரூபணம் உசகூ-உருஎ.

சஉ. அவஸ்தை மூன்றன் நிரூபணம்

உசகூ – உருரு.

உசகூ. முற்கூறிய விருத்திவடிவ ஞானத்தின் பிரயோஜனம் இதுவாம்:—

க. ஜீவனுக்கு அவஸ்தாத்திரயத்தின் சம்பந்தம் விருத்தியினால் உண்டாகின்றது.
உ. புருஷார்த்தப் பிராப்தியும் விருத்தியினால் உண்டாகின்றது.

ஆதலால்,
க. சம்சாரப்பிராப்திக்கு ஏது விருத்தியாம்.
உ. மோக்ஷப்பிராப்திக்கு ஏதுவும் விருத்தியாம். ஏனெனின்,

உருo. அவஸ்தாத்திரயத்தின் சம்பந்தத்தினால் ஜீவனுக்குச் சம்சாரமிருக்கின்றது. அவஸ்தையென்னும் சொல் காலத்தின் வாசகமாம்.

க. சொப்பனாவஸ்தைக்கும் சுழுத்தியவஸ்தைக்கும் வேறான இந்திரிய ஜந்நிய ஞானத்திற்கும் இந்திரிய ஜந்நிய ஞானத்தின் சம்ஸ்காரத்திற்கும் ஆதாரகாலம் எதுவோ அதுஜாக்கிராவஸ்தை யெனப்படும்.

சுகமுதலியவற்றின் ஞானகாலத்திலும் உதாசீனகாலத்திலும் இந்திரிய ஜந்நியஞானம் இல்லையாயினும் அதன் சம்ஸ்காரமிருக்கின்றது. இந்திரிய ஜந்நியஞானத்தின் சம்ஸ்காரம் சொப்பனா

வஸ்தை சுழுத்தியவஸ்தைகளிலு முண்டு. சொப்பனுவஸ்தை சுழுத்தியவஸ்தைகளின் வேருய காலம் சொல்லப்பட்டது.

இவ்வாற்ருல் "ஜாக்கிராவஸ்தை" யென்னும் வியவகாரம் இந்திரிய ஜந்நிய ஞானத்தின் அதீனமாம். அந்த இந்திரியஜந்நிய ஞானம் அந்தக்கரணத்தின் விருத்திவடிவமாம். அந்தக்கரண விருத்திக்கு மதபேதத்தால் சிலர் ஆவரண விருத்தியைப் பிரயோஜனமெனக் கொண்டிருக்கின்றனர். முற்கூறிய பிரயோஜனமுடைய இந்திரிய ஜந்நிய அந்தக்கரணத்தின் விருத்தி ஜாக்கிராவஸ்தையில் உண்டாகின்றது.

உ௫க. உ. இந்திரியத்திருற் பிறவாத விஷய கோசர அந்தக்கரணத்தின் அபரோக்ஷவிருத்தியாதோ அதன் அவஸ்தையினைச் சொப்பனுவஸ்தை யென்பர். சொப்பனத்தில் ஞேயமும் ஞானமும் அந்தக்கரணத்தின் பரிணுமமாம்.

உ௫உ ௩. சுககோசரமும் அவித்தியாகோசரமுமாகிய அஞ்ஞானத்தின் சாக்ஷாத்பரிணும வடிவ விருத்தியின் அவஸ்தையினைச் சுழுத்தியவஸ்தை யென்பர். சுழுத்தியில் அவித்

தையின் விருத்தி சுககோசரமும் அஞ்ஞான கோசரமுமாகின்றது.

உ௫௩. அவித்தியாகோசர விருத்தி ஜாக்கிரத்திலும் "யான் அறியவில்லை" என்று இவ்வாறு உண்டாகின்றது. அங்ஙனமாயினும், அந்த விருத்தி அந்தக்கரணத்தினதாம்; அவித்தையினதன்று. அங்ஙனமே பிராதிபாஸிக ரஜதாகார விருத்தி ஜாக்கிரத்தில் அவித்தையின் பரிணுமமாம்; அது அவித்தியா கோசரமன்று. அங்ஙனமே சுகாகாரவிருத்தி ஜாக்கிரத்திலிருக்கின்றது. அது அவித்தையின் பரிணுமமன்று.

உ௫௪. இவ்வாற்ருல் கூறிய சுழுத்தியில் அவித்தையின் விருத்தியில் ஆரூடமான சாக்ஷி அவித்தையினைப் பிரகாசிக்கின்றது; சுவரூப சுகத்தினையும் பிரகாசிக்கின்றது. சுழுத்தியவஸ்தையில் சுகாகார அவித்தையின் பரிணுமம் எவ்வஞ்ஞானம் சத்தினதா யிருக்கின்றதோ, அவ்வஞ்ஞானம்சத்தில் அப்புருஷனது அந்தக்கரணம் ஒடுங்குகின்றது. ஜாக்கிரகாலத்தில் அவ்வஞ்ஞானம்சத்தின் பரிணுமம் அந்தக்கரணமாகின்றது. ஆதலால் அஞ்ஞானத்தின் விருத்தியினுல் அநுபவிக்கப்பட்ட சுகத்தின் ஸ்மிருதி ஜாக்

கிரத்தில் உண்டாகின்றது. உபாதான காரணத் திற்கும் காரியத்திற்கும் பேதமில்லாதிருத்தலின் அநுபவத்திற்கும் ஸ்மரணத்திற்கும் வியதிகரணத்தன்மை (வேற்று நிலைக்களத்திருத்தற்றன்மை) யில்லை.

௨௫௫. இவ்வாறு மூன்று அவஸ்தைகள் உண்டு. மரணத்திற்கும் மூர்ச்சைக்கும் சிலர் சுழுத்தியில் அடக்கங் கூறுவர்; சிலர் வேறெனக் கூறுவர். இவ்வவஸ்தா பேதமும் விருத்தியின் அதீனமாம். ஜாக்கிரசொப்பனங்களிலோ அந்தக்கரணத்தின் விருத்தியுளது.

௧. ஜாக்கிரத்தில் இந்திரியஜந்நிய அந்தக்கரணத்தின் விருத்தியுளது.

௨. சொப்பனத்தில் இந்திரிய அஜந்நிய அந்தக்கரணத்தின் விருத்தியுளது.

௩. சுழுத்தியில் அஞ்ஞானத்தின் விருத்தியுளது.

௪௩. விருத்தியின் பிரயோஜனத்தைக் கூறுதல். ௨௫௬-௨௫௭.

௨௫௬.

௧. அவஸ்தையின் அபிமானமே பந்தமாம் அபிமானமென்றும் பிரமஞானத்தைக் கூறுவர். அதுவும் விருத்தி விசேஷமாம். ஆதலால் விருத்தியினலாகிய பந்தமே சம்ஸாரமாம்.

௨. வேதாந்த வாக்கியத்தினல் "யான் பிரஹ்ம" மென்னும் அந்தக்காணத் தின் விருத்தியுண்டாய் அதனல் பிர பஞ்சத்தோடு அஞ்ஞானத்தின் நிவிரு த்தி உண்டாகின்றது. அதுவே மோக்ஷமாம். ஆதலால்.

௧. விருத்திக்கு சம்ஸாரதசையில் வியவ காரசித்தி பிரயோஜனமாம்.

௨. விருத்தியின் பரமப்பிரயோஜனம் மோக்ஷமாம்.

௨௫௭. கற்பிதத்தின் நிவிருத்தி அதிஷ்டான வடிவமாம். ஆதலால் சம்ஸார நிவிருத்தி மோக்ஷமாம். இவ்வாறு கூறுதலால் பிரஹ்மவடிவம் மோக்ஷமாமென்பது சித்திக்கின்றது அந்த

நிவருத்தியின் அதிஷ்டானவடிவப் பிரஹ்மம் ஞாதத்தன்மை விசிஷ்டமுமன்று; ஞாதத்தன்மை உபகிதமுமன்று. ஆனுல் ஞாதத்தன்மை வடிவ உபலக்ஷணத்தினுல் லக்ஷிதமாம் ஆதலால் அந்த நிவிருத்தியும் ஞாதத்தன்மை உபலக்ஷித அதிஷ்டானமாம்.

இவ்வாறு சுருக்கமாக விருத்திஞானத்தின் பிரயோஜனம் நிரூபிக்கப்பட்டது.

விருத்திபல நிரூபணமென்னும்
பதினுன்காவது ரத்நம் முடிந்தது.

விருத்திரத்நாவலி

முற்றிற்று.

